# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 16 கார்த்திகை 26ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 12 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# கூட்டமைப்பின் பட்டியலில் முஸ்லிம்கள் ஐம்பது பேர்

## 32 வட்டாரங்களில் நிறுத்தப்படுவர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பட்டியலில் சுமார் 50 வரையான முஸ்லிம்களுக்கும் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேச சபை உட்பட வடக்கு மாகாணத்தில் உள்ள பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இந்த 50 க்கும் குறையாத முஸ்லிம் வேட்பாளர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் களமிறங்கவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

வடக்கு மாகாணத்தில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட 32 வட்டாரங்கள் உள்ளன. அந்த வட்டாரங்களில் முஸ்லிம் வேட்பாளர்களையே நிறுத்துவது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபை, வவுனியா நகர சபை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்றுப் பிரதேச சபை உள்ளிட்ட பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களில் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. >> 25

### யாழ்ப்பாணத்தில் 2ஆவது சுயேச்சை களத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இரண்டாவது சுயேச்சைக் குழு நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப் பணம் செலுத்தி வருகின்றன.

யாழ்ப்பாணத்தில், சங்கானை பிரதேச சபையில் போட்டியிடுவதற்கு சுயேச்சைக்குழு கட்டுப் பணம் செலுத்தியிருந்தது. இந்த நிலையில் வல்வெட்டித்துறை நகர சபையில் போட்டியிடுவதற்கு சுயேச்சைக் குழு நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தியுள்ளது. மேலும், சாவகச்சேரி நகர சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஐக்கிய சோசலிசக் கட்சியும் நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தியது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் >> 25

### முதல் முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 12

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பிலான முதலாவது தேர்தல் முறைப்பாடு பொலிஸாருக்கு நேற்றுப் பதிவாகியுள்ளது. ஆரச்சிகட்டுவ பொலிஸ் பிரிவில் இந்த முறைப்பாடு பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி ருவன் குணசேகர தெரிவித்தார்.

பெயர் பதாகை ஒன்றுக்கு சேதம் விளைவித் >> 25

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான

## வேட்புமனுத் தாக்கல் 93 சபைகளில் ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 12

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான முதற் கட்ட வேட்புமனுத் தாக்கல் நேற்று ஆரம்பமாகியது. இது எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை இடம்பெறவுள்ளது. இந்தக் காலப் பகுதியில் தேர்தல் கடமையில் 10 ஆயிரம் பொலிஸாரை ஈடுபடுத்தியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் சட்டத்தரணி ருவன் குணசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரி >> 25

## சங்கானை சபை மீண்டும் தமிழ் அரசின் கட்டுக்குள்

யாழ்ப்பாணம், டிசெ. 12

சங்கானைப் பிரதேச சபையின் தவிசாளர் பதவிக்கு நான்கு ஆண்டுகளும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த ஒருவரே நியமிக்கப்படவுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனப் பங்கீடு தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற பேச்சுக்களில், யாழ்ப்பாணத்தில் புளொட் அமைப்பு போட்டியிடும் சபைகள் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கவில்லை. நேற்றுமுன்தினம் நடைபெற்ற கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, சுன்னாகம் பிரதேச சபை புளொட் அமைப்புக்கு வழங்கப்பட்டது. மானிப்பாய் பிரதேச சபையில் முதல் இரண்டு ஆண்டுகள் தமிழ் அரசுக் கட்சியும், அடுத்த இரண்டு ஆண்டுகள் >> 25

### பாடசாலை மாணவி வீட்டில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

ஜி.சி.ஈ. உயர்தரத்தில் பயிலும் மாணவி ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் கொண்டுசெல்லும் வழியில் அவர் உயிரிழந்துவிட்டார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த ம.தர்சிகா (வயது - 18) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

சண்டிலிப்பாயிலுள்ள பாடசாலை ஒன்றில் இவர் கற்கிறார். பதின்ம வயதுடைய இவரது இறப்புக்கான காரணம் அவருக்கும் >> 25

## கடும் சவாலுக்கு மத்தியில் வடக்குக்கு ரயில் சேவை

### பணி முடக்கத்தையும் மீறி மூத்த அதிகாரி துணிச்சல்



யாழ்ப்பாணம், டிசெ. 12

தொடருந்துப் பணியாளர்களின் பணிப் புறக்கணிப்புக்கு மத்தியிலும் யாழ்ப்பாணம் கொழும்பு சேவையில் ஈடுபடும் குளிரூட்டப்பட்ட தொடருந்து கடும் சவாலுக்கு மத்தியிலும் நேற்றுப் பணியில் ஈடுபட்டது. இன்றும் ஈடுபடும் என்று தெரிவிக்கப்பட்டது.

தொடருந்துத் திணைக்களத் தின் மூத்த அதிகாரி ஒருவரே தொடருந்து சாரதி ஒருவருடன் சேர்ந்து துணிந்து இந்தச் சேவையை நடத்துகிறார். போக் >> 25

## ஓ.எல். மாணவர்களுக்கு அமைச்சர் நேற்று வாழ்த்து

கொழும்பு, டிசெ. 12

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரும் சித்தியடைந்து எதிர்காலத்தை வெற்றிகொள்ள வேண்டும் என்று கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் வாழ்த்தியுள்ளார்.

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை இன்று ஆரம்பமாகவுள்ளது. இது தொடர்பில் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

இம்முறை 5ஆயிரத்து 116 பரீட்சை மத்திய நிலையங்களில் 6 லட்சத்து 88 ஆயிரத்து 573 விண்ணப்பதாரிகள் தோற்றவுள்ளனர். பரீட்சை சட்டதிட்டங்க >> 25

### வாழ்த்துகிறோம்




**இன்று ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை எழுதும் மாணவ, மாணவிகள் இலட்சியத்தில் வென்றிட உதயன் உங்களை மனதார வாழ்த்துகின்றான்...**

## ரயில் ஊழியர் போராட்டத்தால் பயணிகள் கடும் திண்டாட்டம்

கொழும்பு, டிசெ. 12

தொடருந்து தொழிற் சங்கங்களின் போராட்டம் இன்று ஏழாவது நாளாகவும் தொடரும் என்று பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் நேற்று அறிவித்தனர்.

போராட்டம் தொடர்பிலான கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. இதன்போதே போராட்டத்தைத் தொடர்வதற்கு முடிவெடுக்கப்பட்டது என்று அவர்கள் தெரிவித்தனர்.

தொடருந்து சாரதி உதவியாளர்களின் நியமனத்தில் எழுந்துள்ள சர்ச்சை, சம்பளப் பிரச்சினை உட்பட சில விடயங்களை அடிப்படையாகக்கொண்டு தொடருந்து தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றன. >> 25

### முச்சந்தி முரளி



கொஞ்ச நாள்
போனா
நடு வீதியில
குடும்பமும்
நடத்துவினம்
போலக் கிடக்கு!

யானைக் கூட்டுக்குள் குழப்பம்!

## ஆசனப்பங்கீட்டில் கஞ்சத்தனம் முற்போக்குக் கூட்டணி தனிவழி

கொழும்பு, டிசெ. 12

ஆசனப்பங்கீடு உட்பட தேர்தல் சார்ந்த விடயங்களில் ஐக்கிய தேசியக் கட்சி தன்னிச்சையாகவும், விட்டுக்கொடுப்பும் இன்றி செயற்படுவதால், தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துப் போட்டியிடுவது சம்பந்தமாக தீவிரமாக பரிசீலித்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆசனப்பங்கீட்டில் நுவரெலியா மாவட்டம் மாத்திரமே திருப்தியளிக்கும் வகையில் உள்ளது. ஏனைய தொகுதிகளுக்கான ஒதுக்கீட்டில் தமிழ் முற்போக்குக் கூட்டணிக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று கூட்டணியின் தரப்பிலிருந்து அறியமுடிகிறது. இதன் காரணமாகவே >> 25

## நடு வீதியில் கேக் வெட்டிய 6 பேர் பொலிஸாரால் கைது

### பெரிய கத்தி வைத்திருந்தனராம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

நடுவீதியில் வைத்துக் கேக் வெட்டிப் பிறந்தநாள் கொண்டாடியதாகக்கூறி 6 பேரைப் பொலிஸார் நேற்றிரவு அள்ளிச்சென்றனர். அவர்கள் கேக் வெட்டுவதற்கு வைத்திருந்து கத்தியின் அளவும் அதற்குக் காரணம். கேக் வெட்டுவதற்கு என்று வைத்திருந்த கத்தி வாள்வெட்டுக்காரர் பயன்படுத்துவது போன்ற அளவில் பெரியதாக இருந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் கொக்குவிலில் நேற்றிரவு இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர்கள் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

“வீதி சுற்றுக்காவலில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகப்படும்படியாக 6 பேரும் நின்றிருந்தனர். அவர்கள் போக்குவரத்தைத் தடை செய்யும் >> 25



யாழ்ப்பாணத்தில் மட்டும் நேற்றுத் திடீரெனக் கடும் மழை பெய்தது. சுமார் ஒரு மணித்தியாலம் மழை நீடித்ததுடன் சில பகுதிகள் நீர் தேங்கியிருந்தது எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற,ரி4,8)

## காரிலிருந்து கேரள கஞ்சா நேற்று மீட்பு

மன்னார்,டிசெ.12
75 இலட்சம் ரூபா பெறுமதியான கேரளக் கஞ்சாவுடன் ஒருவரை நேற்றுப் பொலிஸார் கைதுசெய்தனர்.
தொண்டிப் பகுதியைச் சேர்ந்த அலி என்பவரே. இவ்வாறு கைதுசெய்யப் பட்டார்.
கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து, ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் மாவட்ட சிறப்புப் பிரிவு பொலிஸ் பிரிவினர் தீவிர சோத னையில் ஈடுபட்டனர்.
இதன்போதே மண்டபம் அருகே பிரப்பன்வலசைக் கடற்கரைப் பகுதியை நோக்கி வேகமாக வந்த காரை நிறுத்துமாறு பொலிஸார் சமிக்ஞை காட்டியும் கார் நிற்காமல் சென்றதையடுத்து, பொலிஸார் விரட்டிச் சென்று காரை மடக்கிப் பிடித்தனர்.
காரில் இருந்தவர்களில் ஒருவரை மாத்திரம் பொலிஸார் கைதுசெய்த னர். ஏனையோர் தப்பிச் சென்றனர்.
காரில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் 75 இலட்சம் ரூபா பெறுமதியான 85 பக்கெட்டுகளில் இருந்த 165 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட் டது.
(ற-ரி5)

# உதவிகள் கோரி மக்கள் ஆர்ப்பாட்டம்



நுவரெலியா,டிசெ.12
மலையகத்தில் ஏற்பட்ட சீரற்ற காலநிலையால் கெசல்கமுவ ஓயா பெருக்கெடுத்து சுமார் 100க்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டுள்ளன.
பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசால் எந்த வித உதவிகளும் இதுவரை வழங்கவில்லை என்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று பாதிக்கப்பட்ட மக்கள் நோவூட் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அரசால் சுமார் 10ஆயிரம் ரூபா கொடுப்பனவு தருவதாக அறிவித்திருந்த போதிலும் அந்தக் கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை எனவும், உதவிப்பணிகள் வழங்வென நோர்வூட் மைதானத்துக்கு கொண்டுவரப் பட்ட பொருள்கள் காணாமற் போய் உள்ளன எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பில் மக்கள் பிரதிநிதிகள் எவரும் வந்து பார்க்கவில்லை எனவும் ஆர்ப்பாட்டக் காரர்கள் தெரிவித்தனர்.
"பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் எங்கே. நோர்வூட் விளையாட்டு மைதானத்துக்கு நிவாரணம் வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட நிவாரணப்பொருள்கள் எங்கே? பொகவந்தலாவையில் மாணிக்கக்கல் அகழ்வை உடனே நிறுத்து, வரிப் பணம் பெறும் பிரதேச சபை ஏன் வந்து பார்க்கவில்லை, வெள்ளம் ஏற்பட்டு 10 நாள்களுக்கு மேலாகியும் நோர்வூட் பிரதேசம் பிரதேச சபையால் சுத்தம் செய்யப்படவில்லை" போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஏந்திய வண்ணம் சுமார் 300க்கு மேற்பட்டவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
(ற-ரி5)

## ரணவிரு சேவாவால் அமைக்கும் வீடுகள் விரைவில் கையளிப்பு

### மாவட்ட அலுவலர் கீர்த்திகா தெரிவிப்பு

மட்டக்களப்பு,டிசெ.12
ரணவிரு சேவாவால் மட்டக்களப்பில் அமைக்கப்படும் 39 வீடுகளும் டி செம்பர் 25ஆம் திகதிக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என 'ரணவிரு சேவா' அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலர் ரீ.எச். கீர்த்திகா ஜயவர்தன உத்தரவிட்டார்.
அமைக்கப்படும் வீடமைப்புத் திட்டங்களை நேற்றுப் பார்வையிட்டுப் பயனாளிக் குடும்பங்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
"அமைக்கப்படும் ஒவ்வொரு வீடுகளும் தலா 22 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப் பட்டுவருகின்றது. கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதி இந்தத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
போர் இடம்பெற்ற காலப்பகுதியில் உயிரிழந்த, காணாமற்போன, அல்லது சம்பவங்களின்போது அங்கவீனமடைந்த படையினர் மற்றும் பொலிஸாரில் தங்கி வாழ்ந்த 136 குடும்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது வரை இனங்காணப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கான சேமநலன்களை 'ரணவிரு சேவா' கவனித்து வருகின்றது" - என்றார்.
(ற-ரி5)

## உணவகத்தில் மது அருந்தியவருக்கு சிறப்புக் கவனிப்பு!

வவுனியா,டிசெ.12
உணவகத்தில் மது அருந்தியவரை உணவகத்தில் பணியாற்றியவர்கள் நன்றாகக் கவனித்து அனுப்பி வைத்தனர்.
இந்த சம்பவம் வவுனியாப் பகுதியில் நேற்று மதியம் இடம் பெற்றது.



இரு மதுப்போத்தல்களுடன் உணவகம் சென்ற நபர் அங்கு வைத்து மதுவை அருந்தியுள்ளார்.
இதையடுத்து உணவக உரிமையாளர் அவரைத் தாறுமாறான வார்த்தைகளைக் கொண்டு பேசியுள்ளார். கோபமடைந்து மது அருந்தியவர் உணவக உரிமையாளரைத் தாக்கினார்.
உணவகத்தில் பணியாற்றியவர்கள் ஒன்றிணைந்து மது அருந்தியவரை மதுப் போத்தல்களால் தாக்கி தலையில் காயப்படுத்தி மருத்துவமனையில் சேர்த்தனர். எனத் தெரிவிக்கப்பட்டது.
காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 55 வயது மதிக்கத்தக்க நபர் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

## சிறி.பொது மக்கள் கட்சி பசில் ராஜபக்ச சந்திப்பு

பருத்தித்துறை,டிசெ.12
பருத்தித்துறை சிறிலங்கா பொது மக்கள் கட்சியினர் நேற்றுக் காலை பசில் ராஜபக்சவைச் சந்தித்தனர்.
இந்தச் சந்திப்பு பசில் ராஜபக்சவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.
வானதி சிறிகணேசன் தலைமையிலான குழுவினர் பருத்தித்துறைப் பகுதியில் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் கலந்துரையாடுவதற்கு பசிலின் அலுவலகம் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றி பெற்றால், பிரதேச அபிவிருத்திக்கான சகல உதவிகளையும் தான் வழங்குவதாகவும், மக்களின் ஆதரவு முழுமையாகக் கிடைக்குமானால் சலுகைகளையும் பெற்றுத் தருவதாக பசில் ராஜபக்ச இந்த சந்திப்பின் போது தெரிவித்தார். (ரி2.26)

## சட்டவிரோதமாக விற்கப்பட்ட மரை இறைச்சி பொரலாந்தவில் மீட்பு

நுவரெலியா,டிசெ.12
நுவரெலியா மாவட்ட பொரலாந்தப் பிரதேசத்தில் விற்பதற்கு தயாராக இருந்த மரை இறைச்சி நேற்று மீட்கப்பட்டது.



மரையைக் கொன்று சட்ட விரோதமான முறையில் இறைச்சிக்காக விற்பனை செய்ய முயற்சித்த வேளை பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு மரை இறைச்சி மீட்கப்பட்டது.
சுமார் 150 கிலோ கிராம் எடையுடைய மரை இறைச்சியே பொலிஸாரால் மீட்கப்பட்டது.
விற்பனை செய்த சம்பவம் தொடர்பில் 46 வயது மதிக்கத்தக்க நபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியாப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## தேர்தலில் ஐ.தே.கவால் கைப்பற்றும் முதலாவது சபையாக கோறளைப்பற்று

மட்டக்களப்பு,டிசெ.12
எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியால் கைப்பற்றும் முதலாவது சபையாக கோறளைப்பற்று இருக்கும் என கிராமிய பொருளாதார அபிவிருத்திப் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர்அலி நம்பிக்கை வெளியிட்டார்.
உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று பிரதேசசபைக்கான கட்டுப்பணத்தை நேற்றுச் செலுத்திய பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
"மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்தக்காலத்திலும் இல்லாத அளவுக்கு வேட்பாளர்கள் அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி ஒரு கூட்டமைப்பை உருவாக்கி அம்பாறை மாவட்டத்திலும் இலங்கையின் வேறு பாகங்களிலும் போட்டியிடுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொண்டுவருகின்றது.
தேர்தல் கூட்டு என்பது கட்சிகளிடையே கொள்கையுடன் ஒத்துப்போகும் கட்சியுடன் இணைந்து செயற்படுவதில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை.
புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முஸ்லிம் கூட்டமைப்பு கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களிலும் ஏனைய பிரதேசங்களிலும் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும்" - என்றார்.
(ற-ரி5)

## சி.சி.த.க. பாடசாலை ஒளிவிழா நிகழ்வு

தென்மராட்சி, டிசெ.12
பளை வேம்பொடு கேணி சீ.சீ.த.க. பாடசாலை சிறார்களின் ஒளிவிழா நிகழ்வுகள் நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றன.
அதிபர் க.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பளைப் பங்கின் கத்தோலிக்க மதகுரு கலந்து கொண்டு வழிபாடுகளை நடாத்தினார்.
மாணவர்களின் ஒளிவிழா கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ரி2,9)

## ஆடு கொண்டு சென்றவர் கைது

அச்சுவேலி, டிசெ.12
அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் ஆடு கொண்டு சென்றவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.
இச் சம்பவம் அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்றது.
குறித்த நபர் உந்துருளியில் ஆடு கொண்டு செல்லும்போதே கைதுசெய்யப்பட்டார்.
யாழ். பிரதிப் பொலிஸ்மா அதிபரின் சிறப்பு அணியினர் கலந்து கொண்டனர்.
(ரி2,26)




# திருமலையில் வேலை தேடும் பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

## எதிர்க்கட்சித் தலைவரின் வீடும் முற்றுகை

மட்டக்களப்பு, டிசெ.12
கிழக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் தங்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குமாறு கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்னால் இவ் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
ஆளுநர் கொழும்பு சென்றுள்ளதாகவும் அவரை நாளை சந்தித்து பேச ஏற்பாடு செய்வதாகவும் உதவிச் செயலாளர் ஆர்ப்பாட்டக்காரரிடம் தெரிவித்தனர்.
இதனையடுத்துபட்டதாரிகள்திருகோணமலையிலுள்ள எதிர் கட்சித் தலைவர் இரா.சம்மந்தரின் வீட்டினை முற்றுகையிட்டனர்.
2 மணி நேரம் கழித்து வெளியில் வந்த எதிர்க் கட்சித் தலைவர் தற்போது தேர்தல் காலம் ஆனபடியால் வேலை வழங்கும் அதிகாரம் இல்லை என்றும் எதிர்வரும் 24 ஆம் திகதி இப் பிரச்சனை தொடர்பில் முடிவு சொல்வதாகவும் தெரிவித்தார்.
இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.
கிழக்கு மாகாணத்தில் 7 ஆயிரம் பேர் ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்து அவர்களில் 2 ஆயிரத்து 800 பேர் மாத்திரமே பரீட்சையில் சித்தியடைந்தனர்.
கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கமைவாக ஆயிரத்து 400 பேர் நேர் முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டார்கள். பரீட்சையில் சித்தியடைந்த ஏனைய பட்டதாரிகள் பேராட்டம் நடாத்தி மிகுதி ஆயிரத்து 400 பேர்களுக்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பிதழைப் பெற்றார்கள்
நேர்முகப் பரீட்சையிலும் பிரயோகப் பரீட்சையிலும் சித்தியடைந்த 2 ஆயிரத்து 800 பேர்களில் ஆயிரத்து 119 பேர்களுக்கு மாத்திரமே ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் ஏனைய ஆயிரத்து 681 பேர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் வேலையில்லாப் பட்டதாரிகள் தெரிவித்தனர்.
சுற்று நிருபத்தில் கோரப்பட்டதிற்கிணங்க இரு பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற தங்களுக்கு நிரந்தர நியமனத்தை பெற்றுத்தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.
(ரி2,45)

## ரெலோ கிளி. அமைப்பாளர் பொது சின்னத்தில் போட்டி

கிளிநொச்சி, டிசெ.12
தமிழர் விடுதலை கூட்டணியின் பொது சின்னத்தில் போட்டியிட முடிவுசெய்துள்ளது என ரெலோவின் கிளிநொச்சி அமைப்பாளர் தெரிவித்தார்.
தமிழர் விடுதலை கூட்டணி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது,
"கடந்த காலங்களில் பேரினவாத அரசுக்கு எதிராக நாம் போராடிவந்தோம். இன்று அவ்வாறில்லை.
அதே பேரினவாத அரசே இன்று தமிழரசுக் கட்சியைப் பாதுகாத்து வருகின்றது. யாழில் தீர்க்க வேண்டிய பிரச்சினை கொழும்பில் தீர்க்கப்படும் அளவுக்கு இன்றைய அரசியல் காணப்படுகின்றது.
ரெலோ அமைப்பு வெளியேறுவதாக தெரிவித்து மீண்டும் கொழும்புக்குச் சென்று சேர்ந்தமை கவலையே.
தமிழரசு கட்சிக்கு வாக்களித்தால் பௌத்த பேரினவாதத்துக்கு வாக்களிக்கின்றோம் என்பதையும், ஒரே நாடு என்ற நிலைக்கு வாக்களிக்கின்றோம் என்ற நிலைக்கும் தள்ளப்படுவோம்"- என்றார். (ற-ரி5)



நீர்வேலி பாலர் பகல் விடுதி முன்பள்ளியின் தேவைக்கென ஒலிபெருக்கி சாசதனங்களை வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.சுகிர்தன் நேற்று வழங்கினார். 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் இந்த ஒலிபெருக்கிகள் வழங்கப்பட்டது. (ற,ரி4,7)

## ஹிஸ்புல்லா தலைமையில் கட்டுப்பணம் செலுத்தியது சு. க.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் நகர சபைக்கான கட்டுப் பணத்தை நேற்று மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் சிறிலங்கா சுதந்திர கட்சி செலுத்தியது.
கட்டுப் பணம் செலுத்தும் நிகழ்வில் சிறிலங்கா சுதந்திர கட்சியின் மீள் குடியேற்ற ராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா தலைமையில் முன்னாள் மாகாண சபை சுகாதார அமைச்சர் சுபைர் உட்பட கட்சியின் வேட்பாளர்கள் அதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.
தேர்தல் ஆணைக்குளுவினர்களால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட 93 சபைகளுக்குமான கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கை நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றது.
(ற-ரி5)

ஆர்வமும், துடிப்பும், தேடலும் இருந்தால்......

# பயிற்சிச் செய்தியாளராக வாய்ப்பு!

வயதெல்லை இல்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முழுநேர, பகுதிநேர பணி வாய்ப்பு.

உங்கள் சுயவிவரக் கோவையை (அலைபேசி இலக்கத்துடன்) தபாலிலோ, வைபர் மூலமோ, உதயன் முகநூல் பக்க தனித் தகவல் ஊடாகவோ, மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பலாம்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 316 5555
UthayanPrint
uthayanprint@gmail.com

விண்ணப்ப இறுதித் திகதி:
15.12.2017

# தனித்துச் செல்லும் மகிந்த ஒருபோதும் வெல்லமாட்டார்

## விமல் அணியிலிருந்து கட்சிதாவியோர் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 12

மகிந்த ராஜபக்சவை முழுமையாக வீழ்த்தி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைத் தோல்வியடையச் செய்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் நோக்கத்தில் ஒரு சிலர் செயற்பட்டு வருகின்றனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து மகிந்த தனித்துப் போவதால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது என்று விமலின் தேசிய சுதந்திர முன்னணியில் இருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவர் வீரகுமார திசாநாயக்க, தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்க மற்றும் வடமத்திய மாகாண சபை உறுப்பினர் பி.பீ.குமார ஆகியோர் அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்து சுதந்திரக் கட்சியில் இணைந்த பின்னர், செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்கள்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

சுதந்திரக் கட்சியை இரண்டாகப் பிளவுபடுத்துவதன் மூலமாக மகிந்த தரப்பினர் வெற்றியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறுகின்றனர். ஆனால் கட்சி பிளவுபடுவதால் ஒருபோதும் எவராலும் வெற்றிபெற முடியாது. சிறிலங்கா சுதந்திர கட்சியை மக்கள் ஆதரிக்கின்றனர். சுதந்திர கட்சியின் கொள்கையை மக்கள் ஆதரிக்கின்றனர். அவ்வாறு இருக்கையில் கொள்கை இரண்டாக பிளவுபடுவதன் மூலமாக எவரும் தனித்து வெற்றிபெற முடியாது. இன்று தனித்துப்போக வேண்டும் என்று எம்மில் உள்ள சிலர் கூறுகின்றனர். தனித்து செல்பவர்களிடம் எந்த வொருகொள்கையும்இலக்கும்இல்லை. முன்னாள் அரச தலைவர் மகிந்தவுடன் இணைந்து தனித்து செல்ல துடிக்கும் நபர்கள் தமது இலக்கும் கொள்கையும் என்னவென்பதை முன்வைக்க வேண்டும். ஆனால் கட்சியைப் பழிவாங்கவும், பதவியை பறிக்கவும் மட்டுமே அவர்களின் நோக்கமாக இருப்பின் ஒருபோதும் வெற்றிபெற முடியாது. முன்னாள் அரச தலைவர் மகிந்தவும் இதனைச் சிந்திக்க வேண்டும்.

மகிந்தவை மக்கள் நிராகரித்துள்ளனர். அவர் ஓய்வு பெறவேண்டும். அவ்வாறான எண்ணத்தில்தான் அவர் வீட்டிற்கு சென்றார். ஆனால் அவரை நம்பியும் அவரைச் சுற்றியும் அரசியல் செய்யும் நபர்களுக்கு மீண்டும் அவர் தேவைப்படுகின்றார். அவர் மூலமாக மீண்டும் அதிகாரங்களை பெற்றுக் கொள்ள சிலர் முயற்சிப்பது தெரிகின்றது.

நாம் எப்போதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நலனை கருத்தில்கொண்டு செயற்பட்டு வருகின்றோம். எமக்கு தலைமைத்துவத்தை விடவும் கட்சி, கட்சியின் ஆதரவாளர்கள், இந்த நாடு என்பன முக்கியமாக உள்ளது. நாம் உணர்வுபூர்வமாக இன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்துள்ளோம். எமது நிலைப்பாட்டில் கூட்டு எதிரணியில் பலர் உள்ளனர். அவர்கள் பலர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரித்து நேசித்து அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். ஆகவே அவர்களும் கட்சியைப்பலப்படுத்தவிரைவில்இணைவார்கள் என்று நாம் நம்புகின்றோம் என்றார்கள். (5.31)

(தொடர்புடைய செய்தி - பக்: 09)

# நிமோனியாவால் பெண் உயிரிழப்பு

சாவகச்சேரி, டிசெ. 12

காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த இளம்பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மட்டுவில் தெற்கு சிவன் கோவிலடியைச் சேர்ந்த யோகராசா அனுஷா (வயது 25) என்பவரே உயிரிழந்தார்.

இவருக்குக் கடந்த 5 ஆம் திகதி காய்ச்சல் ஏற்பட்டது. சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மூச்சுவிட சிரமப்பட்டதால் மறுநாள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் அவர் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணை நடத்தி சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சீ.சீ.இளங்கீரன் மூலமாக இறப்பு விசாரணை நடத்தி அறிக்கை தாக்கல் செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது. நிமோனியாக் காய்ச்சல் காரணமாக அவர் உயிரிழந்தார் என்பது தெரியவந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டது. சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (உ49)



# இந்தியப் பாதுகாப்பு பிரதானி ரணிலுடன் நேற்றுச் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 12

இலங்கைக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வான்படையின் பிரதானி எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹா தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவையும் நேற்றுச் சந்தித்தார். இரு நாடுகளின் பாதுகாப்பு நட்புறவு ரீதியில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இந்திய வான்படைப் பிரதானி எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹா மற்றும் அவரது பாரியார் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

அவருக்கும் இலங்கை வான்படைத் தளபதி எயார் மார்சல் கபில ஜயம்பதி ஆகியோருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் காலை கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது. வான்படை அணிவகுப்புடன் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் வான் படையின் உயர் அதிகாரிகள் மற்றும் பிரதானிகளும் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹா இலங்கை வான்படை அதிகாரிகள் மத்தியில் வான்படை நகர்வுகள் மற்றும் இலங்கை இந்திய இணை செயற்பாடுகள் குறித்தும் உரையாற்றினார். சந்திப்பை அடுத்து இலங்கை வான்படைத் தளபதியினால் நினைவுச் சின்னமும் எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹாவிற்கு வழங்கப்பட்டது.

அதன் பின்னர் இந்திய வான்படை பிரதானி எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹா பத்தரமுல்லை பாதுகாப்பு படையினர் நினைவுத்தூபியில் மலர் அஞ்சலி செலுத்தியிருந்தார்.

அதனை அடுத்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவையும் வான்படை பிரதானி எயார் சீவ் மார்ஷல் ப்ரிந்தர் சிங் தனோஹா சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு நகர்வுகள் குறித்து இருதரப்பு நட்புறவு குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்தனவினால் வான்படை பிரதானி எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹாவிற்கு நினைவுச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்திய வான்படை பிரதானி எயார் சீவ் மார்சல் ப்ரிந்தர் சிங் தனோஹா ஆகியோருக்கு இடையில் அலரிமாளிகையில் சந்திப்பொன்றும் இடம்பெற்றிருந்தது. இலங்கை இந்திய பாதுகாப்பு உறவில் மேலும் பலமடையும் வகையிலும் நட்புறவு ரீதியிலும் இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (5.31)

# 12 வருடங்களுக்குப் பின் சந்திரிகா களம் குதிப்பு

## வெற்றிவாகை சூடுவோம் எனவும் சூளுரை



கொழும்பு, டிசெ. 12

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரான சந்திரிகா பண்டாரநாய்க்ககுமாரதுங்கஅம்மையார், சுமார் 12 வருடங்களுக்குப் பின்னர் கட்சிக்காக மீண்டும் செயற்பாட்டு அரசியலில் களமிறங்கியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது நேற்றுப் பல மாவட்டங்களில் வேட்புமனுத் தாக்கல் செய்தது. கம்பகா மாவட்டத்தில் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டபோது முன்னாள் அரச தலைவர் சந்திரிகா அம்மையாரும் ஆதரவாளர்களுடன் உடனிருந்தார்.

இரண்டு தடவைகள் நிறைவேற்று அரச தலைவர் பதவியை வகித்த சந்திரிகா, அவரது காலப்பகுதியில் இடம்பெற்ற தேர்தல்களின்போது பிரதான பரப்புரைக் கூட்டங்களிலேயே பங்கேற்பார். 2005ஆம் ஆண்டுக்குப் பின்னர், அதாவது சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவி மகிந்தவின் கைகளுக்குச் சென்ற பின்னர் கட்சியிலிருந்து சந்திரிகா படிப்படியாக ஓரங்கட்டப்பட்டார். செயற்பாட்டு அரசியலில் இருந்து அவர் ஒதுங்கியிருந்தார்.

இந்நிலையில், 2014ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மைத்திரிபாலசிறிசேனவை அரச தலைவர் தேர்தலில் பொதுவேட்பாளராகக் களமிறக்கி அவரின் வெற்றிக்காகக் கடுமையாக உழைத்தார். எனினும், சுதந்திரக் கட்சிக்கு அவர் ஆதரவு வழங்கவில்லை. மைத்திரிபால வெற்றிபெற்ற பின்னரே சுதந்திரக் கட்சியின் ஆலோசகர் பதவியையும் ஏற்றார்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே சுமார் 12 வருடங்களுக்குப் பின்னர் கட்சியின் வெற்றிக்காக அதுவும் வேட்புமனுத் தாக்கல் செய்யும் நிகழ்வில் அவர் பங்கேற்றுள்ளார்.

நிறைவேற்று அரச தலைவராக இருந்த ஒருவர், அதுவும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகவேட்புமனுத் தாக்கல் செய்யும் நிகழ்வில் பங்கேற்றமை அரசியல் களத்தில் வித்தியாசமான கோணத்தில் பார்க்கப்படுகின்றது.

வேட்புமனுத் தாக்கலின் பின்னர் கருத்து வெளியிட்ட அவர், சிறிலங்கா சுதந்திரக் கட்சிகைசின்னத்தில்போட்டியிடும். வெற்றி நிச்சயம்' என்று இடித்துரைத்தார். (5)

# கடன் எல்லை அதிகரிப்பு சட்டவரைவு நிறைவேற்றம்

கொழும்பு, டிசெ. 12

2017ஆம் ஆண்டுக்கான அரசின் கடன் எல்லையை ஆயிரத்து 629 மில்லியன்களாக அதிகரிப்பது தொடர்பான நிதி ஒதுக்கீட்டு (திருத்த) சட்டவரைவு 45 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன விடுத்த கோரிக்கைக்கு நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் சட்டவரைவுக்கு ஆதரவாக 53 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும் தரப்பினரும் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவாக வாக்களித்ததோடு மக்கள் விடுதலை முன்னணி மற்றும் கூட்டு எதிர்க்கட்சியினர் எதிராக வாக்களித்திருந்தனர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை 2017ஆம் ஆண்டுக்கான அரசின் கடன் எல்லையை அதிகரிப்பதற்கு 2016 ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச்சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டவரைவு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சினால் சமர்ப்பித்திருந்தது.

நிதி அமைச்சர் மங்கள சமரவீர இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தை ஆரம்பித்துவைத்திருந்த நிலையில் இந்தத் திருத்தச்சட்டவரைவின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (5.31)

## தபால்மூல வாக்களிப்பு:

# விண்ணப்பிப்புக்கான காலம் நீடிப்பு

கொழும்பு, டிசெ. 12

எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களின் போது தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் அது தொடர்பில் விண்ணப்பிக்க வேண்டிய கால எல்லையை எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீடிக்க தேர்தல்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹம்மட் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

21 மாவட்டங்களில் நேற்று வேட்பு மனுக் கோரும் நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. 93 உள்ளூராட்சி சபைகளுக்கு கட்டுப்பணம் செலுத்தும் நடவடிக்கைகள் நாளை 13ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் நிறைவுக்கு வருகின்றது.

இந்த நிலையில் 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்ப இறுதித் திகதி எதிர்வரும் 15 ஆம் திகதி நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடைகிறது. எனினும் 248 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பிலான விண்ணப்பதிகதிவித்தியாசப்படுவதால், மொத்தமாக 341 உள்ளூராட்சிமன்றங்களுக்கும் என்று பொதுவான ஒரு விண்ணப்ப முடிவுத் திகதியை நிர்ணயிப்பது குறித்து தேர்தல்கள் ஆணைக் குழுவின் கவனம் திரும்பியுள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்ப இறுதித் திகதியை 22ஆம் திகதி வரை நீடிக்க ஆணைக் குழு உத்தேசித்துள்ளது - என்றார். (5.31)

## கவனயீனமாக வாகனம் செலுத்திய சாரதிக்கு தண்டம்

கிளிநொச்சி, டிசெ. 12
கவனயீனமாக வாகனம் செலுத்திய சாரதிக்கு 3000 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.
கிளிநொச்சி பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் வாகனத்தை கவனயீனமாக செலுத்தினார் என வாகன சாரதி ஒருவர் பொலிசாரால் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து 3000 ரூபா தண்டம் விதித்ததுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை ஒரு வாரகாலத்துக்கு இடைநிறுத்தி வைத்து தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று. (எ-6)

## பகவத்கீதை விளக்கவுரை

யாழ்ப்பாணம்,டிசெ.12
யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வாரந்தோறும் புதன்கிழமைகளில் ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை, யாழ் சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் விலாசத்தில் நடத்தப்பட்டு வருகிறது.
இதில் நாளை புதன்கிழமை ஸ்ரீமத் பகவத்கீதையின் முதலாம் அத்தியாயமாகிய 'அர்ஜுன விஷாத யோகம்' பகுதியில் 'படைகளுக்கு நடுவே தேரை நிறுத்து' என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெற உள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர். அனுமதி இலவசம். தொடர்புகளுக்கு 021 222 3447 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (எ)

### சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்

# அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டடங்களுக்கு எதிராக நடவடிக்கை

சாவகச்சேரி, டிசெ. 12
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கட்டட அனுமதியின்றி அமைக்கப்படும் கட்டட உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவ்வாறான கட்டடங்களை இடித்து அழிக்கவும் நகரசபையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பாக சபையின் வரியிறுப்பாளர்களுடன் தொடர்பு கொண்டுகேட்டபோது, நகரசபையில் கட்டட அனுமதிக்காக விண்ணப்பித்து ஆறு மாத காலமாகியும் அனுமதி வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அலுவலகத்துக்குத் தினமும் அலைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. நகர அபிவிருத்தி அதிகார சபை அலுவலர்கள் பார்வையிட்டு அனுமதி வழங்க வேண்டுமெனத் தெரிவிக்கின்றனர். அத்துடன் மதில் அமைப்பதற்கு கட்டட அனுமதிக்கு விண்ணப்பித்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்துக்குச் சென்று பணம் செலுத்துமாறு கூறுகின்றனர். அங்கு பணம் செலுத்திய போதிலும் அதிகாரிகள் வந்து பார்க்கின்றார்கள் இல்லை. நகரசபையில் கேட்டால் கட்டட அமைப்புக் குழு தீர்மானிக்க வேண்டுமெனவும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகாரி வாரத்தில் ஒரு நாள் வந்து கூட்டம் கூடி திர்மானிக்கின்றார் எனவும் தெரிவிக்கின்றனர்.
வாராவாரம் அங்கு சென்றால் அலுவலர் வரவில்லை என்ற பதிலே கிடைக்கின்றது. இதனால் வருவது வரட்டுமென நினைத்து கட்டடங்களை அமைத்து வருகின்றோம். எமது தேவைக்குத் தான் கட்டடமே தவிர அதிகாரிகளுக்கல்ல- என்றனர்.
இது தொடர்பாக நகரசபையின் தொடர்புடைய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட போது, கட்டட அனுமதிக்கு விண்ணப்பம் வழங்கி அனுமதி தாமதமடைவதால் ஒருவர் அனுமதி பெறாமல் கட்டுவதைப் பார்த்து ஏனையோரும் அதனைப் பின்தொடர்ந்து கட்டடங்களை அமைக்கின்றனர். கிணறு, மலகூடம் அமைப்பவர்கள் உரிய காலத்தில் கட்டப்படல் வேண்டுமெனக் கருதி கட்டடங்களை அமைத்து விடுகின்றனர்.
இதனால் இது தொடர்பாக பல முறைப்பாடுகள் வந்தவண்ணமுள்ளன. இதனால் உயர் அதிகாரிகள் மற்றும் சட்ட அறிஞர்களுடன் கலந்துரையாடியதையடுத்து அனுமதியின்றிக் கட்டப்படும் கட்டடங்களின் உரிமையாளர்கள் முறைப்படி விண்ணப்பங்கள் தரத் தவறின் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதுடன் அங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டடத்தையும் இடித்து அழிக்க நடவடிக்கை மேற்கொள்வது என திர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.
அனுமதிப் பத்திரமின்றி கட்டடங்களை அமைத்தோர் உடனடியாக சபையுடன் தொடர்பு கொண்டு முறைப்படி விண்ணப்பங்களைக் கையளிக்குமாறும் இல்லையேல் அதன் பின்னர் இடம்பெறும் அசௌகரியங்களுக்கு சபை பொறுப்பேற்காது எனவும் தெரிவித்தனர். (எ-9)



## கத்தோலிக்க தேவாலயம் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

யாழ்ப்பாணம் டிச 12
யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க தேவாலயம் மீது இனந்தெரியாத நபர்களால் நேற்றுமுன்தினம் அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.
யாழ்ப்பாணம் நகரை அண்டிய பகுதியில் உள்ள புனித அந்தோனியார் திருவுருவச் சிலை வைக்கப்பட்ட கண்ணாடி உடைக்கப்பட்டுள்ளது. குறித்த தேவாலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்து யாழ்ப்பாண பொலிஸ் நிலையம் மற்றும் இராணுவமுகாம் என்பன 100 மீற்றர் தொலைவில் அமைந்துள்ளன. வடக்கில் அண்மைக் காலமாக வழிபாட்டுத் தலங்கள் மீது தொடர்ச்சியான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

## பயணியை தகாத வார்த்தையில் திட்டிய தனியார் பேருந்துச் சாரதி தொடர்பில் சங்கத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,டிசெ.12
யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் சேவையில் ஈடுபட்ட தனியார் பேருந்து ஒன்றில் இருந்து இறங்கிய மூதாட்டி தரையில் விழுந்ததை அவதானிக்காது பேருந்து நகர்ந்தவேளை பேருந்தில் தட்டி நிறுத்திய பயணியை தகாத வார்த்தையில் திட்டிய சாரதி தொடர்பில் நேற்று முன்தினம் சங்கத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.
அண்மையில் மானிப்பாயில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த பேருந்தில் இருந்து ஆனைக்கோட்டைப் பகுதியில் மூதாட்டி ஒருவர் பேருந்தில் இருந்து இறங்கியுள்ளார். அவ்வாறு இறங்கிய மூதாட்டி வீதியில் ஒரு காலை வைத்த போதும் முழுமையாக இறங்காத நிலையில் சாரதி பேருந்தைச் செலுத்தியுள்ளார். இதனை அவதானித்த சக பயணி பேரூந்தில் தட்டி சைகை செய்துள்ளார்.
இதனை அவதானித்த சாரதி பேருந்தைத் தட்டியவரை தகாத வார்த்தைகளால் ஏசியதோடு "கண்ணாடி உடைந்தால்வேண்டித்தருவீர்களா" எனக்கோரியுள்ளார். இதன்போது குறித்த பயணி "கண்ணாடி உடைந்தால் நான் வழங்குகின்றேன். மூதாட்டி படுகாயமடைந்தால் நீங்கள் பராமரிப்பீர்களா?" எனக் கேட்டுள்ளார். குறித்த பயணி யாழ்ப்பாணத்தில் இறங்கியவேளையிலும் சாரதி குறித்த பயணியுடன் முரண்பட்டுக்கொண்டார். குறித்த விடயம் தொடரபில் யாழ்ப்பாண மாவட்ட சிற்றூர்தி சங்க தலைவர் பொ.கெங்காதரனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து உரிய விடயம் தொடர்பில் உடன் ஆராய்ந்து உரிய தீர்வு வழங்கப்படும். எனத் தெரிவித்தார். (எ-101)


## பாராயண வகுப்பு புதிதாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்,டிசெ.12
யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால், முதன்முதலாக அனைவருக்குமான இலவச சமஸ்கிருதம் மற்றும் மந்திர உச்சாடன வகுப்பு ஆரம்பம்.
இல. 09, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் விலாசத்தில் அமைந்துள்ள சின்மயா மிஷனின் பிரார்த்தனை மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் 6 மணி வரை இடம்பெறும்.
அதில் சமஸ்கிருத வகுப்பு மாலை 4 மணிமுதல் 5 மணிவரையும் அதன் பின் 5 மணி முதல் 6 மணி வரை ஸ்தோத்திர பாராயணம் இடம் பெறும். ஸ்தோத்திர பாராயணத்தில், 'சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்திரம்' இடம் பெறும். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ)

## வேக நடைப் பயிற்சி முகாம்

சாவகச்சேரி, டிசெ.12
தென்மராட்சிப் பிரதேச செயலக விளையாட்டு அலகினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான வேக நடைப்பயிற்சி முகாம் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்துக்கு அருகில் உள்ள சாலையில் நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 7 மணி தொடக்கம் 10 மணி வரை இடம்பெறவுள்ளது.
பிரதேச செயலகங்கள் மற்றம் மாவட்டச் செயலகம் ஆகியவற்றால் நடத்தப்படவுள்ள மெய்வல்லுநர் போட்டிகளின் ஓர் அங்கமாக அடுத்தவருடம் முதல் வேக நடை போட்டியும் இடம்பெறவுள்ளதால் அதில் கலந்து கொள்ளவுள்ள தென்மராட்சிப் பிரதே சத்தைச் சேர்ந்தவர்களுக்கான பயிற்சிகள் வழங்குவதற்காக முகாம் நடத்தப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சிப் பிரதேசத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்கள் தமது கழகத்தின் சார்பில் கலந்து கொள்ள விரும்புபவர்களின் பெயர் விபரங்களை பிரதேச செயலக விளையாட்டு அலகில் கையளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## அரசமைப்புத் தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிசெ.7

சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினரின் ஏற்பாட்டில் 'இலங்கையின் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையும் இனப்பிரச்சினைக்கான தீர்வும், என்ற தலைப்பிலான கலந்துரையாடல் கொக்குவில் தேசிய கலை இலக்கியப்பேரவையின் முருகையன் கேட்போர்கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் சட்டத்தரணி கோசலை மதனும், இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் மனித வள மேம்பாடும் அபிவிருத்தியும் பிரிவுக்கான முன்னாள் பிரதிச் செயலாளர் சி. கிருஸ்ணானந்தனும் கருத்துரையாற்றினர். (எ)

## வீதி நாடகம்

கிறிஸ்து பிறப்புக்காலத்தையொட்டி கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி மாணவர்களின் வீதி நாடக நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருகின்றன.
சமகால சமூக இளையோரின் பிறழ்வுச் செயற்பாடுகளை மையப்படுத்தி விழிப்புணர்வூட்டும் வகையில் 'நல்ல சமாரியன்' என்னும் வீதி நாடக அளிக்கை யாழ்ப்பாண ஆலயப் பகுதிகளில் காண்பிக்கப்பட்டு வருகின்றது என சவேரியர் குருமட அதிபர் அருட்பணி ஜெரிபெல் கிருபாகரன் அடிகள் தெரிவித்தார். (எ-135)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 140 | 100 | 120 | 60 |
| கத்தரி | 100 | 120 | 120 | 120 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 180 | 320 | 160 | 200 | 160 |
| பாகல் | 280 | 320 | 300 | 240 | 380 |
| க.கிழங்கு | 80 | 80 | 50 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 150 | 200 | 160 | 160 | 120 |
| சி.வெங்காயம் | 400 | 400 | 300 | 300 | 400 |
| பூசணி | 60 | 80 | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 120 | 120 | 100 | 100 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 80 | 60 |
| கீரை | 100 | 60 | 50 | 40 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 | 40 | 40 |
| ப.மிளகாய் | 320 | 300 | 400 | 400 | 500 |
| புடோல் | 100 | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 150 | 160 | 140 | 140 | 140 |
| வெண்டி | 100 | 160 | 160 | 120 | 100 |
| போஞ்சி | - | 200 | - | 240 | 180 |
| லீக்ஸ் | 180 | 240 | 220 | 240 | 240 |
| தேங்காய் | 90 | 90 | 100 | 100 | 70 |
| உ.கிழங்கு | 70 | 100 | 80 | 80 | 70 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 60 | 20 |
| கறிமிளகாய் | - | 300 | 300 | 300 | 350 |
| கரட் | 180 | 200 | 160 | 180 | 220 |
| முருங்கைக்காய் | - | 320 | - | 500 | 300 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 800 | 800 |
| நண்டு | 400 | 400 | 400 | 400 |
| கணவாய் | 600 | 500 | 800 | 800 |
| பாரை | 400 | 500 | 600 | 600 |
| சுறா | 500 | 700 | 800 | 700 |
| சீலா | 300 | 400 | 500 | 500 |
| விளை | 400 | 400 | 500 | 600 |
| முரல் | 300 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 250 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 500 |
| ஓரா | 300 | 300 | 400 | 300 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 220 | 300 | 300 |
| சூடை | 100 | 120 | 200 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 200 | 300 |
| திருக்கை | 250 | 200 | 400 | 350 |
| மதனம் | 200 | 150 | 250 | 300 |
| கொய் | 100 | 80 | 120 | 80 |
| பாலை | 150 | 200 | 300 | 400 |
| வாளை | 100 | 200 | 200 | 250 |

## மீசாலை கிழக்கு முன்பள்ளியின் கலைநிகழ்வு

சாவகச்சேரி, டிசெ.12
சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தால் நடத்தப்படும் மீசாலை கிழக்கு முன்பள்ளியின் 21ஆவது ஆண்டு நிகழ்வும் சிறார்களின் கலை நிகழ்வும் முன்பள்ளி மைதான மதுவன் கலையரங்கில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். சங்க அலுவலர் த.விஜயதீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசனும் சிறப்பு விருந்தினர்களாக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.அரியநாயகம், மீசாலை கமலாம்பிகை வித்தியாலய அதிபர் வ.கணேசலிங்கம், வடமாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசகல்வி அலுவலர் வ.சிவகுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
நிகழ்வில் சிறார்கள் மற்றும் ஆசிரியைகள் மதிப்பளிக்கப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# பருத்தித்துறை மருத்துவமனையில் கண் சிகிச்சை 2 வாரங்களுக்கு இல்லை

## மருத்துவர் இல்லாமையே காரணம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் கண் பரிசோதனையாளர் நியமிக்கப்பட்டுள்ள போதிலும் கண் மருத்துவர் இல்லாததால் இரு வாரங்களுக்கு கிளினிக் நடத்தப்படுவது தள்ளிப் போடப்பட்டுள்ளது.
மந்திகை ஆதார மருத்தவமனைக்கு கொழும்பு சுகாதார அமைச்சால் கண் பரிசோதனையாளர் நியமிக்கப்பட்டு நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார். ஆனால் மருத்துவமனையில் நிரந்தர கண் சிகிச்சை நிபுணர் இல்லை. அதனால் இரண்டு வார பயிற்சியின் பின்னரே சிகிச்சைப் பிரிவு இயங்கும் என்று மருத்துவமனைத் தரப்புத் தெரிவித்தது.
யாழ்ப்பாண மாவட்டத்தில் நான்கு ஆதார மருத்துவமனைகள் உள்ளபோதிலும் அவற்றில் கண் சிகிச்சை நிபுணர்கள் இல்லாததால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற கண் சிகிச்சை நிபுணர் ஒப்பந்த அடிப்படையில் நான்கு மருத்துவமனைகளிலும் வாரத்தில் ஒரு நாள் சிகிச்சையளித்து வந்துள்ளார்.
அவர் கடந்த மாதம் கடமையிலிருந்து விலகிக் கொண்டதால் நான்கு மருத்துவமனைகளிலும் கண் சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.
இதனால் பாடசாலை மாணவர்கள் உட்பட பொதுமக்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்குச் சென்று கண் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
மந்திகை ஆதார மருத்துவமனை நிர்வாகம் மருத்துவமனை அபிவிருத்திச் சங்கம் மற்றும் வடமராட்சி பிரதேச பொது அமைப்புகள் விடுத்த வேண்டுகோளையடுத்து கொழும்பு சுகாதார அமைச்சு கண் பரிசோதனையாளர் ஒருவரை நியமித்தது. அவர் நேற்றுக் கடமைகளைப் பொறுப்பேற்றார்.
மருத்துவமனையில் ஞாயிறு மற்றும் பொது விடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் கண் பரிசோதனைகள் நடைபெறும் என்று மருத்துவமனை செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
மேலும் பார்வையில் குறைபாடு காணப்படும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மருத்துவமனையில் நடத்தப்படவுள்ள கிளினிக்கில் பரிசோதனைகளை மேற்கொள்ளலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-9)

## நூல் வெளியீட்டு நிகழ்வு

சாவகச்சேரி, டிசெ. 12
ஓய்வுநிலை அதிபர் புலவர் மு.பாலசுப்பிரமணியம் எழுதிய 'சிறுவர் செந்தமிழ் பாட்டு' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நாளைமறுதினம் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.
தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் சமாச உப தலைவர் க.அருட்செல்வம் தலைமையில் இடம்பெறவுள்ள வெளியீட்டுநிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன் கலந்து கொள்ளவுள்ளார்.
சிறப்பு விருந்தினர்க ளாக யாழ்ப்பாண மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர் என்.பஞ்சலிங்கம், தென்மராட்சி பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன், வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தர சிவம், ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.மனோரஞ்சிதன், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் ச.அரியநாயகம், பிரதேச கலாசார அலுவலர் சி.முகுந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.
முதன்மை விருந்தினர் நூலை வெளியிட முதற்பிரதியை சாவகச்சேரி நகர வர்த்தகர் த.ஜெயந்தன் பெற்றுக் கொள்வார். நூலின் ஆய்வுரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகக் கற்கைகள் பீட பீடாதிபதி தி.வேல்நம்பியும் நயப்புரையை தென்மராட்சி வலயக் கல்வி தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஷகே.சிறிதரனும் வழங்கவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## கைகொடுப்போம் சமூக செயற்பாட்டு அமைப்பின் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 12
கைகொடுப்போம் சமூக செயற்பாட்டு அமைப்பின் செயற்குழுக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது. அடுத்த வருடத்துக்கான செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ள இந்தக் கூட்டத்தில் மத்தியகுழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4)

## தாய்வீடு சென்ற மகனை வெட்டிய தந்தை

சாவகச்சேரி, டிசெ 12
தாய் வீடு சென்ற தனயனை வெட்டிச் சாய்த்தனர் தந்தையும் சகோதரர்களும். இதில் காயமடைந்த இளம் குடும்பத்தலைவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் கொடிகாமம் கெற்பேலியில் இடம்பெற்றது. தலையில் கத்திவெட்டுக்கு காயமடைந்த குறித்த நபரை கொடிகாமம் பொலிஸார் மருத்துவமனையில் சேர்த்து விசாரணைகளை மேற்கொண்டனர். அல்லாரை வடக்கைச் சேர்ந்த பொன்னையா நிமலன் (வயது 24) என்பவரே காயமடைந்தவராவார். (எ-9)

## மக்கள் வங்கிக்கு அடிக்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 12
மக்கள் வங்கியின் பிராந்திய தலைமைக் காரியாலய புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை இடம்பெறும். யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதியில் உள்ள நிலத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நிகழ்வு இடம்பெறும் என்று வங்கியின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

## காங்கிரஸின் தலைவராக ராகுல்காந்தி தெரிவானார்

யாழ்ப்பாணம், டிசெ. 12
இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக ராகுல் காந்தி தேர்வு செய்யப்பட்டதாக நேற்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.
காங்கிரஸ் கட்சியின் தலைவராக கடந்த 17 ஆண்டுகளாக சோனியா காந்தி பதவி வகித்து வந்தார். அவரது உடல்நலம் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கட்சியின் துணைத் தலைவராகச் செயற்பட்ட ராகுல் காந்தியைத் தலைவராக்க வேண்டும் என்று காங்கிரஸ் நிர்வாகிகள் வலியுறுத்திவந்த நிலையில் இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
இந்திய காங்கிரஸ் கட்சியின் நிர்வாகிகள் தேர்தல்கள் நடந்து முடிந்ததையடுத்து, தலைவர் பதவிக்கான தேர்தல் அறிவிக்கப்பட்டது. ராகுலைத் தவிர வேறு யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யாததால் அவர் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.
காங்கிரஸ் தலைவராக ராகுல் காந்தி தேர்வு செய்யப்பட்டதற்கான சான்றிதழ் வரும் 16ஆம் தேதி சோனியா காந்தியின் முன்னிலையில் ராகுலிடம் வழங்கப்பட இருக்கின்றது. அன்று அவர் தலைவர் பதவியை ஏற்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (4)

## மோட்டார் சைக்கிளை பெற்று கொள்ளவும்

யாழ்ப்பாணம், டிசெ.12
பருத்தித்துறை நீதிவான் மன்றில் பருத்தித்துறை பொலிஸாரால் மோட்டார் சைக்கிள் ஒன்று பாரப்படுத்தப்பட்டுள்ளது.
பி.ஈ.ஆர் 8001 என்ற இலக்கமுடைய மோட்டார் சைக்கிளை மூல ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளுமாறும் பெற்றுக்கொள்ளாது விடின் 2 மாதங்களுக்குப் பின் அது அரசுடமை ஆக்கப்படும் என பதிவாளர் தெரிவித்துள்ளார். (எ)

# பிரேரணை முன்மொழிதலோடு மாகாண சபையின் கடமை நிறைவுறுகின்றதா?

## பலராலும் கேள்வி எழுப்பப்படுகின்றது

யாழ்ப்பாணம், டிச. 12
இலங்கை அரசினதும் நாட்டிலுள்ள வங்கிகளினதும் திட்டங்கள் அனைத்தின் பெயர்களும், கொள்கைகளும் தமிழிலிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சரால் வடக்கு மாகாண சபையின் அமர்வில் பிரேரணை நிறைவேற்றப்பட்டு நீண்டகாலமாகியும் இன்றுவரை அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

இலங்கையில் சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாகவும் உத்தியோக பூர்வ மொழிகளாகவும் உள்ளன. எனவே இரண்டுக்கும் சம உரிமை வழங்கப்படுதல் உறுதி செய்யப்பட வேண்டும்.

அரசு அறிமுகப்படுத்தக் கூடிய எந்தவொரு திட்டங்களிலும் அதற்குரிய பெயர்கள் தமிழில் கருத்து மாறாமல் பின்பற்றப்பட வேண்டும்.

மேலும் வங்கிகள் அனைத்தும் அறிமுகப்படுத்துகின்ற வைப்புக் கணக்குகளின் பெயர்கள் மற்றும் பரிசுத் திட்டங்களின் பெயர்களும் அதே கருத்தில் தமிழில் பின்பற்றப்பட வேண்டும். எனவே அரசும் வங்கிகளும் இந்த நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என தேசிய சுகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரான மனோ கணேசன் இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த ஆவண செய்ய வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் பிரேரணையை முன்மொழிந்து அனை வரது ஆதரவுடனும் நிறைவேற்றப்பட்டி ருந்தது.

வங்கிகளில் கடன் வழங்கும் படிவங்கள் சிங்களம் அல்லது ஆங்கிலத்தில் கொடுக்கப்படுவதால் மக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக தனியார் வங்கிகள் சிலவற்றுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது.

எமது வங்கிகளின் புதிய திட்டங்கள், புதிய சேவைகள் அனைத்தும் கொழும்பில் உள்ள தலைமைக் காரியாலயத்தில் இருந்தே அனுப்பி வைக்கப்படுகின்றன. அவற்றையே நாம் வழங்குகின்றோம். கிடைக்கும் திட்டங்களுக்கு ஏன் சிங்களப் பெயர்கள் வைக்கப்படுகின்றன என தலைமை அலுவலகத்தில் நாம் கேள்வி கேட்க முடியாது.

இவ்வாறான பிரச்சினை தொடர்பில் மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கலாம். ஆனால் எமக்கு அவ்வாறான நடைமுறையைப் பின்பற்று மாறு எந்த அறிவித்தலும் வரவில்லை என்றனர்.

இதேவேளை அரசு கொண்டு வரக்கூடிய பல்வேறு திட்டங்களும் சிங்களப் பெயர்களில் அறிமுகப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வடக்கு மாகாண சபை பிரேரணையை முன்மொழியும் சபையே ஒழிய அவற்றை நடைமுறைப்படுத்தும் சபையல்ல எனவும் குற்றம் சாட்டப்படுவது குறிப்பி டத்தக்கது. (எ-8)

# சிங்கள அறிவு இல்லாமையே தமிழ் மக்களின் அழிவுக்கு காரணம்

## இப்படிச் சொல்கிறார் அகிலதாஸ்



யாழ்ப்பாணம், டிசெ. 12
சிங்கள மொழியை கற்றுக்கொள்ளாக் காரணத்தாலேயே எமது தமிழ் இனம் கடந்தகாலங்களில் பெரும் அழிவைச் சந்தித்தது என்றார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் அகிலதாஸ் சிவக்கொழுந்து.

வடமராட்சி, நெல்லியடி மகளிர் மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சிங்கள மொழி தொடர்பான நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்களின்போது தமிழ் இளைஞர்கள் சிங்கள மொழி தெரியாததன் காரணமாக தவறுதலாக கைது செய்யப்பட்ட சம்பவங்களும் உள்ளன.

சிங்கள மொழி கற்பதற்கு நாம் மாணவர்களாக இருந்தகாலத்தில் தடை இருந்தது. முன்னைய அரசியல் தலைமைகளும் அதற்கு ஆதரவாகக் குரல் கொடுத்து வந்தனர். சிங்கள மொழி பேசும் தமிழர்கள் அனைவரும் துரோகிகளாகக் கணிக்கப்பட்டனர். அதனால் தமிழ் மக்கள் இரண்டாம் மொழியாக சிங்கள மொழியைக் கற்பதற்கு வாய்ப்புகள் குறைவடைந்தன. ஒரு சில படித்த உயர் பதவி வகித்தோர் மட்டுமே அதனைக் கற்றுக்கொண்டு தமது வாழ்வைத் திறம்பட நடத்தினர். ஏனைய வசதிகுறைந்தவர்கள் சிங்கள மொழியில் நாட்டம் இல்லாது கடைசிவரை புறந்தள்ளப்பட்டனர். ஆனால் இன்று உயர் பதவிகளை வகிப்பதற்கும் அரச வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் சிங்கள மொழி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சிங்கள மொழியைக் கற்பதனால் தமிழர்களின் அடையாளம் பறிபோய்விடும் என்பதை நான் முற்றாக மறுக்கின்றேன். ஆங்கிலம் கற்பதைப்போன்று சிங்கள மொழியையும் மொழி என்ற அடிப்படையில் கற்றுக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று சிங்கள மாணவர்களும் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ளவேண்டும். அதன் மூலம் இனங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஏற்படும் என எதிர்பார்க்கின்றேன்- என்றார். (எ-8)



# பனைமரக்காடு திரைப்படத்தை திரையிடும் முயற்சி கைவிடப்பட்டது

யாழ்ப்பாணம், டிசெ.12
யாழ்ப்பாணத்தில் உருவான முழு நீளத் திரைப்படமான 'பனைமரக்காடு'திரைப்படத்தை கொழும்பில் திரையிடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி இறுதி நேரத்தில் கைவிடப்பட்டது.

வறுமை ஆராய்ச்சி நிலையத்தினரானால் இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்தின் தரங்கிணி திரையரங்கில் கடந்த 5ஆம் திகதி பனைமரக்காடு திரைப்படம் திரையிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த நிலையில் படத்தின் தயாரிப்பாளர் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்பட்ட காரணத்தால் திரையிடப்பவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

# மயானங்களின் விவரங்களை அரசிதழில் பிரசுரிக்கவேண்டும்

யாழ்ப்பாணம், டிசெ. 12
வடக்கு மாகாணத்தில் உள்ள பொதுமயானங்களை இனம்கண்டு அவற்றின் எல்லைகள், அமைவிடம், பரப்பளவு, கிராம அலுவலர் பிரிவு என்பவை உள்ளடக்கிய விவரங்களைத் தொகுத்து அரசிதழில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கையை வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரன் வடக்கு உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள் ஊடாக மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் மாவட்டங்களின் கீழும் உள்ள மயானங்களை இனம்கண்டு பாதுகாத்து அவற்றை உடன் அபிவிருத்தி செய்யவேண்டும். மேலும் உள்ளூராட்சி சபைக்கு உட்பட்ட மயானக் காணிகளை அடையாளப்படுத்தி உரிய நில அளவையாளர் மூலம் வரைபடங்களைத் தயாரித்துக் காணிகள் சபைகளுக்குச் சொந்தமானவை என்பதை உறுதிப்படுத்தி ஆவணமாக்கவேண்டும்.

மயானங்கள் அரச காணிகளாயின் பிரதேச செயலாளர், மாவட்டச்செயலருடன் தொடர்புகொண்டு சபையின் பெயருக்கு மாற்றுதல் வேண்டும். சரியாக அடையாளம் காணப்பட்ட மயானக் காணிகளைப் பாதுகாப்பதற்காகச் சுற்றுமதில் அமைப்பதுடன், மயானம் சம்மந்தமான ஆவணம் ஒன்றை அரசிதழில் வெளியிடவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மேலும் வடக்கில் உள்ள மயானங்கள் சம்மந்தமான அபிவிருத்திக் குழுக்கள் சட்ட மதிப்புப் பெறும் வகையில் உப வசதிகளையாக்கி அதனடிப்படையில் அபிவிருத்திச் சபைக் குழுக்கள் தெரிவுசெய்யப்படுவதை உள்ளூராட்சி சபைகளின் செயலர்கள் முன்னிலைப்படுத்தவேண்டும் எனவும் விக்னேஸ்வரனிடம் வலியுறுத்தப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கை. (எ-50)

### காணாமற்போனோர் பணியகத்தின் ஆணைக்குழுவில்

# மூவரே தமிழ்மொழி பேசுபவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.12
காணாமற்போனோர் பணியகத்தின் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்க பரிந்துரை செய்யப்பட்ட எழுவரில் மூவர் மட்டுமே தமிழ் மொழி பேசுபவர்கள் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இலங்கையில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள காணாமற்போனோர் செயலகத்தின் ஆணைக்குழுவின் முதன்மைப் பணியகத்தின் உயர்குழுவில் அங்கம் வகிக்கும் ஏழு பேரின் நியமனத்துக்காக அரச தலைவரிடம் பரிந்துரை செய்யப்பட்ட ஏழுபேரில் இரு தமிழர்களும் ஒரு முஸ்லிம் பிரதிநிதியுமாகவே மூன்று தமிழ் பேசும் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஜெயதீபா, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மனித உரிமைச் செயற்பாட்டாளரான கணபதிப்பிள்ளை வேந்தன் மற்றும் முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த மீராக் ரகீம் ஆகியோரே அவர்கள். (எ-101)

### பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு கருத்தமர்வு

பன்னாட்டு மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயத்தின் ஏற்பாட்டில் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது. இயலாமையுடைய நபர்களது உரிமைகள் மற்றும் விடயங்களை அணுகுதல் தொடர்பான தொனிப்பொருளில் இந்தக் கருத்தமர்வு நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் அடைக்கல அன்னை ஆலய ஜெறோம் மண்டபத்தில் நடைபெறும் என்று மனித உரிமைகள் காரியாலயத்தின் பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் அறிவித்துள்ளார். அரச, அரச சார்பற்ற நிறுவனங்களைச்சேர்ந்தவர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரை இணைத்துக் கருத்தமர்வு இடம்பெறவுள்ளதுஎனஅவர் மேலும்தெரிவித்தார். (எ-8)

### மாணவர் மற்றும் ஆசிரியர்களுக்கான

# ஒழுக்கக்கோவை மாகாணசபையில் சமர்ப்பிக்கப்படும்

யாழ்ப்பாணம். டிசெ.12
வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவை விரைவில் மாகாண சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று மாகாண கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இறுதியாக நடைபெற்ற கல்வி ஆலோசனைக் குழுக்கூட்டத்திலேயே இவ்வாறு முடிவெடுக்கப்பட்டது என தெரிவிக்கப்பட்டது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

பாடசாலை மாணவர்கள் பாடசாலை வளாகத்தில் அலைபேசி பயன்படுத்துகின்றனர். இது தொடர்பாக கண்டறிவதற்கு ஆசிரியர்கள் மற்றும் மாணவத் தலைவர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் அலைபேசி பயன்படுத்துவதும் முற்றாக தடை செய்யப்பட வேண்டும். அதன்போதே வகுப்பறைகளில் கற்றல் செயற்பாடுகள் ஒழுங்கு முறையில் நடைபெறும்.

மாணவர்களின் சிகை அலங்காரம் மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற சிகை அலங்காரம் மற்றும் சீருடை சம்பந்தமாக பொதுவான நடைமுறை கொண்டுவரப்பட வேண்டும்.

கடமை நேரத்தில் ஆசிரியர்கள் இணையத்தளத்தில் தேவையற்ற பக்கங்களைப் பார்வையிடுவது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் அணிய வேண்டிய ஆடை, அணிகலன்கள் தொடர்பாக ஒரு பொதுவான நடைமுறையைக் கொண்டுவர வேண்டும். அப்போது தான் ஆசிரியர்களின் ஒழுக்கத்தைப் பின்பற்றி மாணவர்களையும் அதன்படி நடந்து கொள்ளுமாறு பணிக்க முடியும் என்று ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட கல்வி சார்ந்த உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

ஆகவே இந்த விடயங்களை கருத்திற் கொண்டு இறுதியாக தயாரிக்கப்பட்ட ஒழுக்கக் கோவையை மாகாண சபையில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

# யாழிலிருந்து விரைவில் விடைபெறுவேன்

### நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார்

யாழ்ப்பாணம், டிசெ.12
'யாழ்ப்பாணத்துக்கு நான் வருகை தந்ததற்கான நோக்கத்தை, பொறுப்பை நிறைவேற்றிவிட்டேன். மட்டக்களப்புக்குச் சென்று அங்குள்ள மக்களுக்குச் சேவையாற்ற விரும்புகின்றேன். அதற்கான மாற்றல் விரைவில் எனக்கு வரும்.'



இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த விருந்துபசார நிகழ்வு மற்றும் இடமாற்றலாகும் உத்தியோகத்தர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதிபதிகள், சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்த ஒன்றே நீதிமன்றக் குடும்பம். இந்த மூன்று தரப்பினரிடமும் ஒற்றுமை அவசியம். அதுவே எனது சேவையின் குறிக்கோளாகும். கிழக்கு மாகாண மக்களுக்குச்சேவையாற்றவேண்டும் என்பது எனது அவா. அதற்காக நான் யாழ்ப்பாணத்திலிருந்து விடைபெறும் காலம் நெருங்கிவிட்டது. அந்த மாவட்ட மக்களுக்கு நான் சேவையாற்றவேண்டும்- என்றார். (106)

# பாடசாலைகளில் இடம்பெறும் பாலியல் துர்நடத்தைகளுக்கு வலயக் கல்விப் பணிமனை எடுத்த நடவடிக்கை என்ன?

### ஆசிரியர்கள் சிலர் பகிரங்கக் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ.12
வவுனியா மாவட்டத்தில் இடம்பெறும் பாடசாலை மாணவர்கள் மீதான ஆசிரியர்களின் பாலியல் வன்புணர்வுகளுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களின் வினைத்திறனற்ற செயற்பாடுகளே காரணம் என சக ஆசிரியர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

வவுனியாவில் அண்மையில் இடம்பெற்ற பாடசாலை மாணவிகள் மீதான பாலியல் வன்புணர்வு தொடர்பாக மாவட்டத்துக்குட்பட்ட ஆசிரியர்கள் சிலரிடம் வினவியபோதே அவர்கள் இவ்வாறு சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாப் பாடசாலைகளில் மாணவர்கள் மீது ஆசிரியர் சிலர் மேற்கொள்ளும் பாலியல் துர்நடத்தைகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையை வவுனியா வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மேற்கொள்வதில்லை. இதன் காரணமாக ஆசிரியர்கள் துணிவுடன் இந்தச் செயற்பாடுகளை மேலும் மேலும் மேற்கொண்டு வருகின்றனர். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இறுக்கமாகச் செயற்பட்டால் ஆசிரியர்கள் இத்தகைய செயற்பாடுகளை குறைத்துக்கொள்வார்கள் அல்லது அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுமாட்டார்கள்.

வவுனியாவில் கடந்த காலங்களில் பாலியல் துர்நடத்தைகள் இடம்பெற்ற போதும் ஆசிரியர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை. வலயக் கல்வி அலுவலகம் நடவடிக்கை மேற்கொண்டிருந்தால் பாடசாலைகளில் இடம்பெறும் பாலியல் துர்நடத்தைக்கு இன்று முழுக்குப் போட்டிருக்க முடியும்.

அண்மையில் வவுனியா கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஒன்றில் புதிதாக நியமனம் கிடைத்த பயந்த சுபாவமுடைய ஆசிரியை ஒருவரை அதே பாடசாலையின் ஆசிரியர் ஒருவர் கட்டி அணைத்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த ஆசிரியருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையையும் வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கொள்ளவில்லை.

அதேபோன்று பாடசாலை மாணவி ஒருவர் ஆசிரியரால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது எனக் கூறப்படுகிறது. இது தொடர்பில் பணிப்பாளர் அந்த ஆசிரியர் மீது விசாரணைகளை முன்னெடுக்கவில்லை. பொலிஸாருக்குக் கூடத் தெரியப்படுத்தவில்லை.

தற்போது அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ளார். வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இவ்வாறான விடயங்களை கண்டும் காணாததுமாக விட்டு விடுகின்றனர்.

எனவே வவுனியா மாவட்டத்திலுள்ள வலயக்கல்விப் பணிப்பாளர்கள் வினைத்திறனாகச் செயற்பட்டு பாடசாலைகளில் ஆசிரியர்களால் மாணவர்கள் மீது இடம்பெறும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முன்வரவேண்டும் என்றனர்.

ஆசிரியர்களுடைய குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்துக் கேட்பதற்கு வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளருக்கு தொடர்பை ஏற்படுத்தியிருந்தோம் ஆனால் அவர் அதைத் துண்டித்தார். வவுனியா தெற்குப் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கு பலமுறை தொடர்பை ஏற்படுத்தியிருந்தும் பயனளிக்கவில்லை. (எ-21)

## விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், டிச. 12
உலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு போதை மற்றும் புகைத்தலுக்கு எதிராக பொதுமக்களிடத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபவனியொன்று யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கொழும்பு நகர் மையம் அமைப்பு மற்றும் கழகங்கள், பொலிஸ் திணைக்களம், சமூக அமைப்புக்கள் ஆகியன இணைந்து 'போதையற்ற உலகை கட்டி எழுப்புவோம்' எனும் தொனிப்பொருளில் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

பேரணி யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் ஆரம்பமாகி வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக நிறைவடைந்தது.

சமுதாயச் சீரழிவை ஏற்படுத்தும் போதைப்பொருள் பாவனை மற்றும் புகைத்தல் பழக்கங்களை இல்லாதொழிக்கும் விழிப்புணர்வு பதாதைகளைத் தாங்கியவாறு பாடசாலை மாணவர்கள், சுகாதார ஊழியர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் எனப் பலர் பேரணியில் கலந்து கொண்டனர்.

அத்துடன் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகளும் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றன. (எ-8)

### மாகாண மட்டத்தில் இடம்பெறும் பன்னாட்டு

# சிறப்புத்தேவையுடையோர் தினநிகழ்வு வவுனியாவில்

வவுனியா, டிசெ.12
பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினம் இந்த முறை வவுனியாவில் இடம்பெறவுள்ளது. வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சமூகசேவைகள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் வனஜா செல்வரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக 5 மாவட்டங்களையும் சேர்ந்த 5 இளைஞர்கள் அழைக்கப்படுகின்றனர். முல்லைத்தீவிலிருந்து இருந்து ப.தனுஷா, கிளிநொச்சியில் இருந்து ச. ரஜீபன், வவுனியாவில் இருந்து ந.பாத்திமா ஹிக்மா, மன்னாரில் இருந்து த.அபிஹாஜினி யாழ்ப்பாணத்தில் இருந்து வி.அபிவர்மன் ஆகியோரே அழைக்கப்பட்டுள்ளனர்.

மதிப்புறு விருந்தினர்களாக வவுனியா மாவட்டச் செயலர் சோமரத்ன விதானபத்திரன, பிரதேச செயலாளர்கள் கே. பரந்தாமன், கே.உதயராசா, கே.சிவகரன் மற்றும் எஸ்.ஜானக, திணைக்களங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள், மூத்தோர்கள், பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் அமைப்பின் பிரதிநிதிகள், பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் எனப்பலரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

> இதில் சிறப்பு நிகழ்வாக பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினத்தை யொட்டி நெல்லி ஸ்ராரின் ஏற்பாட்டில் நடைபெற்ற வினாடி வினாப் போட்டியின் இறுதிச்சுற்று நேரடியாக இடம்பெறவுள்ளது.

இதில் சிறப்பு நிகழ்வாக பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினத்தை யொட்டி நெல்லி ஸ்ராரின் ஏற்பாட்டில் நடைபெற்றவினாடிவினாப்போட்டியின் இறுதிச்சுற்று நேரடியாக அரங்கில் இடம்பெறவுள்ளது. இதில் வவுனியா மாவட்டச் செயலக அணியை எதிர்த்து வவுனியா வடக்குப் பிரதேச செயலக அணி போட்டியிடவுள்ளது.

நிகழ்வில் பிரதேச செயலகங்களில் சமூகசேவையாற்றிவரும் சமூகசேவையாளர்களும் மதிப்பளிக்கப்படவுள்ளனர். மாற்றுத்திறனாளிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. கடந்த காலங்களில் மாகாண மட்ட பன்னாட்டு சிறப்புத் தேவையுடையோர் தினம் கைதடி நவீல்ட் பாடசாலையிலேயே நடைபெற்று வந்தது. இந்த வருடம் அது மாற்றியமைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (எ-21)

### தொடருந்து அத்தியாவசிய சேவை:

# அரசிதழுக்கு நாடாளுமன்றம் அனுமதி

கொழும்பு, டிசெ. 12

தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் வகையில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் கடந்த சனிக்கிழமை வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிப்புக்கு நாடாளுமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது. கூட்டு எதிரணி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலேயே மேற்படி அரசிதழுக்கு அங்கீகாரம் கோரும் பிரேரணை 44 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அரசிதழ் அறிவிப்புக்கு நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கடந்த சனிக்கிழமை 2018ஆம் நிதியாண்டுக்கான வரவு செலவுத் திட்டம் மீதான வாக்கெடுப்பைத் தொடர்ந்து சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும், குறித்த அரசிதழை நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளை மீறி அரசு சமர்ப்பிக்கின்றது என்று கூட்டு எதிரணியும், மக்கள் விடுதலை முன்னணியும் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்ததுடன், அரசிதழ் அறிவிப்பின் பிரதிகளை கூட்டு எதிரணியினர் சபையில் கிழித்தும் வீசியிருந்தனர்.

இதன் காரணமாக அரசிதழை சபைக்கு ஆற்றுப்படுத்தும் வகையில் சபாநாயகர் வாக்கெடுப்பை நடத்தியிருந்தார். வாக்கெடுப்பில் அரசிதழைச் சமர்ப்பிக்க 127 பேர் ஆதரவு தெரிவித்தமையால் அரசிதழ் சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. குறித்த அரசிதழ் அறிவிப்பு மீது நாடாளுமன்றில் நேற்றுக் காலை 9.30 மணிமுதல் 10.30 மணிவரை விவாதம் நடத்தப்பட்டது. பின்னர் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதன்போதே 44 மேலதிக வாக்குகளால் அரசிதழுக்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.

அரசிதழுக்கு ஆதரவாக 52 வாக்குகளும், எதிராக 8 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. கூட்டு எதிரணி மற்றும் மக்கள் விடுதலை முன்னணியும் எதிர்த்து வாக்களித்திருந்தன. (5,31)

# மைத்திரியின் கோட்டையில் மகிந்த அணி முதல் வேட்புமனு

### நேரடி மோதலுக்கு அறைகூவல் விடுவிப்பு

கொழும்பு, டிசெ. 12

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் கோட்டை எனக் கருதப்படுகின்ற வடமத்திய மாகாணத்தில், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான முதல் வேட்புமனுவை நேற்றுத் தாக்கல் செய்தது மகிந்த அணி.

93 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் நேற்றுக் காலை ஆரம்பமானது. எதிர்வரும் 14ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ய முடியும்.

முதல் நாளான நேற்று முதலாவது வேட்புமனுவை, தாமரை மொட்டு சின்னத்தில் களமிறங்கும் மகிந்த அணியே அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தில் தாக்கல் செய்துள்ளது.


அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள, கல்நெவ பிரதேச சபையில் மகிந்த அணியில் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களின் விவரம் கையளிக்கப்பட்டுள்ளது. வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றிருந்தனர்.

ரஜரட்ட என்று சொல்லப்படுகின்ற வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், பொலன்னறுவை ஆகிய மாவட்டங்கள் இருக்கின்றன. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பிறப்பிடமாக பொலனறுவை மாவட்டம் திகழ்வதால், வடமத்திய மாகாணமானது மைத்திரியின் அரசியல் கோட்டையாகவே பார்க்கப்படுகின்றது.

'உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டு எதிரணி வெற்றிபெறும். உண்மையான சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் எங்கள் பக்கம்தான் உள்ளனர். இதை உறுதிப்படுத்தும் வகையில் மக்கள் ஆணை அமையும். சுதந்திரக் கட்சி எனக் கூறிக்கொள்பவர்கள் நேரடி மோதலுக்குத் தயாராக வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறினால் ஏற்றுக்கொள்ளலாம். இல்லையேல், கடும் போட்டி நிலவும்' என்று மகிந்தவின் ஆதரவாளர்கள் வேட்புமனுத் தாக்கலின் பின்னர் நேற்று முழக்கமிட்டனர். (5)

# ரணிலுடன் 'நோ டீல்'

### மகிந்த தெரிவிப்பு





கொழும்பு, டிசெ. 12

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தனக்கு எந்தவொரு 'டீலும்' கிடையாது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நேற்றுத் தெரிவித்தார்.

கூட்டு எதிரணி பக்கமிருந்து உறுப்பினர்கள் சென்றாலும் எமது பலம் குறையாது. அரசியல் என்றாலேயே உள்வரவும், வெளிச்செல்லுகையும் இருக்கத்தான் செய்யும். எமது பக்கம் திருடர்கள் இருந்தனர் என்று அன்று கூறினார்கள். அவ்வாறு இருந்த திருடர்கள்தான் இன்று அரசு பக்கம் இருக்கின்றனர்.

அதேவேளை, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் எனக்கு எந்தவொரு டீலும் கிடையாது. அவருடன் டீல் போடவும் முடியாது. தற்போது அரசுக்குள் இருந்துகொண்டு டீல் போடுபவர்களே என் மீது விமர்சனம் முன்வைக்கின்றனர், என்றும் மகிந்த மேலும் கூறினார். (5)

## விமல் அணியிலிருந்து மூவர் மைத்திரி அணிக்கு தாவல்

தேசிய சுதந்திர முன்னணியின் பிரதித் தலைவர் வீரகுமார திசாநாயக்க, தேசிய அமைப்பாளர் பியசிறி விஜேநாயக்க மற்றும் வடமத்திய மாகாண சபை உறுப்பினர் பி.பீ.குமார ஆகியோர் நேற்று முற்பகல் அரச தலைவர் அலுவலகத்தில் மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையைப் பெற்றுக்கொண்டனர்.

அரச தலைவர் அலுவலகத்தில் அரச தலைவர் மைத்திரிபாலவைச் சந்தித்த இவர்கள் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக அரச தலைவர் முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளதுடன், எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வெற்றிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவுள்ளதாகத் தெரிவித்தனர். (5)

கணிதம்
தரம் 6 - 11 வரையான வகுப்புக்களுக்கு தனியாகவோ, குழுவாகவோ வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.
077 712 2968

எங்கள் பெறுமதி மிக்க வாடிக்கையாளர்களுக்கு நன்றிகளுடன்....
வனிக்கா சேஜிக்கல்ஸ்
தலைநகரில் தனித்துவமான எல்லாவித சத்திரசிகிச்சை உபகரணங்கள் உடல் நலம் பேணும் உபகரணங்கள் மற்றும் எல்லாவித ஆய்வு கூட உபகரணங்களுடன் இராசயனங்களினதும் காட்சிக்கூட்டம்
குழந்தைகளுக்கான Cute Baby - Sensitive Wipes மற்றும் Mum & Me Diapers இற்கும் ஏக விநியோகஸ்தர்கள்
203, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 222 0077
Hotline 077 442 2367
E-mail -vanisurgi@sltnet.lk

ஏ. எம். ஐ. முன்பள்ளி மழலைகளின் மகிழ்வு இல்லம்
யாழ். நகரில் முதலாவது ஏ.எம்.ஐ. முன்பள்ளி
ஆரம்பம் ஜனவரி 2018
முன்பள்ளிகள் மழலைகளின் சுயமான செயற்பாடுகளை மகிழ்வான சூழலில் ஊக்குவித்து அவர்களின் கற்றல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துகின்றன.
அனுமதி 8 ஜனவரி 2018
ஏ.எம்.ஐ முன்பள்ளி மழலைகளின் மகிழ்வு இல்லம்
இல. 171, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 077 830 7665
மின்னஞ்சல் : amimontessorijaffna@gmail.com



# ஊழல்வாதிகள், போதை மன்னர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்காதீர்!

## அரசியல் கட்சிகளிடம் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 12

கடந்த காலங்களைப் போன்று இந்தத் தேர்தலிலும் மோசடியாளர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல் மன்னர்களைத் தெரிவுசெய்ய வேண்டாம் என்று முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன.

அரசியல் கட்சிகள் தமது வேட்பாளர் பட்டியலில் இப்படிப்பட்டவர்களை உள்வாங்கியிருந்தால் உடனே அவர்களது பெயர்களை அகற்றும்படியும் மேற்படி அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான கட்டுப்பணம் மற்றும் வேட்புமனுத் தாக்கல் செயற்பாடு நாடளாவிய ரீதியில் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில், முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களின் கூட்டணியான 'மார்ச் 12' இயக்கம் கொழும்பில் நேற்று செய்தியாளர் சந்திப்பு நடத்தியது.

இதில் கலந்துகொண்ட பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி கருத்து வெளியிடுகையில்,

மோசடியாளர்களை அரசியல் கட்சிகள் தெரிவுசெய்து வேட்பாளர்களாக முன்னிறுத்தினால் மார்ச் 12 இயக்கத்தின் ஊடாக அவர்களை நாங்கள் அம்பலப்படுத்தத் தீர்மானித்துள்ளோம். இப்போதும் எமக்கு இது சம்பந்தமான முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நாட்டை போதைப்பொருள் கடத்தல்காரர்களிடம் இருந்து காப்பாற்றுங்கள். ஊழல், மோசடியாளர்கள் சம்பந்தமான முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

அதேபோல மணல் கொள்ளையர்கள், சட்டவிரோத மதுபான உற்பத்தியாளர்கள், தொழில்வாய்ப்பை வழங்குவதாக மக்கள் பணத்தை மோசடி செய்தவர்கள் ஆகியோரின் பொலிஸ் அறிக்கைகளும் எமக்குக் கிடைத்துள்ளன.

இப்படிப்பட்டவர்களை வேட்பாளர்களாக முன்னிறுத்தினால் அவர்களது இந்த இரகசியங்களை அம்பலப்படுத்துவோம்.

எதிர்வரும் தேர்தலில் இப்படியானவர்கள் வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டிருந்தால் அவர்களது பெயரை நீக்குமாறு கோருகிறோம்.

இந்தத் தெளிவுபடுத்தல்கள் மட்டக்களப்பு, கண்டி, களுத்துறையில் சிறப்பான முறையில் இடம்பெறுகின்றன. பல மாட்டங்களில் மார்ச் 12 இயக்கம் தனது செயற்பாட்டைச் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்கிறது. எனவே, நிறம், கட்சி என்று பாராமல் சிறந்தவர்களை மக்கள் தெரிவுசெய்ய வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம் - என்றார். (5)



## விபத்தில் சிறுமி உட்பட ஐவர் படுகாயம்

பொலனறுவை, டிசெ.12

பொலனறுவை மனம்பிட்டிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில், சிறுமி உட்பட ஐவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது.

அரலகன்வில பகுதியிலிருந்து பொலனறுவை மருத்துவமனைக்கு சென்றுகொண்டிருந்த முச்சக்கர வண்டியை பின்னால் வந்த வாகனம் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கரவண்டி சாரதி மற்றும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரும் பொலனறுவை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதில் சிறுமியின் நிலை கவலைக்கிடமாக உள்ள நிலையில், கண்டி தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலனறுவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற)

# இளையோரின் தொழில்நுட்ப அறிவு அதிகரிப்பு

## தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவிப்பு

இலங்கையில் 15 - 19 வயதிற்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலரது தொழில்நுட்ப அறிவு 60.7 சதவீதம் உயர்வடைந்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டு முதல் காலாண்டு தொடக்கம் இறுதிக் காலாண்டு வரை மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் படி, கல்வி அறிவுடைய குறிப்பாக உயர்தரம் மற்றும் உயர் கல்வியைப் பெற்றுள்ளவர்களது தொழில்நுட்ப அறிவு மட்டம் 71.2 சதவீதமாக உயர்வடைந்துள்ளது. ஆங்கில மொழியில் தேர்ச்சிப் பெற்றவர்களின் வீதம் 71.1 ஆகக் காணப்படுகின்றது.

5 வயதிற்கும் 69 வயதிற்கும் இடைப்பட்டவர்களது தொழிநுட்ப அறிவு வீதம் 28.3 சதவீதமாக காணப்படுகின்றது. 41.1 வீதமான தொழிநுட்ப பாவனை நகர் பகுதிகளிலும் 26.5 சதவீதம் கிராமிய பகுதிகளிலும் தொழில்நுட்ப அறிவு விருத்தி பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## கிளிநொச்சியிலும், நுவரெலியாவிலும் சாவி சின்னத்தில் தனித்துப் போட்டி

### லங்கா சமசமாஜக் கட்சி

கொழும்பு, டிசெ. 12

தமிழ் மக்கள் லங்கா சமசமாஜ கட்சி மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிளிநொச்சி மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தனித்துப் போட்டியிட தீர்மானித்துள்ளோம் என்று கட்சித் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் நேற்றுத் திங்கட்கிழமை தெளிவுபடுத்துகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போதைய அரசு நாட்டின் நலன்களுக்கு தீங்கு ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகிறது. தேசிய பொருளாதாரத்தை பன்னாடுகளுக்கு சூறையாட இடமளித்துள்ளது. 2012ஆம் ஆண்டு நல்லாட்சி என்ற போர்வையில் ஆட்சி பீடமேறிய தற்போதைய அரசின் உண்மையான தோற்றம் வெளிப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டின் ஆட்சி மாற்றத்துக்கான ஆரம்ப கட்ட தேர்தலாக எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை லங்கா சமசமாஜ கட்சி பயன்படுத்தும்.

இலங்கையில் பரந்து வளரும் தமிழர்கள் எமது கட்சி மீது அதீத நம்பிக்கை வைத்துள்ளனர். எதிர்வரும் தேர்தலில் சாவி சின்னத்தில் போட்டியிடுவதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம். கிளிநொச்சியிலும் நுவரெலியாவிலும் லங்கா சமசமாஜ கட்சி தனித்து போட்டியிடும். ஏனைய பகுதிகளில் முன்னாள் அரச தலைவர் தலைமையிலான இலங்கை பொதுமக்கள் முன்னணியிலும் போட்டியிடுவோம். எமது கட்சிக்கென்று ஒரு நிலையான கொள்கை உள்ளது. அதில் வறுமை ஒழிப்பு, தேசிய ஒற்றுமை உள்ளிட்ட முக்கியமான பல விடயங்களைக் கொள்கையாகக் கொண்டு நாங்கள் செயற்பட்டு வருகின்றோம்.

இலங்கை மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்களை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். 1997ஆம் ஆண்டிலிருந்தே இந்த ஆக்கிரமிப்பு இலங்கைக்குள் ஊடுருவியது. அதன் பின்னர் கறுப்பு ஜூலை மற்றும் மூன்று தசாப்த காலப் போர் என்று பல அழிவுகளை இலங்கை எதிர்கொண்டது. தொடர்ந்தும் இந்த நிலை இடம்பெற அனுமதிக்க முடியாது. தற்போது ஆட்சி அதிகாரத்திலுள்ள தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஆகியோருக்கு எதிராக மக்கள் இன்று குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளார்கள். எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் சிறந்த பாடத்தை தற்போதைய அரசுக்கு புகட்டுவார்கள் - என்றார். (5,31)

### 05 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
பொன்னையா சண்முகரத்தினம்



மலர்வு 1937 . 03 . 10
உதிர்வு 2012 . 11 . 23
திதி: தசமி

ஆண்டுகள் ஐந்தென்ன - ஐம்பது
ஓடி மறைந்தாலும் - உங்கள் நினைவு
என்றும் எம் நெஞ்சை விட்டு நீங்காது

டச்சு வீதி, சோலையம்மன் கோயிலடி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 27 . 02 . 1928



மறைவு 14 . 11 . 2017

அமரர் இராமுப்பிள்ளை தர்மலிங்கம்
(இளைப்பாறிய தபாலதிபர் - சுன்னாகம்)

கடந்த 14.11.2017 செவ்வாய்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இராமுப்பிள்ளை தர்மலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் மற்றும் உதவிகள் அளித்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்து கொள்வதோடு அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் இன்று 12.12.2017 கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 14.12.2017 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் அந்தியேட்டி கிரியைகளும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இடம் பெறும். தொடர்ந்து இடம் பெறும் மதிய போசன நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

இல :- 150 கே.கே. எஸ் வீதி,
இலங்கை வங்கி அருகாமை
சுன்னாகம்.

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்.
077 803 9435

### மரண அறிவித்தல்

பிறப்பு 30 . 03 . 1930



இறப்பு 11 . 12 . 2017

திருமதி தையல்நாயகி கதிரேசபிள்ளை

நயினாதீவு 7ஆம்வட்டாரத்தைப்பிறப்பிடமாகவும், பனிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி கதிரேசபிள்ளை நேற்று (11.12.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் நயினாதீவைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமநாதன் - இராமாசி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மருகளும், காலஞ்சென்ற கதிரேசபிள்ளையின் அன்பு மனைவியும், இராஜராஜேஸ்வரி (இலங்கை), நாகேஸ்வரன் (UK), திருமங்கை (கனடா), செல்வராஜன் (UK), நித்தியானந்த ராஜா (கனடா), பேரின்பநாதன் (UK), ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற விஜயரெட்ணம் மற்றும் மணிமேகலை (UK), மோகனதாஸ் (கனடா), உமாதேவி (UK), குமுதா (கனடா), தேவாம்பிகை (UK) ஆகியோரின் அன்பு மாமியாரும், சாரங்கன், காயத்திரி, சத்தஜி, சாயிஜி, வைதேகி, நித்லா, நிவேதன், சுகேன், கஜேன், சகானா, கஜனி, சாய்ராம், மதுஷன், மீரா ஆகியோரின் பேர்த்தியும், பிரணீஷின் பூட்டியும், காலஞ்சென்றவர்களான வீரகத்தி, பரமலிங்கம், சதாசிவம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான நேசமலர், தேன்மொழி அம்மை மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் மைத்துனியும், முத்துப்பிள்ளை, சுப்பிரமணியம் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.12.2017 வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

021 222 0062

# மகிந்தவைக் கண்டு ஐ.தே.க. அஞ்சாது

## ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ. 12
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அணி குறித்துச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அச்சப்படலாம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இந்த இரண்டு கட்சிகள் தொடர்பிலும் எவ்விதமான அச்சமும் கிடையாது. மக்களிடம் சென்று கூட்டணிஅரசில் ஐக்கிய தேசியக் கட்சியின் உண்மையான பங்களிப்பைக் கூறுங்கள். மக்களின் ஆதரவு கிடைக்கும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் கட்சியை எவ்வாறு ஒழுங்கமைப்பது என்பது குறித்து மூத்த உறுப்பினர்களுடனான சந்திப்பு அலரி மாளிகையில் நடைபெற்றது. அந்தச் சந்திப்பிலேயே தலைமை அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போட்டியிடும் எதிர்த் தரப்புகள் எவ்வாறான நிலமைகளில் உள்ளனர் அவர்கள் யார் என்பது தொடர்பில் அறிய வேண்டி இருந்தது. ஆனால் இன்று அந்தத் தகவல்கள் வெளிவந்து விட்டன.
இனி ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறு மக்கள் மத்தியில் செல்ல வேண்டும் என்பதையே சிந்திக்க வேண்டும். வாழ்க்கைச் செலவு விவகாரம் மக்கள் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் உள்ள பொதுவான சவாலாகும். மேலும் தேசிய சுதந்திர முன்னணியின் இரண்டு முக்கிய புள்ளிகள் கட்சி தாவுவதற்கான பேச்சுக்களை முன்னெடுத்துள்ள நிலையில் ஐக்கிய தேசியக்கட்சியில் வாய்ப்பு அளிக்கப்படாத இருவர் சுதந்திரக் கட்சியில் இணைந்து கொண்டுள்ளனர்.
முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைப் பார்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி அச்சப்படலாம். ஐக்கிய தேசியக் கட்சிக்கு அந்த அச்சப்பாடு இல்லை. தனிநபருக்குள்ள குறிப்பிட்டளவு வாக்கு வங்கி ஒரு போதும் அதிகரிக்காது. ஆகவே புதிய கூட்ட ணிகள் எவ்வித மான சவாலையும் எமக்கு ஏற்படுத்தாது - என்றார். (5)

# போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

திருகோணமலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் பகல் ஒரு மணியளவில் 40 போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் திருகோணமலைப் பிராந்தியப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.
பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்துச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன் போது சந்தேக நபர் 40 போதை மாத்திரைகளுடன் மாட்டியுள்ளார். மேலும், கிண்ணியா கச்சக் கொடித் தீவுச் சந்தியில் வைத்து எட்டுக் கிராம் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார். (5,41)

இடைக்கால அறிக்கை மீதான விவாதம்

# ஆள்கள் இல்லாததால் நாடாளுமன்றம் ஒத்திவைப்பு


கொழும்பு, டிசெ. 12
புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை மீது ஐந்தாம் நாள் விவாதம் நடத்த அரசமைப்பு நிர்ணய சபை கூட்டப்பட்ட போதும் உரையாற்ற எவரும் இல்லாமையால் சபை ஒத்திவைக்கப்பட்டது.
அரசமைப்பு நிர்ணய சபையின் தலைவர் கருஜெயசூரியவினால் ஆளும் மற்றும் எதிர்கட்சி உறுப்பினர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டபோதும் உரையாற்றுவதற்காக அவர்கள் சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை. சபை ஒத்திவைக்கப்பட்டது.
இதுவரை அரசமைப்பு நிர்ணய சபையில் நான்கு நாள்கள் விவாதம் நடத்தப்பட்டது. இந்த நான்கு நாள் விவாதங்களிலும் 22 பேர் உரையாற்றவில்லை. அதில் 10 பேருக்கும் உரையாற்ற சந்தர்ப்பமளிக்கும் வகையில் நேற்றுக் முற்பகல் 11.30 மணிமுதல் 12.30 மணிவரை அரசமைப்பு நிர்ணய சபை கூட்டப்பட்டது.
இதன் காரணமாக 11.30இற்கு கூட்டப்பட்ட அரசமைப்பு நிர்ணய சபை 11.32 மணிக்குள் ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்தார். (5,31)

# விஜயதாசவின் குற்றச்சாட்டை சபாநாயகர் நிராகரிப்பு

நாடாளுமன்றம் சட்டரீதியாகவே அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளதாகச் சபாநாயகர் கரு ஜெய சூரிய நேற்று அறிவித்தார்.
நாடாளுமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டமை அரசமைப்புக்கு முரணானது என்று நீதி அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட விஜயதாச ராஜபக்ச தெரிவித்திருந்தார். இது தொடர்பில் சபாநாயகரிடம் மனுக் கையளித்திருந்தார். இதற்குப்பதிலளிக்கும்வகையிலேயே சபாநாயகர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
நாடாளுமன்றம் சபாநாயகர் கருஜய சூரிய தலைமையில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. தினப்பணிகளைத் தொடர்ந்து அரசமைப்பு நிர்ணய சபை விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னதாகக் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன, நாடாளுமன்றம் சட்டத்திற்கு முரணான வகையில் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டதாக உரிய காரணங்களை முன்வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச உங்களிடம் கடிதமொன்றை கையளித்திருந்தார். இதற்கு நீங்கள் பதிலை வழங்கவில்லை என்று கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சபாநாயகர், நாடாளுமன்றம் சட்டரீதியாகவே அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டுள்ளதென விஜயதாச ராஜபக்சவின் கடிதத்துக்கு நான் பதிலளித்துள்ளேன். இந்த விடயம் தொடர்பில் நான் ஊடகங்களுக்கு அறிவிக்காத போதிலும் அவருக்கு உரிய பதிலை வழங்கியுள்ளேன் - என்றார். (5,31)

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
09 . 11 . 1956



மறைவு
05 . 12 . 2015

யாழ் கைதடி - நாவற்குழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டிருந்த

## அமரர் கிட்டினர் நாகராசா

அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி
திதி: அபரபக்க தசமி

எங்கள் பாசத்தின் ஒளிவிளக்கே எங்கள் அன்பான அப்பாவே
ஆண்டுகள் இரண்டு ஆனதப்பா ஆனாலும் உங்கள் ஞாபகங்கள்
மீண்டும் மீண்டும் மனதில் உருண்டோட
மீளாமல் தவிக்கின்றோம் உங்கள் நினைவினிலே
உயிர் தந்து உடல் தந்து உங்கள் உழைப்பை தந்து உடனிருந்து எங்கள்
உயர்வுக்கு வழி அமைத்து கடும் நோயின் பிடியெல்லாம் கடந்து
கனகாலம் எம்மோடு கரிசனையாய் வாழ்வீர்கள் என்று நம்பி இருந்தோம்
கணப்பொழுதினில் வந்த செய்தி எங்களை எல்லாம் கதிகலங்க வைத்ததப்பா
உங்கள் இறுதி மூச்சு நின்றோட இன்றளவும் நம்ப முடியவில்லை
நீங்கள் இல்லாத வாழ்க்கையை காலங்கள் போகலாம் காயங்கள் மாறலாம்
நெஞ்சினில் உள்ள உங்கள் நினைவுகள் என்றும் நம்மை விட்டு போகாது
உங்கள் நினைவுகளை காலமெல்லாம் நாங்கள் சுமந்து நிற்போம்
நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்

கைதடி நாவற்குழி,
கைதடி.

குடும்பத்தினர்.

# வேலணை பிரதேச சபை 2018 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

**வேலணை பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன்சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் என்பவற்றை 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.**

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :-** 12.12.2017 முதல் 20.12.2017 மதியம் 2.00மணிவரை
**கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் திகதி :-** 21.12.2017 பி.ப 1.00மணிவரை
**கேள்வி திறக்கும் திகதி :-**21.12.2017 பி. ப 1.30மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்க படாத கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்க படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடியஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | வேலணைசெட்டிபுலம் மீன்சந்தை | 2000 | 5000 | 24,750 |
| 2 | வேலணைஅம்பிகைநகர் மீன்சந்தை | 2000 | 5000 | 12,870 |
| 3 | சரவணைமீன் சந்தை | 2000 | 5000 | 6,630 |
| | வேலணைதுறையூர் மொத்தமீன் விற்பனைச்சந்தையும் சந்தையில் அமைந்துள்ளகடைகளும் | | | |
| 4 | வேலணைதுறையூர்மீன்சந்தை(புதியகட்டடம்) | 2000 | 10,000 | 1,98,000 |
| 5 | கடைஇல-2 கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை | 2000 | 5000 | 28,440 |
| 6 | கடைஇல-4 கருவாட்டுகடை | 2000 | 5000 | 31,280 |
| 7 | கடைஇல-5 கருவாட்டுகடை | 2000 | 5000 | 31,280 |
| 8 | கடைஇல-6 கோழிக்கடை | 2000 | 5000 | 30,340 |
| | வேலணை பொதுச்சந்தை (6ஆம் வட்டாரம்) | | | |
| 9 | மரக்கறி/மீன் | 2000 | 5000 | 30,090 |
| 10 | சிற்றுண்டிச்சாலை | 2000 | 5000 | 27,600 |
| 11 | கோழிக்டை | 2000 | 10,000 | 99,100 |
| | புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும் | | | |
| 12 | மீன் / மரக்கறிசந்தை | 2000 | 5000 | 19,800 |
| 13 | கடை இல-5 சிற்றுண்டிச்சாலை | 2000 | 5000 | 14,060 |
| 14 | கடைஇல-6 | 2000 | 5000 | 46,200 |
| 15 | கடை இல-7 | 2000 | 5000 | 46,200 |
| 16 | கடை இல-2 (உப அலுவலகத்திற்கு அருகாமை) | 2000 | 9600 | 96,000 |
| 17 | புங்குடுதீவு மடத்துவெளி இளைப்பாற்று மண்டபமும் சிற்றுண்டிச்சாலையும் | 2000 | 5000 | 14,060 |

உதயன் பத்திரிகையில் 25.10.2017ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் உள்ள நிபந்தனைகள் தொடர்ந்து வலுவில் இருக்கும் என்பதோடு இது தொடர்பான மேலதிக விவரங்களை தலைமைக் காரியாலயத்தில் அலுவலகநேரத்தில் பார்வையிடமுடியும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**வேலணை.**

# கள்ளுக்கு கட்டுப்பாடு இனவாதச் செயற்பாடே!

## *சபையில் சுட்டிக்காட்டினார் சரவணபவன் எம்.பி.*

யாழ்ப்பாணம், டிசெ. 12

பனை, தென்னை சீவல் தொழில் என்பது தமிழ் மக்களின் ஒரு பகுதியினரால் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்படும் ஒரு தொழில். இந்தத் தொழிலை வீழ்த்தும் வகையில் கட்டுப்பாடு போடுவதும், பியர் விலையைக் குறைப்பதும் இனவாத நோக்கம் கொண்ட நடவடிக்கையாகவே நாம் பார்க்கிறோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்ட இறுதி நாளான சனிக்கிழமை, நிதி அமைச்சு மீதான குழு நிலை விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



**ஒதுக்கீடு போதாது**

போர் முடிந்த பின்பு இங்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து வரவு - செலவுத் திட்டங்களிலும் வடபகுதியின் அபிவிருத்திக்கும் மறுசீரமைப்புக்கும் நிதி ஒதுக்கப்பட்டது என்பது உண்மையே. அவை வடக்கின் தேவையை நிறைவு செய்வதற்கான தொகையின் மிகச்சிறு பகுதியாகவே இருந்தது மட்டுமின்றித் தேவைகளை நிறைவு செய்யப் பொருத்தமான வகையில் ஒதுக்கப்படவுமில்லை. இதில் மிகச் சிறுபகுதியே மக்களிடம் சென்றடைந்தது. இன்னும் சில திட்டங்களோ மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளும் வகையில் அமைந்திருந்தன. இந்திய வீட்டுத் திட்டத்தில் ஒரு வீட்டுக்கு ஐந்தரை லட்சம் ரூபா வழங்கப்பட்டது. வழங்கப்பட்ட வரைபடத்தின்படி வீட்டை அமைக்க எட்டு லட்சம் ரூபா தேவைப்பட்டது. போரில் பேரிழப்புக்களைச் சந்தித்த எமது மக்கள் அநியாய வட்டிக்குக் கடன் பெற்றோ அல்லது எஞ்சியிருந்த நகை நட்டுக்களை விற்றோ வீட்டை முழுமைப்படுத்தவேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டனர். இப்படிக் கடந்த காலங்களில் மக்களுக்கு வழங்கப்பட்ட சில நன்மைகளின் பின்னால்கூடத் தீமைகள் தொற்றி நின்றன.

**நம்பிக்கையூட்டுகிறது**

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் முன்னெப்பொழுதையும் விடப் பயனுள்ள விதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது எம்மை மகிழ்ச்சியடைய வைப்பதுடன் எம்மிடம் சில நம்பிக்கைகளையும் உருவாக்கியுள்ளது.

மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வது, முன்னாள் போராளிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கியவர்களுக்கான நிதியுதவி, 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் என்பவையும், அவற்றுக்கான நிதி ஒதுக்கீடுகளும் எமக்கு நம்பிக்கையூட்டும் வகையில் அமைந்துள்ளன. 50 ஆயிரம் வீட்டுத்திட்டம் எமது சூழலுக்குப் பொருத்தமான முறையில் கல்லாலும் சிமெந்தாலும் அமைக்கப்படுவது மகிழ்ச்சியளிப்பதாகும். பருத்தித்துறை, மயிலிட்டி, காரைநகர் ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடித்துறைமுகங்கள் நவீன வசதிகளுடன் அபிவிருத்தி செய்யப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. இவை எமது மீனவர்களுக்குப் பயன்படுமா? என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது.

இப்போது மயிலிட்டி, காரைநகர் ஆகிய பகுதிகளில் கடற்படையினரே நிலைகொண்டுள்ளனர். பாதுகாப்புக் காரணங்களைச் சொல்லிக் கடற்படையினர் அவ்விடங்களை விட்டு வெளியேற மறுக்கின்றனர். அதைவிட மீன்பிடித்துறைகளை வேறு இடங்களில் அமைக்கும்படியும் கூறுகின்றனர். தற்சமயம் உள்ள மீன்பிடித்துறைகள் மீனவர்கள் தங்கள் ஆயிரமாயிரம் ஆண்டுகள் அனுபவம் மூலம் பொருத்தமான இடங்களாகத் தெரிவு செய்யப்பட்டவை. கண்டத்திட்டுகள், நீரோட்டங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே பொருத்தமான இடங்கள் மீனவர்களால் தெரிவுசெய்யப்பட்டன. வேறு இடங்களில் மீன்பிடித்துறைகளை அமைக்கும்போது போதிய பயன்களை அடையமுடியாது. பாதுகாப்பு அமைச்சுடன் கலந்துரையாடி மேற்படித் துறைகளைக் கடற்படையினரிடமிருந்து விடுவிக்க வேண்டும். அதன் பிறகே அமைக்கப்படவுள்ள மீன்பிடித்துறைகளின் பயன்களை எமது மீனவர்கள் பெறமுடியும்.

**கட்டுப்பாடு ஏன் ?**

பனை, தென்னை என்பவற்றிலிருந்து கள்ளு இறக்குவது தடைசெய்யப்படும் என்று அரசிதழ் அறிவித்தல் விடுக்கப்பட்டது. பின்பு அது தவறான அறிவித்தல் எனவும், பனை, தென்னை என்பவற்றிலிருந்து கள்ளிறக்கப் பிரதேசச் செயலரிடமோ அல்லது கலால் திணைக்களத்திடமிருந்தோ அனுமதிபெற வேண்டுமென்று அறிவிக்கப்பட்டது. ஏன் இந்தக் கட்டுப்பாடு என்பதை எம்மால் புரிந்து கொள்ளமுடியவில்லை. வடபகுதியில் பனை, தென்னை கள் உற்பத்தி, விற்பனை என்பன கூட்டுறவுச் சங்கம் மூலமே இடம்பெறுகிறது. கள் இறக்குவதற்கான அனுமதியைக் கூட்டுறவுச் சங்கமே வழங்குகிறது. மேலதிகமாகக் கலால் திணைக்களத்திடமோ, பிரதேசசெயலரிடமோ அனுமதிபெறும்போது தொழிலாளர்கள் அதற்கான கட்டணத்தையும் செலுத்த வேண்டும். கள்ளின் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புண்டு.

அதேவேளை பியரின் விலை குறைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கள்ளின் விலை அதிகரிக்க, பியரின் விலை குறைவடைய நிச்சயமாக கள் விற்பனை வீழ்ச்சியடையும். இன்று வடக்கில் சீவல் தொழிலை நம்பி 20 ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. கள் விற்பனை வீழ்ச்சியடையும்போது அந்த மக்களின் எதிர்காலம் என்ன? இங்கு முக்கியமான விடயம் கித்துள் கள்ளுக்கு இந்தக் கட்டுப்பாடு இல்லை. மாறாக நவீன இயந்திரங்களை இறக்குமதி செய்து மேலும் இத்தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் முக்கிய வாழ்வாதாரத்தில் ஒன்றான தென்னை சம்பந்தப்பட்ட சீவல் தொழிலுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்படும் அதே வேளையில் சிங்கள மக்களின் தொழிலான கித்துள் கள்ளிறக்கக் கட்டுப்பாடு இல்லை. இது ஒரு இன ஒடுக்குமுறை சார்ந்த நடவடிக்கையாகவே நாம் பார்க்கிறோம்.

கள்ளுக்கான மேற்படி கட்டுப்பாட்டை நீக்குவதுடன், பியர் விலை குறைப்பை மீளப்பெற வேண்டுமெனவும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றேன். கடந்த ஆட்சியாளர்களின் விசுவாசிகளும், இனவாதிகளும் இன்னும் அதிகாரிகள் மட்டத்தில் அவர்கள் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளை முடுக்கிவிடுவார்கள் என்பதில் அமைச்சர் அவர்கள் விழிப்பாக இருக்கவேண்டும் - என்றார். (5)

# அரிசியை மதுபான உற்பத்தியின் மூலப்பொருளாக நாம் அறிவிக்கவில்லை

## *மங்கள சமரவீர சபையில் தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 12

அரிசியை மதுபான உற்பத்தியின் மூலப்பொருளாக நாம் ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை. எத்தனோல் உற்பத்தி மூலப்பொருளுக்கு வரி அறிவிடவே தீர்மானம் எடுத்தோம். அதற்கு மாறாக மதுபான உற்பத்தியின் மூலப்பொருளாக அரிசி அங்கீகரிக்கப்பட்டது மகிந்தவின் ஆட்சியில்தான்.

இவ்வாறு நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டம் மீதான இறுதி நாள் விவாதம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:



இந்த நாட்டின் மதுபான உற்பத்திக்கு அரிசி பயன்படுத்தப்போவதாக எமது அரசு மீது குற்றம் சுமத்தியிருந்தனர். எனினும் நாம் ஒருபோதும் அரிசியை மதுபான உற்பத்தியின் மூலப்பொருளாக அங்கீகரிக்கவில்லை. இது ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட விடயமாகும். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின் போதே மதுபான உற்பத்திக்கு மூலப்பொருளாக அரிசியும் சோளமும் அறிவிக்கப்பட்டது.

எமது வரவு- செலவுத் திட்டத்தில் எத்தனோல் உற்பத்திக்கு வரி அறிவிட்டோம். ஸ்பிரிட் மூலப்பொருளுக்கு லீற்றருக்கு 5 முதல் 10 ரூபா வரை வரி அறவிட்டோம். நாம் ஒருபோதும் அரிசியை மதுபான உற்பத்திக்கான மூலப் பொருளாக அறிவிக்கவில்லை - என்றார். (5,31)

பிணைமுறி

# மோசடியாளர்களுக்கு வாழ்நாள் சிறை

## *அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு*

கொழும்பு, டிசெ. 12

பிணைமுறி மோசடியாளர்களை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைப்போம். அதுவரைக்கும் எமது போராட்டம் ஓயாது என்று விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர சபையில் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வரவு- செலவுத் திட்ட விவாதத்தில் கடந்த சனிக்கிழமை கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய வங்கிப் பிணைமுறி மோசடி மூலம் பெரிய கொள்ளையில் ஈடுபட்டவர்களுக்குச் சட்டரீதியான நடவடிக்கையெடுக்க முற்படும் போதும் நாடகம் ஆடுவதாகச் சில ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. தவறுகளுக்குச் சட்டரீதியான நடவடிக்கை எடுத்துத் திருடர்களை வெளிப்படுத்த முனைவது நாடகமா? பிணைமுறி மோசடியாளர்களுக்குக் கட்டாயம் தண்டனை வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட சொத்து இழப்புக்கள் மீளப் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

பிணைமுறி மோசடி குறித்து விசாரணை செய்யும் அரசதலைவர் ஆணைக்குழுவின் ஆயுட்காலம் எதிர்வரும் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது. காலம் கடந்தாலும் மோசடியாளர்களுக்குக் கட்டாயம் தண்டனை வழங்கப்பட வேண்டும். பிணைமுறி மோசடியாளர்களுக்கு ஆயுள் தண்டனையை வழங்க வேண்டும். அதுவரைக்கும் எமது போராட்டம் ஓயாது - என்றார். (5,31)

# அரசின் இயலாமையின் வெளிப்பாடே இராணுவத்தினரின் களமிறக்கம்

## *ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் குற்றச்சாட்டு*

கொழும்பு, டிசெ. 12

தொழிற் சங்கங்களின் கோரிக்கைகளை அரசு கண்டுகொள்ளவில்லை. இதனாலேயே போராட்டங்கள் வெடிக்கின்றன. இராணுவத்தைப் பயன்படுத்தித் தொழிற்சங்கப் போராட்டங்களை அடக்க முற்படுவது அரசின் இயலாமையையே வெளிப்படுத்துகின்றது. ஜி.சி.ஈ. சாதாரணதர மாணவர்களின் நிலமையைக் கவனத்திற்கொண்டு உடனடியாக இந்த விடயத்துக்கு அரசு தீர்வு காண வேண்டும்.



இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தொடருந்துசேவை அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டமை குறித்த அரசிதழ் அறிவித்தலுக்கு கடந்த சனிக் கிழமை நாடாளுமன்றம் அங்கீகாரம் வழங்கியிருந்தது. இது குறித்து நாடாளுமன்றில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எந்தவொரு தொழிற்சங்கமும் தமது கோரிக்கைகளுக்காக முதலாவதாக தொழிற்சங்கப் போராட்டத்தை முன்னெடுப்பதில்லை. கோரிக்கைகள் குறித்து அரசு கவனம் செலுத்தாமையினாலேயே போராட்டத்தில் குதிக்கின்றன. அமைச்சரின் அணுகுமுறையில் உள்ள சிக்கல்கள் காரணமாக இந்த நிலை தோன்றியுள்ளது. அரசு இந்த விடயத்தில் நியாயமான தீர்வொன்றை உடனடியாக எடுக்க வேண்டும். தொடருந்துச் சேவை அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டு அவர்களின் விடுமுறையும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. அரசின் இயலாமையையே இது வெளிக்காட்டுகின்றது. இதேவேளை, இந்தத் தொழிலுடன் சார்ந்தவர்களுக்கு மறைமுகமாகமாகவே விடுமுறையளிக்கப்படுகிறது. சாதாரணதர பிள்ளைகளுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நாங்கள் இந்த வர்த்தமானியை எதிர்க்கின்றோம். தொழிற்சங்க நடவடிக்கைகளை அடக்க அரசு தவறான முறையைப் பயன்படுத்துகின்றது. இராணுவத்தைப் பயன்படுத்தித் தொடருந்துச் சேவையை முன்னெடுக்க வேண்டாம். சாதாரணத் தரப் பரீட்சையை கருத்திற்கொண்டு இது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும் - என்றார். (5,31)

# ஒற்றுமை இருந்தால் மட்டுமே உரிமைகளைப் பெற முடியும்

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு



தலைமன்னார்,டிசெ.12

நாம் விட்டுக்கொடுப்புடன் ஒற்றுமையாக செயற்படுவதன் மூலமே எமது உரிமைகளைப் பெற்று சரிநிகர் சமானமாக இந்த நாட்டிலே நிம்மதியாக வாழமுடியும். என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் காதர் தெரிவித்தார்.

தலைமன்னார் பியர் பகுதியில் எம்.எஸ். என்டர்பிரைசஸ் நிறுவனத்தின் புதிய எரிபொருள் நிரப்பு நிலையம் நேற்றுத் திறக்கப்பட்டது. இதன் போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இன ஐக்கியமும், நல்லிணக்கமும் எமது சகவாழ்வுக்கு இன்றியமையாதது என்பதிலே நாம் தெளிவாக இருக்கவேண்டும். கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடிய போர் எமக்கு மீட்டெடுக்க முடியாத பல உயிரிழப்புக்களையும் உன்னதமான உடைமைகளின் அழிவுகளையும் எம்மிடையே விட்டுச் சென்றது.

அவற்றின் பாதிப்பிலிருந்து எமது சமூகம் மீள்வதற்கான கட்டுமாணங்களை எமது நல்லாட்சி அரசில் அமைத்துக் கொண்டிருக்கிறோம் -என்றார்.

இந்த நிகழ்வில் மன்னார் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் திரு.பீரிஸ், சீபெட்கோ நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர் அபேவர்த்தன உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற,ரி4)



திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தில் 1008 மூலிகைகளினால் ஏகாதசருத்ர ஹோமமும், சோமஸ்கந்தருக்கு 1008 சங்குகளினால் சங்காபிசேகமும் நேற்று நடைபெற்றது. (ற,ரி4,40)



# முன்பள்ளி கண்காட்சி

திருகோணமலை,டிசெ.12

திருகோணமலை தக்கியா வீதி ஆஷியா சித்திகா முன்பள்ளியின் கண்காட்சி நிகழ்வு முன்பள்ளியில் நேற்று நடைபெற்றது.

முன்பள்ளி அதிபர் பருஷான நிலாம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக திருகோணமலை முன் பள்ளி வெளிக்கள உத்தியோகத்தர் சர்மிளா விக்னேஸ்வரன், மற்றும் சமூக சேவகர் எஸ். சனுன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ற,ரி4,40)

# மகிந்த தலைமையிலான குழு வேட்புமனுத் தாக்கல்

கொழும்பு,டிசெ.12

சிறிலங்கா சுதந்திரக் கட்சி கம்பஹா மாவட்டத்துக்கான வேட்புமனுவை நேற்றுத் தாக்கல் செய்தது.

முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க தலைமையிலான குழுவினர், அந்த மாவட்டத்துக்கான மூன்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)



# பிரிவதற்காக 1,050,000 கோடி ரூபா வழங்க பிரிட்டன் தயார்



லண்டன், டிசெ. 12
"ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிவதற்காக சுமார் 10 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபா வழங்க பிரிட்டன் தயார்" என்று அந்த நாட்டின் தலைமை அமைச்சர் தெரேசா மே தெரிவித்தார்.
ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கமாக பிரிட்டன் இருந்தது. ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளின் பிரசைகள் அந்த அமைப்பில் உள்ள மற்றைய நாடுகளுக்கும் சென்று வசிக்கலாம், தங்கலாம், கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளலாம். இதனால் பிரித்தானியர்களின் வாய்ப்புக்கள் ஏனைய நாட்டவர்களால் சுரண்டப்படுகிறது என்று குற்றம் சுமத்தப்பட்டது. இதையடுத்து ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்வதா அல்லது பிரிந்து செல்வதா என்பது தொடர்பான வாக்கெடுப்பை கடந்த வருடம் நடத்தியது பிரிட்டன். பிரிந்து செல்வதற்கு ஆதரவாக 52 சதவீதமான வாக்குகள் பதிவாகின. இதையடுத்து பிரிவது தொடர்பில் பேச்சுக்கள் இடம்பெற்று வருகின்றன.
பிரிட்டன் பிரிந்து செல்வதால் ஏற்படும் பண இழப்பீடாக பெருந்தொகையைக் கோரியது ஐரோப்பிய ஒன்றியம். பத்து லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது பிரிட்டன்.
"ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறும் பிரச்சினையில், அயர்லாந்துடனான எல்லை உள்ளிட்ட பல அம்சங்களில் போதுமான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது" என ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்தது. (ம)

# அமெரிக்காவின் முடிவு முற்றிலும் தவறானதே

## புடின் விளாசல்



மொஸ்கோ, டிசெ. 12
இஸ்ரேலின் தலைநகராக ஜெருசலேமை அறிவித்த அமெரிக்காவின் முடிவு, முற்றிலும் தவறானது என்று தெரிவித்தார் ரஷ்ய அதிபர் புடின்.
பலஸ்தீனத்தின் பல பகுதிகளைக் கைப்பற்றி அவற்றைத் தனது பிடியில் வைத்திருந்தது இஸ்ரேல். கிழக்கு ஜெருசலேமும் அவ்வாறு இஸ்ரேலின் பிடியில் இருந்தது. அதை இஸ்ரேலின் தலைநகராக கடந்த வாரம் அறிவித்தது அமெரிக்கா. அமெரிக்காவின் இந்த அறிவிப்புக்கு உலக நாடுகள் பலவும் தமது கண்டனத்தைத் தெரிவித்திருந்த நிலையில் ரஷ்ய அதிபர் புடினும் தனது கண்டனத்தைப் பதிவுசெய்தார்.
"அமெரிக்க அதிபரின் இந்த முடிவு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது. மேலும் இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு இடையே பேச்சு நடைபெறுவதற்கான பாதையை இது தடுத்துள்ளது" என புடின் மேலும் தெரிவித்தார். (ம)



# ஈராக்குக்கு அமெரிக்கா பாராட்டு

வொஷிங்டன், டிசெ. 12
ஈராக்கில் இருந்து ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுதக் குழு முழுமையாக தோற்கடிக்கப்பட்டமைக்கு தனது பாராட்டைத் தெரிவித்தது அமெரிக்கா.
ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு தோற்கடிக்கப்பட்டுள்ளது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் ஈராக் பாலைநிலங்களில் தொடர்ந்தும் போர் இடம்பெற்று வந்தது. அங்கிருந்தும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு விரட்டப்பட்டது என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் ஈராக்கின் இந்த அடைவுக்கு தனது பாராட்டைத் தெரிவித்தது அமெரிக்கா.
இதுதொடர்பாக, அமெரிக்க அரசின் அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் ஹேத்தர் நாவ்ரெட் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், 'ஐ.எஸ். தீவிரவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான கட்டுப்பாட்டில் இருந்த இடங்களையும், மக்களையும் மீட்டதன் மூலம் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசு ஈராக்கில் இருந்து துடைத்து எறியப்பட்டுள்ளது. மீண்டும் அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகளோ, வேறு தீவிரவாத இயக்கங்களோ தலைதூக்காத வகையில் நாம் விழிப்புடன் இருக்க வேண்டும். இதற்காக அமெரிக்கா தலைமையிலான நேசநாட்டுப் படைகள் ஈராக் அரசுக்கு எப்போதும் துணையாக இருக்கும்' என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# டோக்லாமில் மீண்டும் பதற்றம்

சிக்கிம் மாநிலம் டோக்லாம் பகுதியில் சுமார் ஆயிரத்து 800 சீன சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் சீனா உலங்கு வானூர்தித் தளத்தை அமைக்கவுள்ளது. இதனாலேயே இவ்வாறு அதிகளவான சிப்பாய்கள் குவிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தியா - பூட்டான் சீனா ஆகிய நாடுகளின் எல்லைகள் சந்திக்கும் இடம் சிக்கிம். இந்தப் பகுதியில் உள்ள டோக்லாம் என்ற இடம் தமக்குத்தான் சொந்தம் என்று மூன்று நாடுகளும் வலியுறுத்துகின்றன. கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இந்தப் பகுதியில் சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது சீனா. இந்தியா எதிர்ப்புத் தெரிவித்தது. இந்தியாவின் எதிர்ப்பைக் கண்டுகொள்ளாத சீனா, இந்திய இராணுவத்தின் இரண்டு பதுங்கு குழிகளை அகற்றிவிட்டு சாலை அமைக்கும் திட்டத்தை முன்னெடுத்தது. இதையடுத்து ஏராளமான சிப்பாய்களை அங்கு குவித்தது இந்தியா. இதையடுத்து சீனாவும் ஏராளமான சிப்பாய்களை அங்கு நிறுத்தியது. அண்மையிலேயே குறித்த பகுதியில் முகாமிட்டிருந்த தமது சிப்பாய்களை திரும்பப் பெற இருதரப்பும் சம்மதம் தெரிவித்து திரும்பப் பெற்றன. இந்த நிலையில் தற்போது அங்கு மீண்டும் பதற்ற நிலை தோற்றம் பெற்றுள்ளது. (ம)





# அமெரிக்காவுக்கு கண்டனம்; அரபுக் கூட்டமைப்பு விடுத்தது

ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகரமாக அறிவித்த அமெரிக்காவின் முடிவுக்கு அரபு நாடுகளின் கூட்டமைப்பு கடும் கண்டனம் தெரிவித்தது. அத்துடன் அமெரிக்கா, தனது முடிவை திரும்பப் பெறவேண்டும் என்றும் அது வலியுறுத்தியது.
எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் அரபுநாடுகளின் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமெரிக்காவுக்குக் கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.
"நாங்கள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளோம். இந்த முடிவு தெருக்களிலும் பிரதிபலிக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை. அரசியல் பணி என்பது பொறுப்பானது. ஜெருசலேம் கடந்த 50 ஆண்டுகளாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்தின்மூலம் அரபு நாடுகளுக்கு இடையிலான வேற்றுமைகள் மறைந்து முழுமையான ஒற்றுமை ஏற்பட்டுள்ளது.
ட்ரம்ப்பின் அறிவிப்பு, 2002ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரேபிய அமைதித் திட்டத்திற்கு புறம்பானது" என கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

# பிரிட்டனில் கடும் பனிப்பொழிவு



கடும் பனிப்பொழிவின் காரணமாக பிரிட்டனின் பல பகுதிகளில் மின்சாரத் துண்டிப்பு ஏற்பட்டுள்ளதுடன் வான்வழி, ரயில் மற்றும் தரைவழி போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.
வட அயர்லாந்திலும், ஸ்கொட்லாந்திலும் பனிப்பொழிவு இருக்குமென்றும், ஏனைய இடங்களில் இரவு முழுவதும் பனியின் தாக்கம் இருக்குமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பனிப்பொழிவால் பாதிக்கப்பட்டுள்ள பிரிட்டன் மற்றும் வேல்ஸ் பகுதிகளுக்கு 'விழிப்புடன் இருப்பதற்கான' மஞ்சள் நிற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பிரிட்டனில் நூற்றுக்கணக்கான பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. (ம)



அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத் தீ மிக விரைவாகப் பரவி வருகிறது. தீயைக் கட்டுக்குள் கொண்டுவரும் பணியில் நூற்றுக் கணக்கான வாகனங்களும், உலங்கு வானூர்திகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. (ம)


BAJAJ MOTORCYCLES
PLATINA ComforTec
வீற்றருக்கு
அதிகூடிய தூரம்
அதிகூடிய எரிபொருள் சிக்கனம்
104 Km/pl
மேற்குறித்த எரிபொருள் தகன அளவின் கணக்கீடானது, உறுதிசெய்யப்பட்டதோர் நிலையின் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் அடிப்படையிலாகும்.
எலட்ரிக் ஸ்டார்ட்
ஸ்பிரிங் இன் ஸ்பிரிங் ஷொக் அப்ஷோவர்
கவர்ச்சிகரமான எலோவீல்
ஸ்பிரிங் உடன் மென்மையான சீட்
ரூபா. 221,950/-
டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிடட்
நிறுவனத்தின் பதிவு இலக்கம் : PB270
75, ஹயிட் பார்க் கோனர், கொழும்பு 02. 0114 700600 0114 700677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk


"அந்த காலத்துல ஸ்கூல்ல பெட்ஸ்மென்... என்ன face பண்ணவே பயப்படுவாங்க...
சரியா உங்கள போல... நீங்க தான் என்னோட ஹீரோ...
உங்க ரெகோட் ப்ரேக் பண்றது தான் என்னோட கனவே...
ஆனால்... அந்த கனவு... கொஞ்ச நேரத்துல என்கிட்ட இருந்து டர்ன் ஆகிடுச்சு..."
NO DRUGS
உங்களுக்குள் இருக்கும் வீரனை அழிக்க
போதைப்பொருட்களுக்கு இடம்கொடுக்காதீர்கள்.
போதைப்பொருட்கள் உங்கள் கனவை அழித்துவிடும்.
போதைப்பொருள் பாவனையிலிருந்து விலகியிருங்கள்.
போதைப்பொருட்கள் அற்றதோர் நாடு
சந்தோஷத்தால் நிறைந்ததோர் நாளை
சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு
பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவு
03 வது மாடி, புதிய செயலகக் கட்டிடம், கொழும்பு 01.
தொலைபேசி : 0112 343 333/4 Email : dir.pnb@police.lk

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# வரலாற்றுப் பாடத்தை நீக்குவது தேவையானதே

இலங்கையின் பாடசாலைக் கல்விப் பாடத் திட்டத்தில் இருந்துவரலாற்றுப் பாடத்தை நீக்குவது குறித்து அரசு ஆராய்ந்து வருகின்றது என்று தகவல்கள் வெளிவந்துள்ளன. இது ஒரு வரவேற்கத்தக்க யோசனை. அரசு துணிந்து அதனைச் செயற்படுத்த வேண்டும். வரலாற்றுப் பாடத்தை மட்டும் அல்ல சமய பாடத்தையும் பாடசாலைக் கல்வியில் இருந்து நீக்க வேண்டும்.

நாட்டின்வரலாற்றைக் குடிமக்கள் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம்தான். அதிலும் மாணவர்கள் அதனை அறிந்து வைத்திருப்பது மிக மிகத் தேவையான ஒன்று என்பதையும் மறுக்கமுடியாது. ஆனால் இலங்கையில் வரலாறு என்பது மிகவும் குழப்பகரமானஒன்றாகவே உள்ளது. இனவாதஅடிப்படையிலேயே அது நீண்ட காலமாக அணுகப்பட்டு வந்துள்ளது.

அதிலும் இலங்கைத்தீவு சிங்களவர்களுக்கு மட்டுமேயானது என்று வலிந்து நிறுவுவதற்கு ஏற்றபடியே பலவரலாற்றாய்வாளர்கள் தமது ஆய்வுகளை எழுதி வந்திருக்கிறார்கள். அவர்களிடம் இருந்த இனவாத நோக்கு நேர்மையான வரலாற்று ஆய்வுகளுக்கு இடமளிக்கவில்லை. நாட்டில் நிலவிய பௌத்த சிங்கள மேலாதிக்கப் போக்குக்குத் தீனி போடுவதாகவே அது அமைந்திருந்தது.

குறிப்பாக தமிழர்களுக்கு இந்த நாட்டில் இருந்த வரலாற்று ரீதியான இடத்தை திட்டமிட்டு மறைக்கும் நோக்கத்துடன் இந்த வரலாற்று ஆய்வு அணுகுமுறைகள் இருந்தன. ஒரு சில நேர்மையான ஆய்வாளர்கள் இருந்தனர் எனினும் அவர்களின் குரல் இத்தகைய இனவாத வரலாற்றாய்வாளர்களின் கூக்குரலுக்கு மத்தியில் அமுங்கிப் போய்விட்டது.

நேர்மையான வரலாற்றாய்வாளர்கள் இலங்கையில் தற்போதுள்ள இரு மொழிகளுமே வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இங்கு வாழ்ந்த ஆதி இனங்களுடன், வர்த்தக ரீதியில் நாட்டுக்குள் வந்தவர்களால் ஏற்பட்ட கலப்பின் வழியே உருவாகியவை என்று கூறுகின்றார்கள். பின்னர் வடக்கில் தமிழும் தெற்கில் சிங்களமும் நிலைபெற்று வளர்ச்சி கண்டன. ஆக, வரலாறு முழுமையும் தமிழும் சிங்களமும் இலங்கையில் இரு தண்டவாளங்கள் போன்று பயணித்திருக்கின்றன.


இந்த உண்மைகள் மறைக்கப்பட்டு தமிழர்கள் வந்தேறுகுடிகள் என்று சிங்கள மக்களை நம்ப வைக்கும் வகையிலான வரலாற்று ஆய்வுகள் வரவேற்கப்பட்டு கொண்டாடப்பட்டமையே இலங்கையின் நவீன வரலாறு. அதன் அடிப்படையிலேயே பாடத் திட்டத்திலும் இலங்கையின் வரலாறு எழுதப்பட்டுள்ளது. அதில் சிங்கள மன்னர்கள் பற்றியும் அவர்களின் வரலாறு பற்றியுமே சொல்லப்பட்டுள்ளது. தமிழர்கள் பற்றியோ வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து அவர்களுக்கும் நாட்டுக்கும் இருக்கும் தொடர்பு பற்றியோ சொல்லப்படவில்லை.

நீண்ட காலமாகவே இது பலதரப்பட்டவர்களதும் விமர்சனத்திற்கு உள்ளாகி வருகின்றது. எனவே இலங்கையின் வரலாற்றை நேர்மையாக, இன மத சார்பின்றி அணுகுகின்ற வரலாற்று ஆய்வுகள் தாராளமாகுகின்ற காலம் வரைக்குமாவது பாடசாலைகளில் இருந்து வரலாற்றுப் பாடத்தை விலக்கி வைப்பது அவசியமானதே. இந்த அரசு அதனைச் செய்வது பாடசாலை மட்டத்தில் இனஐக்கியத்தை உருவாக்குவதற்கும் வளர்ப்பதற்குமான முதல் படிக்கல்லாக அமையும்.

அதேபோன்று பாடத்திட்டத்தில் இருந்து சமய பாடத்தையும் நீக்கவேண்டும். சமயம் மக்களால் பயிலப்படவேண்டியதே தவிர, அது வெறுமனே மனப்பாடம் செய்யப்படவேண்டியது அல்ல. பாடசாலைகளில் சமய பாடத்தை அனுமதிப்பதன் ஊடாக மாணவர்களும் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் என்று மதப் பிரிவினைகளுக்கு ஆளாகின்றார்கள். மதங்களின் அடிப்படையிலேயே பாடசாலைகள் அடையாளப்படுத்தப்படுவதும் நடக்கிறது.

இது மத நல்லிணக்கத்துக்கு ஏற்றதல்ல. எனவே அதனையும் பாடத் திட்டத்தில் இருந்து நீக்கிவிட்டு ஒழுக்க விழுமியம் தொடர்பான பாடப் பரப்பை வேண்டுமானால் சேர்த்துக் கொள்ளலாம்.

# தன்னம்பிக்கையும் கடின உழைப்பும் சாதனைக்கு வழிகாட்டுபவை



செ. அன்புராசா அடிகள்

தமிழ் நாடக உலகில் எஸ். ஜீ. கிட்டப்பா பிரசித்திபெற்று விளங்கியஒருநடிகர்ஆவார். இசைப்புசிஎனப்போற்றப்பட்ட கே. பி. சுந்தராம்பாளின் கணவர்தான் இந்தக் கிட்டப்பா. கிட்டப்பாஇரண்டாம்வகுப்புவரை மட்டுமேபடித்தவர்எனத்தெரிய வருகிறது. ஒருதடவை கிட்டப்பா வழக்கொன்றில் சாட்சியமளிக்கவேண்டிஏற்படுகிறது.
புகழ்பெற்ற வழக்கறிஞர் நார்ட்டன் துரை கிட்டப்பாவை குறுக்கு விசாரணை செய்து அவமானப்படுத்த எண்ணியிருந்தார். வழக்கறிஞர் நார்ட்டனின் கேள்விக் கணைகளுக்கு கிட்டப்பா பதில் அம்புகளை கடகடவென அனுப்பிக் கொண்டிருந்தார்.
'உனது பெயர்?', 'கிட்டப்பா' 'உனது தொழில்?', 'ஒரு நடிகன்' 'நடிகன் என்றால் கூத்தாடியா?', 'ஆமாம், ஆனால், என் அப்பாவின் தொழிலைவிட அது மேலானது' 'உன் அப்பாவின் தொழில்?', 'உங்களை போலஒருவழக்கறிஞர்!' வழக்கறிஞர் நார்ட்டன் துரை வாயடைத்து நின்றார்.
நாடக அரங்கிலும் அவையிலும் ஆயிரமாயிரம் பேர்களோடு பழகிய அனுபவம் நடிகர் கிட்டப்பாவுக்கு தன்னம்பிக்கையைக் கொடுத்திருக்கிறது. அதனால், அவரால் அறிஞர் மத்தியில் நிமிர்ந்து நிற்க முடிந்தது. தான், இரண்டாம் வகுப்பு வரைதான் படித்தவன் என்ற தாழ்வுமனப்பான்மை இருந்திருந்தால் தனது சுயமரியாதையை - சுயமதிப்பை அன்று அவரால் நீதிமன்றத்தில் காப்பாற்றியிருக்க முடியாது.

**இருகைகளும் இருகால்களுமின்றி பிறந்த நிக் வுயுசிக்**

நிக் வுயுசிக் (Nick Vujicic) என்பவர் 1982ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியா மெல்பன் நகரில் இரு கைகளும் இரு கால்களுமின்றி, குடும்பமொன்றின் முதல் பிள்ளையாகப் பிறந்தவர். இப்பிறப்பிற்கான காரணத்துக்கு மருத்துவ உலகம் எவ்வித விளக்கத்தையும் கூற முடியாத நிலையில் மௌனம் காத்தது. கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒரு பிறவியாக 'நிக்' இரு கைகளும் இரு கால்களுமின்றி வளர்ந்தான். அவனது பெற்றோரும், அவன் வாழவேண்டும்: அவனை வாழ்விக்கவேண்டும் என்ற வாஞ்சையோடு 'நிக்'கை வழிநடத்தத் துணிந்தார்கள்.
'நிக்'கின் இன்றையநிலைஎன்ன தெரியுமா? கடின உழைப்பாலும் முயற்சியாலும் செயலார்வத்தைத் தூண்டக்கூடிய உரைகளை நிகழ்த்தும் நிறுவனத்தை (Motivational Speaking Company) நிறுவி உலகமெங்கும் சென்று, மக்களை குறிப்பாக இளையோரை செயலூக்கம்பெறத்தக்க வகையில் அவர்களை உற்சாகப்படுத்தி வருகிறார்.
2005ஆம் ஆண்டின் 'இளம் ஆஸ்திரேலியன்' என்ற பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். 'வரம்புகள்இல்லாதவாழ்க்கை' (Life without Limits) என்ற தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய மிகச் சிறந்த நூலை எழுதியுள்ளார். 'கைகளில்லை, கால்களில்லை, கவலைகளில்லை' (No hands, No legs and No Worries) என்ற டி.வி.டியை உருவாக்கியிருக்கிறார். தன்னுடைய அனேக வேலைகளைத் தாமாகவே கவனித்துக் கொள்கிறார்! நிக், இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இல்லாமல் நன்றாக நீந்தக்கூடியவர் என்றால் நிக்கின் தன்னம்பிக்கையையும் விடாமுயற்சியையும்பற்றி வேறென்ன விளக்கத்தைக் கூறவேண்டும்?

**'நிக்', இன்றைய எமது இளையோருக்கு ஒரு சவால்!**

எமது பிரதேசங்களில், கூன், குருடு, செவிடு இல்லாமல் நல்ல இரண்டு கைகளையும் இரண்டு கால்களையும் வைத்துக்கொண்டு சோம்பேறிகளாகச் சுற்றித் திரியும் இளையோருக்குநிக்ஓர்அகத்தூண்டலாய் அமையும்நபர்!
அல்லது அப்பா அம்மாவின் உழைப்பில் உண்டுகுடித்து புறொயிலர் போல உலகம் தெரியாமல் வாழும் எமது வாலிபர்களுக்கு நிக் ஒரு சவால்!
அல்லது சகோதர சகோதரிகள் வெளிநாட்டிலிருந்து அனுப்பும் பணத்தை எடுத்து மூன்று வேளையும் மூக்குமுட்ட விழுங்கிவிட்டு, மோட்டார் சைக்கிள்களில் சவாரிசெய்யும் வயதுவந்த எமது இளைஞர்களுக்கு நிக் ஒரு முரண்பாடு!



அல்லது உழைக்கிற கொஞ்சப் பணத்தையும் சரியாகச் செலவு செய்யத் தெரியாமல் குடித்து வெறித்து இளமையையே தொலைத்து நிற்கும் எமது இளையவர்களுக்கு அவன் நடமாடும் உதாரணம்.

பார்ப்பதற்கு வாட்டசாட்டமாக இருந்த ஒரு இளைஞனைப் பார்த்துக் கேட்டேன்: "தம்பி, நீங்க படிக்கிறீங்களா அல்லது படிச்சு முடிச்சு வேலை ஏதாவது பாக்கிறீங்களா?" என்று! அவனோ, "வீட்டிலை அப்பாவுக்கு உதவிஒத்தாசையாஇருக்கிறேன்!" என்றான். இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு இளைஞனா?'இந்தியாவை மாற்ற விவேகானந்தர் தேடியலைந்த இளைஞர்களில் இவனும் ஒருவனாக இருக்கவேண்டும்!'என எண்ணிக் கொண்ட நான், தொடர்ந்து "அப்ப, அப்பா என்ன செய்கிறார்?" என வினவினேன்.'அப்பா வீட்டில சும்மாதான் இருக்கிறார்!'என்றான் வலு நிதானமாக!

வீட்டில் வேலைவெட்டி இல்லாமல் சும்மாயிருக்கும் அப்பனுக்கு இவன் உதவியாக மட்டுமல்ல ஒத்தாசையாவும் இருக்கிறான் என்றால், இவன் எப்படிப்பட்ட பேர்வழியாக இருப்பான் என எண்ணிப் பார்க்கலாம்!'இவங்களையெல்லாம் கண்ணைக்கட்டி, கண்ணுக் கெட்டாத காட்டில்தான் கொண்டு போய் விடவேண்டும்!'என வாசகர்கள் துடிப்பது எமக்குப் புரிகிறது. இப்படிப்பட்ட குடியானவர்கள் எம்முடைய பிரதேசங்களில் எண்ணிக்கையில் அதிகரித்து வருவதுபோல இப்போது புலம்பெயர் நிலத்திலும் கணிசமான தொகையில் அதிகரிப்பதாக அறியக் கூடியதாக இருக்கிறது. ஆகவேதான், இவர்களை நம்பி வெளிநாட்டுக்கு வெளிக்கிடும் இளம்பெண்கள் கொஞ்சம் தீர விசாரித்து இவர்களின் கரம்பிடிப்பது நல்லதுபோல் படுகிறது. கரம்பற்றி விட்டுப் பிறகு இருதலைக்கொள்ளி எறும்புபோல அங்குமில்லாமல் இங்குமில்லாமல் நடுத்தெருவில் நிற்காமல்பார்த்துக்கொள்வதுபுத்திசாலித்தனமானது.

**இரு கைகளையும் ஒரு கண்பார்வையையும் இழந்த அருள்பணியாளர்**

அருள்பணி. மைக்கல் லப்சிலி, எஸ்.எஸ்.எம் என்பவர் சிம்பாப்வே நாட்டில் 1990ஆம் ஆண்டில் மறைப்பணியாற்றிக்கொண்டிருந்தபோது கடிதம் ஊடாக அனுப்பப்பட்ட வெடிகுண்டில் தனது இரண்டு கைகளையும் ஒரு கண்பார்வையையும் முற்றாக இழந்தவர்.

உலகில் பரந்துவாழும் பலரின் செபத்தாலும், அன்பாலும், அவர்களின் ஆதரவாலும் தனக்குள் ஓர் உள்ளகப் பயணத்தை ஆரம்பித்து பாதிப்புற்றவர் என்ற நிலையிலிருந்து உயிர்பிழைத்தவர் என்ற நிலையை அடைந்து, உயிர் பிழைத்தவர்.

இப்படிப்பட்ட அனுபவத்திலிருந்து' நினைவுகளைக் குணமாக்கல் நிறுவனத்தினை' (The Institute for the Healing of Memories) நிறுவி இனமுரண்பாடுகளாலும், போர்களாலும் மிகவும் பாதிப்புற்ற தென் ஆபிரிக்காவில் பணிகளை ஆரம்பித்திருக்கிறார். இந்த நிறுவனத்தின் ஊடாகப் பல குணமாக்கும் பணிகளை ஆற்றிவரும் அருள்பணி, மைக்கல் லப்சிலி, இலங்கையிலும் இந்த நிறுவனத்தின் ஊடாகப் பணியாற்ற சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

இவரை நேரில் சந்திக்கவும் உரையாடவும் வாய்ப்புக்கிட்டியது. உண்மையில், தான் அடைந்த இழப்புக்களிலிருந்து ஆழ்மனக் குணம் பெற்று அதனூடாக பகைவரையும் மன்னித்து அவர்களுக்கும் வாழ்வு கொடுக்கும் சக்தி இவரிடம் இருப்பதாகவே தெரிகிறது. இரு கைகளையும், ஒரு கண்பார்வையையும் இழந்த நிலையில் தனது வேலைகளைத் தானே செய்கிற அவரது மன வலிமையைப் பார்க்கிறபோது அதனை என்னவென்பது! தன்னம்பிக்கையும், அவரின் விடாமுயற்சியும், வாழவேண்டும் வாழ்விக்கவேண்டும்; என்ற வாஞ்சையும் அவரை அடுத்தவருக்காக வாழத்தூண்டிக் கொண்டிருக்கிறது.

"விதியை எண்ணி வீழ்ந்துகிடக்கும் வீணர்கள் எல்லாம் மாறணும், வேலை செய்தால் உயர்வு என்னும் விவரம் மண்டையில் ஏற வேணும்" என்று விதியால் விளையும் வீழ்ச்சிகளையும், உழைப்பால் வரும் உயர்வையும் உயர்த்திக் காட்டினார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் சேர்ந்தால் சிகரம் தொடுவது நிச்சயம்,



எமது மண்ணுக்கும் மக்களுக்கும் நினைவுகளைக் குணமாக்கும் பணி நிறைய நிறையத் தேவைப்படுவதாகவே தெரிகிறது. மேலும், மூன்று தசாப்த காலப் போரினால் எமது சமூகங்களில் கால், கை, கண்ணென உடல் உறுப்புக்களை இழந்து, மாற்றுத்திறனாளிகளாய் மாற்றப்பட்டிருக்கும் நூற்றுக்கணக்கானவர்களுக்கு நிக்கும், அருட்திரு. மைக்கல் லப்சிலியும், இழப்புக்களோடு இருந்துகொண்டு வாழ்க்கையைப் புதிதாய் வடிவமைக்க பெரும் வாழும் சான்றாகத் தரப்படுகின்றார்கள். மாற்றுத் திறனாளிகளை சமுதாய நீரோட்டத்தில் சங்கமிக்கச் செய்து, அவர்கள் வாழ்வு பெற வைக்க வேண்டியது சமூகத்தின் முக்கிய பொறுப்பும் கடனுமாகும் என்பதை எமது சமுதாயம் மனதிருத்தி வேண்டும்!

**ஏழையரின் தேவதை அன்னைத் திரேசா**

அல்பெனிய நாட்டில் பிறந்து இந்தியா வந்தடைந்த அருள்சகோதரியான அன்னை திரேசா, ஓர் தலைமை ஆசிரியராகத் தன் பணிகளை ஆரம்பிக்கிறார். இறக்கும் தறுவாயில் உள்ளவர்கள், தாய்தந்தையரால் கைவிடப்பட்ட கைக் குழந்தைகள், பராமரிப்பற்ற முதியவர்கள், குடும்பத்தினரால் கவனிக்கப்படாத மாற்றுத்திறனாளிகள் என ஏழைகளைத் தேடிச்சென்று தன் பணியைச் சேரிகளில் தொடங்கியவர்.

**நெல்சல் மண்டேலா கொண்ட சபதம்**

27ஆண்டுகால சிறைவாசத்தின் பின்னர் குற்றமற்றவர் என விடுதலைசெய்யப்பட்டுவெளியேவந்த நெல்சன் மண்டேலா, ஆபிரிக்க வெள்ளையர்களும்கறுப்பர்களும் சுதந்திரமாக வாழ, தான் தொடர்ந்தும் உழைக்கப் போவதாகக் குறிப்பிட்டார். 27ஆண்டுகள்சிறைக்குள் இருந்துவரும் ஒரு மனிதன் எவ்வளவு சுதந்திர மனிதனாக மனிதாபிமானம் நிறைந்தவனாக மக்களின் நல்வாழ்வுக்குத் தனது உயிரையும் கொடுக்கத் துணிந்தவனாக வருகிறான்! என்ன மனவலிமை! என்ன மனத்துணிவு! எத்தகைய தன்னம்பிக்கை!

**சாதனைக்கும் வயதுக்கும் சம்பந்தம் கிடையாது!**

'கீட்ஸ்' இமாலயக் கவிதைகளை இயற்றி முடித்தது 24 வயதிற்குள் என்கிறார்கள்! தமிழ்ப் பாட்டுலகைக் கட்டியாண்ட பட்டுக்கோட்டை வாழ்ந்தது 29 ஆண்டுகள்தான்! மகாகவி பைரன், சாதித்தது தமது 30 ஆண்டுகால ஆயுள் காலத்திற்குள்தான்! மகா அலெக்ஸ்சாந்தர் உலகின் அறுபத்திநான்கின் ஒரு பகுதியை கைப்பற்றி ஆண்டது 32 வயதிற்குள்தானாம்! மகாகவி பாரதி தனது புரட்சிக் கவிதைகளைத் தந்தது 39 ஆண்டுகால வாழ்நாட்களுக்குள்தான்!

'ஒட்டோகிறாவ்' படத்தில் வரும் புகழ் பெற்ற'ஒவ்வொரு பூக்களுமே'என்ற பாடல் தன்னம்பிக்கையயை ஏற்படுத்துகிற - வளர்க்கிற ஒரு தற்காலச் சினிமாப் பாடல் எனலாம்: 'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறது, வாழ்வென்றால் போராடும் போர்க்களமே, ஒவ்வொரு விடியலுமே சொல்கிறது, இரவென்றால் பகலொன்று வந்திடுமே, நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வினில்... .'இவ்வாறு, தன்னம்பிக்கையுடன் வாழ்க்கைப் பாதையில் தளராது, சோராது நடைபோட வேண்டும் என்ற உற்சாகத்தை அது தருகிறது.

**இலட்சியம் என்பது இடைவிடாது முயற்சி!**

எவரெஸ்ட் சிகரத்தை தொடுவதற்கு எட்மெண்ட் கிலாறி ஏழுமுறை முயன்று தோற்றுப் போனான். ஒரு நாள் இரவு நித்திரைக்குச் செல்வதற்கு முன் எவரெஸ்ட் படத்தைக் கீறி அதில் பின்வருமாறு எழுதித் தலைமாட்டில் வைத்துப் படுத்துக் கொண்டான்: 'எவரெஸ்ட் சிகரமே! உன் உச்சியை அடைவதுதான் எனது இலட்சியம், மண்ணில் மடியும் வரை அதற்காக முயல்வேன்!' இறுதியில் தன் முயற்சியில் வெற்றி கண்டான்.

இதனைத்தான்'முய்ற்சிதிருவினை ஆக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்கிறது திருக்குறள். மேலான முயற்சிகளை மேற்கொள்ளவும் அம்முயற்சிகளில் வெற்றிகாணவும் 'கனவு காணுங்கள்' என அறிஞர் அப்துல்கலாம் அழைப்பு விடுத்தார். கனவு என்பது தூக்கத்தில் மட்டும் வருவதல்ல, இலக்கை அடையும்வரை தூங்காமல் இருக்கச் செய்வதும் கனவு என்றும் புரிந்து கொள்ளவேண்டி இருக்கிறது.

**'விதி'யை 'மதி'யால் வெல்லுங்கள்**

எனவேதான், "விதியை எண்ணி வீழ்ந்துகிடக்கும் வீணர்கள் எல்லாம்மாறணும், வேலைசெய்தால் உயர்வு என்னும் விவரம் மண்டையில் ஏற வேண்டும்" என்று விதியால் விளையும் வீழ்ச்சிகளையும் உழைப்பால் வரும் உயர்வையும் உயர்த்திக் காட்டினார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் சேர்ந்தால் சிகரம் தொடுவது நிச்சயம், இது சத்தியம்.




## யாழ். குடாநாடு தலைநிமிர்ந்து நிற்குமா?

ஆனைக்கோட்டையில் வீடு புகுந்து சமூக விரோதக் கும்பல் அட்டகாசம்; யாழ்ப்பாணம் கலட்டிப் பகுதியில் 27 பவுண் நகைகள் திருட்டு; அளவெட்டியில் ஆயுதங்களுடன் சென்ற ஆவாக்குழுவை மடக்கியது தெல்லிப்பழைப் பொலிஸ்; வாள்வெட்டுக்குழு மீண்டும் அட்டகாசம். இவை யாவும் பத்திரிகைகளில் வெளியான தலைப்பு செய்திகள்.

கல்வியும், கலாசாரமும், சமூக விழுமியங்களும் கொடிகட்டிப் பறந்த யாழ். மண்ணில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றமை இங்கு வாழ்கின்ற மக்களுக்குத் தலைகுனிவையும் அவமானத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எவருக்கும் கட்டுப்படாத ஒரு சிலர் புரிகின்ற அருவருக்கத்தக்க செயல்கள் முழுச் சமுதாயத்தையும் பாதித்து வருவதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே இருப்பவர்கள் இந்த மண்ணை மிகக் கேவலமாக எடைபோடுகின்றனர்- பகிரங்கமாக விமர்சிக்கின்றனர்.

தெருவுக்கொரு ஆலயத்தை அமைத்து வணங்குவதால் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. முதலில் எம்மை நாமே திருத்திக் கொண்டால் அதுவே இறைவனுக்கு உகந்ததாகிவிடும்.

பயங்கர ஆயுதங்களைச் சுமந்தவாறு பொலிஸாருக்கும் நீதித்துறைக்கும் சவால் விட்டுக் கொண்டிருக்கும் குறைந்த எண்ணிக்கையானவர்களைக் கட்டுப்படுத்துவதில் ஏற்படுகின்ற தாமதம் மிகப் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்திவிடப் போகின்றது. போரில் வெற்றி பெற்றுவிட்டதாகப் பீற்றிக் கொள்ளும் ஆட்சியாளர்கள், திருடர்களையும் வாள்வெட்டுக் குழுவினரையும் அடக்க முடியாமல் திணறி வருகின்றமை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளத்தக்கல்ல.

யாழ். குடாநாடு தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமானால் அடாவடிக் குழுக்கள் பூண்டோடு ஒழிக்கப்பட வேண்டும். அரசு இனியும் வாளாவிருக்காது காரியத்தில் இறங்க வேண்டிய தருணம் இதுதான்.

மா. சுந்தரம்பிள்ளை,
வட்டுக்கோட்டை.

# ‘அதிதிறன் வகுப்பறை எண்ணக்கரு’ இலங்கையில் அறிமுகம்

## அபான்ஸ் மற்றும் ஹயர் நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு

உலகின் அதிசொகுசு அதிதிறன் கல்விசார் விற்பனை நாமமாகத் திகழும் ‘ஹயர்’ மற்றும் அபான்ஸ் நிறுவனங்கள் இணைந்து இலங்கையில் ‘அதிதிறன் வகுப்பறை எண்ணக் கருவை’ அறிமுகம் செய்துள்ளன.

அபான்ஸ் மற்றும் ஹயர் நிறுவனங்கள் ஒன்றிணைந்து முதன்முறையாக அறிமுகம் செய்துள்ள ‘ஸ்மாா்ட் வகுப்பறை’ கடந்த 2 ஆம் திகதி பதுளை, விசாக பெண்கள் உயர் பாடசாலையில் தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஹரீன் பர்ணாந்துவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.


இந்தப் புதிய ஆரம்பம் குறித்துக் கருத்துரைத்த அமைச்சர் ஹரீன் பர்ணாந்து,

“ஸ்மாா்ட் வகுப்பறை எண்ணக்கருவானது, இலங்கையின் கல்விசார் அமைப்பின் கற்றல் மற்றும் கற்பித்தல் போன்ற செயற்பாடுகளில் புதிய மாற்றத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தும். இங்கு மாணவர்களுக்கு அதி நவீன டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் உள்ளடக்க சலுகைகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. மிகச் சிறந்த முறையில் மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. இலங்கையில் முதல்முறையாக பாரம்பரிய பாடசாலை வகுப்பறைகளைக் கடந்து, முன்னோக்கி நகர்ந்து ஸ்மாா்ட் வகுப்பறைகளுக்கு மாறுவதன் மூலம் தடைகள் மிக்க வரைமுறைகளைத் தாண்டி ஆக்கத்திறன் மிக்க ஞானத்தில் பரிபூரணமான ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது.” - என்றாா்.

இந்த எண்ணக்கருவின் கீழ் மாணவர்களைப் போன்று ஆசிரியர்களுக்கும் பாரம்பரிய முறைகளுக்கு அப்பாற்பட்ட பல்வேறு நவீன தொழில்நுட்ப முறைமைகளை கையாள்வதற்கான வாய்ப்புக்கள் உருவாக்கப்படவுள்ளன. இதன் மூலம் ஆக்கத் திறன்மிக்க எண்ணங்கள் மீதான ஆற்றல் அதிகரிப்பதோடு, வகுப்பறையில் உந்து சக்தியுடன் செயற்பட்டு கல்விசார் நடவடிக்கைகளை பரந்த அளவில் மேம்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புகள் கிட்டவுள்ளன. வகுப்பறையினுள் உள்ள உள்ளகச் செயற்பாட்டுத் தன்மைகள் மாணவர்களுக்கான ஒரு பொழுதுபோக்காக அமைவதோடு, ஆசிரியர்கள் மற்றும் பாடவிதானங்கள் தொடர்பில் அதிக ஈர்ப்பினை உருவாக்கும்.

ஸ்மாா்ட் வகுப்பறைகளில் விசேடமான கணினிகள் மற்றும் தனித்துவமாக உருவாக்கப்பட்டுள்ள கல்விசார் கருவிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. அத்தோடு ஒவ்வொரு ஆசிரியருக்கும் மாணவருக்கும் வயர் இணைப்பு இன்றி ‘Classroom cloud’ உடன் தொடர்புகொண்டு கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இந்த வயரினால் தொடர்புபடுத்தப்படாத ‘அசெஸ் பொயின்ற்’ மூலம் வகுப்பறை நிர்வாகத்தை கட்டுப்படுத்தும் மென்பொருள் இணைவு பெற்றுள்ளது. இதனூடே மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை நெருக்கமாக அவதானிக்கக் கூடிய வாய்ப்பு ஆசிரியர்களுக்கு கிடைக்கும். மாணவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகொண்டு குழுச் செயற்பாடுகளில் ஈடுபடுதல், கல்விசார் ஒப்படை செயற்பாடுகள் மற்றும் விவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுதல் உள்ளிட்ட பல்வேறு செயல்நிலைகளை மடிக்கணினிகள் மூலம் மேற்கொள்ள முடியும். தவிர, ஆசிரியர்களுக்கு தமது பாட வேலைகளை ‘கை போட்’ (Hi Board) ஒன்றின் மூலம் திரையிடுவதற்குரிய வாய்ப்பு உள்ளதுடன், ‘டச்’ வசதியுடன் வரும் உள்ளகச் செயற்பாட்டு ஸ்மாா்ட் டிஸ்பிளே ஒன்றும் இதில் காணப்படுகிறது. அத்தோடு வலுவான கண்ணாடி பனல் ஒன்றும் இதில் உள்ளது. சாதாரண ‘சுண்ண எழுதுகோல்’ (Chalk), துகள் இல்லாத விசேட ‘சுண்ண எழுதுகோல்’ மற்றும் மாா்க்கா் எழுதுகோல்களின் மூலம் எழுதுவதற்கான வாய்ப்பு உள்ளது. அதேபோல் இது ஆசிரியர்களின் பணியை எளிமைப்படுத்துகிறது.



இந்த நிகழ்வில் ஹயர் நிறுவனத்தின் பன்னாட்டு ஸ்மாா்ட் கல்விசார் மற்றும் வெளிநாட்டு கணினிப் பிரிவின் முதன்மை அதிகாரி ‘பீக் கி’, ‘ஹயர்’ நிறுவனத்தின் பன்னாட்டு ஸ்மாா்ட் கல்விசார் மற்றும் வெளிநாட்டு கணினி பிரிவின் பொது முகாமையாளர் ‘பைரண் சாகோ’, போக்குவரத்து அமைச்சர் நிமல் ஸ்ரீ பால டி சில்வா மற்றும் நாடாளுமன்ற அமைச்சர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஓ)

# கைத்தொழில் உற்பத்தி சுட்டெண்கள் அதிகரிப்பு

## உணவு உற்பத்தி 5.1 வீதமாகப் பதிவு

“கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிக் முதன்மையான பொருளாதாரக் குறிகாட்டியாக உள்ளது.

2016 ஆம் ஆண்டின் மாதாந்த உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் ஓகஸ்ட் மாத உற்பத்தியில் கைத்தொழில் உற்பத்திச்-சுட்டெண் அளவீடு 4.8 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்தத் தகவலை தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரப் பணிப்பாளர் நாயகம் அமர சதரசிங்க வெளிப்படுத்தியுள்ளாா்.

உற்பத்திக் கைத்தொழில்களில், 2016 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதகாலப் பகுதியின் உற்பத்திகளுடன் ஒப்பிடுகையில் கடந்த ஓகஸ்ட் மாத காலப் பகுதியின் உற்பத்திகளில் ‘வடிவமைக்கப்பட்ட உலோக உற்பத்தி பொருள்கள்’ 35.5 வீதமாகவும், ‘அடிப்படை உலோக உற்பத்திப் பொருள்கள்’ 18.9 வீதமாகவும், ‘கோக் மற்றும் சுத்தி கரிக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகள்’ 10.4 வீதமாகவும் பதிவாகியுள்ளன. இவை உற்பத்தியின் சாா்பு கருதி குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டுகின்றன.

உணவு உற்பத்தியானது ஓகஸ்ட் மாதத்தில் 5.1 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதே வேளை கைத்தொழில் உற்பத்தித்துறையில் ‘பான வகை’, ‘தளபாடம்’, ‘இரசாயனமும் இரசாயனப் பொருள் உற்பத்தியும்’ என்பவை முறையே 16.4 வீதம், 6.9 வீதம், 2.5 வீதம் ஆக வீழ்ச்சிய டைந்துள்ளன. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது மிக முதன்மையான பொருள்ாதாரக் குறிகாட்டியாக உள்ளது. இவை குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் கைத்தொழில் உற்பத்தியின் அளவில் ஏற்படும் குறுகிய கால மாற்றங்களை வெளிப்படுத்துகின்றன. (ஓ)

# ஏற்றுமதிக் கைத்தொழிலுக்கு அரசு முன்னுரிமை

## அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கருத்து

“பெருந்தோட்டத்துறை உட்பட ஏற்றுமதித்துறை சாா்ந்த கைத்தொழில்களுக்கு அரசு முன்னுரிமை அளித்துள்ளது. அதற்குத் தேவையான வளங்களை வழங்கியுள்ளோம்” என்ற தகவலை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வெளிப்படுத்தியுள்ளாா்.

கொழும்பு தாமரைத் தடாகத்தில் இடம்பெற்ற தேசிய தேயிலை விருது வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே இந்த விடயங்களை அவர் வெளிப்படுத்தியுள்ளாா்.

மேலும் இது குறித்து அவர் கருத்துரைக்கும் போது :

“உயர்ந்த நியமங்கள் மற்றும் தரத்துடன் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட வேண்டும். அதிக இலாபங்களை பெற்றுக்கொள்ளும் விதமான நடவடிக்கைகளில் வியாபாரிகள் ஈடுபடுவதால் பன்னாட்டு சந்தைகளில் எமது நாட்டு உற்பத்திப் பொருள்களுக்கான அங்கீகாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. வெளிநாட்டுச் சொத்துக்கள் மற்றும் ஏற்றுமதி வா்த்தகத்தை பலப்படுத்தும்போது பொருந்தோட்டத் துறை உட்பட ஏற்றுமதிக் கைத்தொழிலுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அதற்கான வளப் பங்கீட்டை குறைவின்றி வழங்குவதற்கு அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



கடந்த இரு வருட காலப்பகுதி போன்றே 2018 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளிலும் பெருந்தோட்டத்துறை அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.” - என்றாா். (ஓ)


# கைத்தொழில்துறை வளர்ச்சி அடைந்துள்ளது

## 5.2 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது

நடப்பாண்டின் இரண்டாவது காலாண்டு காலப்பகுதியில், கைத்தொழில் துறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தி சாா்ந்து 25.9 வீத பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் 5.2 வீத வளர்ச்சியை வெளிக்காட்டியுள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிட்டு நோக்கும்போது நடப்பு வருடத்தில் கைத்தொழில் துறை சாா்ந்த பிரிவுகளுக்கிடையில் ‘கட்டடவாக்கம்’ 9.3 சத வீத வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது. ‘சுரங்கம் அகழ்தல்’ மற்றும் ‘கல்லுடைத்தல்’ துறைகள் 18.4 வீத வளர்ச்சியைப் பதிவிட்டுள்ளன.

மேலும் நடப்பு வருடத்தின் இரண்டாவது காலாண்டு காலப்பகுதியில் கைத்தொழில் துறை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் 0.9 சத வீத வளர்ச்சியைத் தந்துள்ளன. (ஓ)



# பெண் இனத்துக்கு சாவுமணி அடிக்கும் பெண்கள்



உடுவிலூர் கலா

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. பாலியல் வன்புணர்வுகளும் வன்கொடுமைகளும் பெண்களின் மகிழ்ச்சியையும் வாழ்வியல் நெறிமுறைகளையும் சேதப்படுத்துகின்றன. பெண்ணடிமை நிலைகள் தொடர்கின்றன. இவை அனைத்துக்கும் ஆணாதிக்க கொடூரங்களே காரணம் என முழுமையாக ஆண்கள் மேல் குற்றம் சுமத்திவிடமுடியாது. ஆண்களால் நடைமுறைப்படுத்தப்படும் வன்முறைகளுக்கு பெண்களும் அத்திபாரம் இடுகின்றனர். பெண்களுக்கெதிரான வன்முறைகள் முற்றுப்பெற வேண்டும். ஆண்களைப் போல பெண்களும் சுதந்திரமாக வாழவேண்டும். உடல் ஆரோக்கியத்தோடு நீண்ட ஆயுளைப் பெறவேண்டும். காலம் காலமாக பெண்கள் சிந்தும் கண்ணீருக்கு விடிவு கிடைக்க வேண்டும். இவையே பெண்ணினத்தின் கனவுகளாக உள்ளன.

**அதிகரித்து வருகிறது பாலியல் துர்நடத்தை**

மனிதம் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாத பாலியல் வன்முறைகளும், கூட்டு வன்புணர்வுகளும் அண்மைக்காலங்களில் எமது சமூகத்தை உலுக்கிப்போட்டு வருகின்றன. வன்முறைகளையும், உயிரிழப்புக்களையும் சந்தித்தவர்களின் கண்ணீர் இன்றுவரை ஓயவில்லை. சாவின் நாள்களை எண்ணியபடி அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காட்டுமிராண்டித்தனமான பாலியல் வன்புனர்வுகளுக்கு போதைப் பொருள் பாவனையே காரணமாகிறது. இன அழிப்பினை நோக்கி வடபகுதிக்கு கடத்தப்படும் போதைப்பொருள்களை கண்மூடித்தனமாகப் பயன்படுத்தும் எம்மவர்கள் அழிவினை நோக்கிப் பன்முக கலாசாரங்களை தோற்றுவிக்கின்றனர். இதன் விளைவாக கொலை, தற்கொலை, வாள்வெட்டு, பாலியல் துர்நடத்தை என நாசகாரச் செயல்கள் தாரளமாக அரங்கேறுகின்றன. இவை மட்டுமல்ல எமது பண்பாட்டில் நல்லறம் போற்றும் இல்லறங்களில் உடைவுகளும் இழிவுகளும் ஏற்படுகின்றன. விவாகரத்தை நோக்கி செல்கின்றனர். பாடசாலை மாணவர்கள் பல உளமாற்றத்துக்கு ஆளாகி வன்முறை கலாசாரத்துக்கு உட்படுகின்றனர். அப்பாவிப் பெண்களும் சிறுமிகளும் மிருகத்தனமாக பாலியல் வன்புணர்வுக்கு ஆளாகி படுகொலை செய்யப்படுகிறார்கள். இன்னும் வகை வகையான பழிவாங்கல்களும் கொலைகளும் சம்பவிக்கின்றன. இவையெல்லாம் போதை தந்த மயக்கமே.



**போதைப்பொருள் குற்றவாளிகளாக பெண்களும் உள்ளனர்**

வடபகுதிக்குள் திருட்டுத்தன்மாய் நுழையும் போதைப்பொருள்கள் இளைஞர்களையும், சிறுவர்களையும் தமது மாயவலைக்குள் வீழ்த்தி தம் ஆதிக்கத்தைச் செலுத்துகின்றன. அவற்றைப் பாதுகாப்பதிலும், பதுக்கி வைப்பதிலும், விற்பனை செய்வதிலும் பெண்களும் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர் என்கிற கசப்பான உண்மையை வேதனையோடு ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். போதைப் பொருள் குற்றவாளிகளாக பெண்களும் கைதாகின்றனர். கடந்தவாரம் மூன்று பிள்ளைகளின் தாயொருவர் கஞ்சாவுடன் கைது செய்யப் பட்டார். இதேபோல் முன்னரும் சிலபல பதிவுகள் உள்ளன. பெண்கள் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவது நியாயமா? பெண்ணினத்தை அழிக்கும் செயல் அல்லவா?.

இன்னொரு நிகழ்வினை இவ்வாறு சுட்டிக்காட்டலாம். வித்தியாவின் கொலைக் குற்றவாளிகள் இருவரை தப்புவிக்க பெண் ஒருவர் பின்புலத்தில் நின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால், வித்தியாவுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்தப் பெண்களுக்கும் எதிராகவே செயற்பட்டுள்ளார். எவராக இருந்தாலும் சரி, பெண்கள் வன்முறைக்குள்ளாகாதவாறு அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் ஒவ்வொரு பெண்ணுக்கும் உண்டு. பெண்ணுக்கு பெண்தான் எதிரி என்று சொல்லிக்கொள்ளும் வழக்கம் எமது மத்தியில் பழக்கத்தில் உள்ளது. அது அப்படியே மெய்ப்படும் படியான செயற்பாடுகளே தற்போது இடம்பெற்று வருகின்றன. இன்று எமது சமூகத்தில் நிகழும் அனைத்து துன்பியல் நிகழ்வுகளுக்கும் போதைப்பொருள்களே காரணம். இளையோர் சமூகம் திசைமாறி சென்று கொண்டிருக்கின்றனர். அழிவினை நோக்கிய திசையில் சென்றுகொண்டிருக்கும் எமது சமூகத்தினை மீட்டெடுக்க வேண்டியவர்களான பெண்கள், போதைப் பொருள்கள் கடத்துவது பெண்மைக்கே அசிங்கமில்லையா?

**வேண்டும் மாற்றம்**

பெண்களே, பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பிறந்து, சட்டத்தின் முன் தேசத்துரோகிகளாக இனத்துரோகிகளாக, பெண்ணினத் துரோகிகளாக வலம் வருவதை நிறுத்துங்கள். பணத்தைத் தேடுவதற்கு எத்தனையோ நேர்கொண்ட பாதைகள் உள்ளன. 'அநியாயமாய் தேடுகிற அதிக வருமானத்திலும் பார்க்க நியாயமாய் தேடுகிற சொற்ப வருமானம் உத்தமம்' என்கிறது விலிலியம். வாழ்வாதாரத்தை சீர்செய்ய எத்தனையோ தொழில்கள் உள்ளன. தொழில்துறைத் திணைக்களத்தில் பதிவாகியுள்ளவர்களில் பெண்களே அதிகம். இவர்கள் வியக்கத்தக்க கைப்பணியாளர்களாக சுயதொழிலாளராக தமது கால்களில் நிற்கின்றனர். தம்மை வருத்தி தொழில் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். தனித்துவ குடும்பப் பெண்கள் கூட நியாயமான தொழில் செய்கின்றனர். பெண்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்புக்காக சிறுதொழில் முயற்சிப்படி, தொழிற்துறை திணைக்களம், புனர்வாழ்வு அதிகாரசபை போன்ற அரசஅமைப்புக்கள் வங்கிக்கடன்களாக, உபகரணங்களாக, பயிற்சிகளாக, ஆலோசனைகளாக பலவழிகளிலும் உதவி புரிகின்றன. அவற்றை செவ்வனே பயன்படுத்தி செம்மையாய் வாழ பெண்களே முயற்சி செய்யுங்கள். கண்மூடி வருவாய் தேடுவதோ, சமூகத்தை சீரழிக்கின்ற தொழில்கள் செய்வதோ பெண்மைக்கு இழுக்கு. பெண்கள் பெண்களாக வாழ வேண்டும். சமுதாய சீரழிவுகளுக்கு காரணமாகாமல், பெண்களாக வாழ வேண்டும். பால் நிலை சமத்துவத்துக்காக போராடிக்கொண்டிருக்கும் பெண்களின் கீழ்நிலை செயல்களாய் பெண்ணினம் அழிவினை எதிர் கொள்ளலாமா?

“பெண்களே, பட்டங்கள் ஆளவும், சட்டங்கள் செய்யவும் பிறந்து, சட்டத்தின் முன் தேசத்துரோகிகளாக இனத்துரோகிகளாக, பெண்ணினத் துரோகிகளாக வலம் வருவதை நிறுத்துங்கள். பணத்தைத் தேடுவதற்கு எத்தனையோ நேர்கொண்ட பாதைகள் உள்ளன. 'அநியாயமாய் தேடுகிற அதிக வருமானத்திலும் பார்க்க நியாயமாய் தேடுகிற சொற்ப வருமானம் உத்தமம்' என்கிறது விலிலியம். வாழ்வாதாரத்தை சீர்செய்ய எத்தனையோ தொழில்கள் உள்ளன. தொழில்துறைத் திணைக்களத்தில் பதிவாகியுள்ளவர்களில் பெண்களே அதிகம். இவர்கள் வியக்கத்தக்க கைப்பணியாளர்களாக சுயதொழிலாளராக தமது கால்களில் நிற்கின்றனர். தம்மை வருத்தி தொழில் செய்து வாழ்க்கை நடத்துகின்றனர்




## அஸ்தமிக்கப் போகின்றது குழப்பவாதிகள் எதிர்காலம்

ஒரு இலட்சியத்துக்காக கூட்டமைப்புடன் இணைந்து கொண்ட நாம் பதவிகளுக்காக அதிலிருந்து வெளியேற மாட்டோம். நியாயமான ஆசனப்பங்கீடு வழங்கினால் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவோம், இல்லையென்றால் ஒதுங்கி நிற்போம். ஆனால் எந்தக் காரணத்துக்காகவும் கூட்டமைப்பிலிருந்து வெளியேற மாட்டோம். சில தமிழ் அரசியல் வாதிகளுக்கு நெற்றியில் அடித்தது போன்று இவ்வாறு புளொட்டின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புளொட்டின் தலைவர் த.சித்தார்த்தன் தற்போதைய குழப்பமான சூழ்நிலையில் தமது முதிர்ச்சியை வெளிக்காட்டியுள்ளார். தமது தந்தையிடம் கற்றுக் கொண்ட அரசியல் பாடம் அவரைப் புதிய முறையில் சிந்திக்க வைத்துவிட்டது. எடுத்தோம், கவிழ்த்தோமென சில தமிழ் அரசியல்வாதிகள் தற்போது நடந்து கொள்கின்றனர். தமிழ் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையையும் அவர்கள் மறந்து விட்டனர். தாம் எதைச் செய்தாலும் மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள் என்ற குருட்டு நம்பிக்கையுடன் அவர்கள் செயற்படுகின்றனர். ஆனால் மக்களுக்கு எல்லாமே நன்கு புரியும். மக்கள் தமக்குரிய சந்தர்ப்பத்துக்காகக் காத்திருக்கின்றனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது மக்கள் வழங்கிய ஆணைகளில் ஒன்று என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதைத் தமது இஷ்டம் போன்று எவருமே உடைத்துவிட முடியாது. ஆனால் தமிழ் அரசியல் வாதிகள் தமிழர்கள் இன்று இருக்கின்ற நிலையை மறந்து தமது எண்ணம் போன்று நடந்து கொள்கின்றனர். புதுப்புதுப் பெயர்களில் கூட்டணிகள் உருவாக்கப்படுகின்றன.

தமிழ் மக்களின் உரிமைகளைக் கேட்டுப் பெறுவதற்காக இவை அமைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தமது சொந்த விருப்புக்களை நிறைவேற்றுவதற்காக அரசியல் வாதிகள் அமைத்துக் கொண்டமைதான் இவை. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் பல தமிழ் அரசியல் வாதிகளுக்கு ஞானம் கிடைத்து விடுமென எதிர்பார்க்க முடியும். இதன் பின்னர் இவர்களின் அரசியல் வாழ்க்கையே அஸ்தமித்தும் விடலாம்.

# சனிப்பெயர்ச்சி ராசிபலன்கள்



எல்லோரிடமும் கண்டிப்பு உள்ள தனுசு ராசி அன்பர்களே, நீங்கள் எதிலும் சுறுசுறுப்பாக இருப்பவர். துணிச்சலுக்கும், தைரியத்திற்கும் பெயர் போனவர். வாக்குத் தவறாதவர். உழைப்பின் மூலமாக மட்டுமே புகழை அடைய விரும்புபவர்கள். குறிக்கோளுடன் வாழ்ந்து வாழ்க்கையை எடுத்துக்காட்டாக வாழ்பவர்கள்.

இதுவரை உங்களது அயன சயன போக ஸ்தானத்தில் இருக்கும் சனி பகவான் விலகி ராசிக்கு வருகிறார்.

மூன்றாம் பார்வையால் தைரிய வீரிய ஸ்தானத்தையும், ஏழாம் பார்வையால் களத்திர ஸ்தானத்தையும், பத்தாம் பார்வையால் தொழில் ஸ்தானத்தையும் பார்க்கிறார்.

**பலன்கள்:**

உடல்சோர்வு அதிகரிக்கலாம். வருமானம் சீராகவே இருக்கும் என்றாலும் பேராசைக்கு இடம் கொடுக்காமல் பணியாற்றவும். நண்பர்கள் போல் பழகும் விரோதிகளிடம் கவனமாக இருக்கவும். அவர்கள் உங்களுக்கு எதிராகச் சில சமயம் சதி வேலைகளில் ஈடுபடலாம். ஆனாலும் கலங்க வேண்டாம். துர்க்கையன்னையைத் தொடர்ந்து வழிபட்டால், எதிரிகள் உதிரிகளாகித் தொலைந்து போவார்கள். யாராக இருப்பினும் நன்கு யோசித்த பிறகே வாக்குக் கொடுக்கவும். மற்றபடி கடன் தொல்லைகள் ஏற்படாது. தர்ம காரியங்களைச் செய்வீர்கள். தடங்கல்களைத் தாண்டி வெற்றியடைவதில் ஐயமேயில்லை. அனுகூலமில்லாத விஷயங்களையும் உங்களுக்குச் சாதகமாக மாற்றிக்கொள்ளும் புத்தி சாதுரியம் ஏற்படும்.

உங்களின் தனித் தன்மையை இழக்க மாட்டீர்கள். அடுத்தவர்கள் உங்களுக்கு அறிவுரை கூறும்படி நடந்து கொள்ளமாட்டீர்கள். அரச தொடர்புகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். நீண்ட தூரப் பயணங்களால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்துச் செய்யும் காரியங்களில் வெற்றிவாகை நிச்சயம். தார்மீகச் சிந்தனைகளை மேலோங்கச் செய்வார். ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள்.

உங்கள் உழைப்பு வீண் போகாது. இது நாள் வரை உடலில் இருந்த சோர்வும் அயர்ச்சியும் மறையும். தேக ஆரோக்கியம் சீராக மாறும். குடும்பத்தில் மருத்துவச்செலவுகள் குறையும்.

தாயார் வழியில் இருந்துவந்த மன ஸ்தாபங்கள் மறைந்து சுமுகமான உறவு உண்டாகும். குடும்பத்திலும், உற்றார் உறவினர்களிடமும் உங்கள் செல்வாக்கு உயரும். உங்கள் செயல்களைப் புதிய உத்வேகத்துடன் செய்து முடிக்க வழி பிறக்கும். திட்டங்களைச் சரியாகத் தீட்டி அவற்றைப் படிப்படியாக, வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள். புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். உங்கள் நண்பர்கள் உங்கள் பேச்சைக் கேட்டு நடப்பார்கள். பெரியோர்களின் ஆதரவு எப்போதுமிருக்கும். ஓய்வு நேரத்தில் கேளிக்கைகளில் ஈடுபட்டு மகிழவும் சந்தர்ப்பங்கள் அமையும்.



தனுசு

**உத்தியோகஸ்தர்களுக்கு:** பயணங்களால் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். சிலர், விரும்பிய வெளியூருக்கு மாற்றலாகிச் செல்வார்கள். மேலதிகாரிகள் சற்று பாராமுகமாகவே நடந்து கொண்டாலும் தொல்லைகள் கொடுக்க மாட்டார்கள். ஆனால் சக ஊழியர்கள் உங்களுக்குப் பக்கபலமாக இருப்பார்கள். உரிய நேரத்தில் பதவி உயர்வு கிடைக்கும். சோம்பலுக்கு இடம் கொடுக்காமல் உங்கள் வேலைகளைத் திட்டமிட்டுச் சரியாகச் செய்வது அவசியம்.

வியாபாரிகளுக்குத் தொழிலில் இருந்த போட்டிகள் குறையும். இலாபம் அதிகரிக்கும். நண்பர்களையும், வாடிக்கையாளர்களையும் அரவணைத்துச் சென்று வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். கொடுக்கல், வாங்கலில் இருந்த தொய்வுகள் நீங்கி, மனதில் உற்சாகம் தோன்றும். அதேநேரம் வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் உங்கள் கைக்கு வந்து சேருவதில் தாமதம் ஏற்படும் என்பதால் புதிதாக யாருக்கும் கடன் கொடுக்க வேண்டாம். அரசியல்வாதிகளின் பணியாற்றும் திறன் அதிகரிக்கும். கட்சி மேலிடத்தால் உற்சாகப்படுத்தப்படுவீர்கள். கட்சியில் புதிய பொறுப்புகளைப் பெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அடிக்கடி பயணங்களைச் செய்து, கட்சிப் பணிகளைத் தீவிரமாக ஆற்றி ஆதாயம் பார்ப்பீர்கள்.

**கலைத்துறையினருக்கு:** எதிர்பார்த்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். உங்கள் பெயரும், புகழும் உயரும். ரசிகர்களோடு கருத்து வேறுபாடுகள் ஏற்பட நிறையவே வாய்ப்புண்டு. ஆனால் அவற்றை வெளிக்காட்டிக் கொள்ளாமல் ரசிகர் மன்றங்களுக்குப் பணம் செலவு செய்வீர்கள். சக கலைஞர்களின் நன்மதிப்பைப் பெறுவீர்கள்.

**பெண்களுக்கு:** கணவரின் பாராட்டுகளை எளிதில் அடைவீர்கள். புதிதாக ஆடை, ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். இல்லத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். சுப காரியங்களில் கலந்து கொள்வீர்கள். உடல் நலத்தில் மட்டும் சற்று கவனமாகவே இருக்கவும்.

**மாணவர்களுக்கு:** நல்ல மதிப்பெண்களை வாங்க வழி வகையுண்டு. பெற்றோர்களின் ஆதரவு கிடைக்கும். அவர்களால் உங்கள் எதிர்காலத் திட்டங்கள் எளிதில் நிறைவேறும். சக மாணவர்களின் ஒத்துழைப்பைப் பெறுவீர்கள். அவர்களிடம் அனாவசிய சண்டை சச்சரவுகளைத் தவிர்க்கவும். மற்றும்படி உங்கள் உடல் நலம் நன்றாக இருக்கும். தினமும் உடற்பயிற்சிகளைச் செய்தால் மேலும் உடல் வலிமை பெறலாம்.

## வரலாற்றில் இன்றைய தினம் 12.12.2017



1963 - பிரிட்டனிடம் இருந்து கென்யா சுதந்திரம் பெற்றது.

1979 - அங்கிகரிக்கப்படாத சிம்பாப்வேயை மீண்டும் தனது அதிகாரத்துக்குள் கொண்டுவந்தது பிரிட்டன்.

1988 - தெற்கு லண்டனில் மூன்று ரயில்கள் மோதியதில் 53 பேர் உயிரிழப்பு.

1999 - போர்த்துக்கல் வானூர்தியொன்று விபத்துக்கு உள்ளானதில் 35 பயணிகள் உயிரிழந்தனர்.

1999 - பங்களாதேஷில்படகுவிபத்தொன்றில் 125 பேருக்கும் அதிகமானோர் சாவு.

2002 - அணுவாயுதங்களையும் பயன்படுத்தத் தயங்கோம் என்று ஈராக்குக்கு அமெரிக்கா எச்சரிக்கை.

2016 - இனவாதக் கூச்சல்கள் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று தேசிய மீலாத் விழாவில் தலைமை அமைச்சர் பேச்சு.

2016 - தமிழ் பிரிவினைக்கு தீனிபோடுகிறது கூட்டு அரசு என்று கம்மன்பில குற்றச்சாட்டு.

2016 - இத்தாலிக் கடல் பரப்பில் ஒரேநாளில் ஆயிரத்து 164 பேர் மீட்கப்பட்டனர்.



2012 - வடகொரியா தனது முதலாவது விண்கலத்தை வெற்றிகரமாக செலுத்தியது

## நாளை

**13.12.2017**

புதன்கிழமை

**கார்த்திகை 27**

திதி: ஏகாதசி முழுவதும்
நட்சத்திரம்: சித்திரை பி.இ. 12.21 வரை
சுபநேரம்: 04.50—06.20 வரை
ராகுகாலம்: 12.20—01.50 வரை

சினிமா




# மதுர வீரன் பொங்கலன்று திரைக்கு

பி.ஜி.முத்தையா இயக்கத்தில் சண்முகபாண்டியன் நடிப்பில் உருவாகி இருக்கும் 'மதுர வீரன்' படம் எதிர் வரும் பொங்கல் பண்டிகையன்று திரைக்குவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'சகாப்தம்' படத்திற்கு பிறகு விஜயகாந்தின் இளைய மகன் சண்முகபாண்டியன் நடிப்பில் உருவாகி இருக்கும் படம் 'மதுர வீரன்'. சண்முக பாண்டியன் ஜோடியாக புதுமுக நடிகை மீனாட்சி நடிக்கிறார்.

இவர்களுடன் சமுத்திரகனி, ராமமூர்த்தி, மைம் கோபி, பி.எல்.தேனப்பன், மாரிமுத்து, ராஜேந்திரன், பால சரவணன் உள்ளிட்ட பலரும் நடித்துள்ளனர்.

இந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலி நல்ல வரேவற்பைப் பெற்றதை அடுத்து படம் எதிர்வரும் பொங்கல் பண்டிகையன்று திரைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

என் புருசனோட சண்டை போடவே பயமா இருக்கு... ஏன் அடிச்சிடுவாரா...?




சீ.... சீ... .சமைக்கும்போது உப்பு, காரத்தை அதிகமாக போட்டு பழிவாங்கிறாரு....

டேய்! நீ யார் எண்டே எனக்குத் தெரியாது. என்கிட்ட கடன் கேக்குறாய்..?



தெரிஞ்சவங்ககிட்ட கேட்டா 'நட்பு' கெட்டுப் போயிடும். அதான்...

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயல் திறன் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். தாராள பண வரவு கிடைக்கும். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி பெருகும்.

**இடபம்:** நண்பர் மேல் அக்கறை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் பணிச்சுமை ஏற்படும். திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

**மிதுனம்:** சமூக நிகழ்வு மனதைப் பாதிக்கலாம். தொழில், வியாபார குளறுபடியை தாமதமின்றி சரி செய்யவும். அளவான பணவரவு கிடைக்கும்.

**கடகம்:** பணிகளைச் சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க வாய்ப்பு உருவாகும். ஆதாய பண வருமானம் கிடைக்கும்.

**சிங்கம்:** பணி நிறைவேற கூடுதல் முயற்சி அவசியம். தொழில், வியாபார வளர்ச்சி சுமாரான அளவில் இருக்கும். அவசியம் அறிந்து செலவு செய்யவும்.

**கன்னி:** குடும்ப உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும். தொழில், வியாபாரம் திருப்திகரமாகும். மாணவர்கள் பொறுப்புணர்வுடன் படித்து பாராட்டுப் பெறுவர்.

**துலாம்:** விட்டுக் கொடுத்து செயல்படுவது நல்லது. தொழில், வியாபார நடைமுறை சுமாரான அளவில் இருக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் இருக்கும்.

**விருச்சிகம்:** செயலில் புத்துணர்வு அதிகரிக்கும். தொழில், வியாபார நடைமுறை திருப்திக ரமாகும். ஆதாய பண வரவு கிடைக்கும். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள்.

**தனுசு:** உறவினர்களிடம் அதிக அன்பு கொள்வீர்கள். உங்களின் மதிப்பு உயரும். தொழில் வியாபாரம் செழிக்க வாய்ப்பு உருவாகும். கூடுதல் வருமானம் கிடைக்கும்.

**மகரம்:** சூழல் அறிந்து உதவி செய்யவும். தொழில், வியாபாரம் அதிக உழைப்பால் வளர்ச்சி பெறும். புதிய வழிகளில் பணச்செலவு ஏற்படலாம்.

**கும்பம்:** நினைத்த காரியம் நிறைவேற தாமதமாகலாம். நல்லோரின் ஆலோசனை நன்மை பெற உதவும். தொழில், வியாபாரத்தில் இலக்கு கால அவகாசத்தில் நிறைவேறும்.

**மீனம்:** ஞாபக சக்தி அதிகரிக்கும். சிரமம் வெல்லும் வழி அறிவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிப் பணி இனிதாக நிறைவேறும். கூடுதல் வருமானம் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | | | | 1 | |
| | | 4 | 2 | 8 | | | 7 | 3 |
| | 2 | | 6 | | | | 4 | |
| | | | | 9 | | | | 8 |
| | 5 | 1 | 8 | | | 7 | 9 | |
| 4 | | | | 5 | 7 | | | |
| | 7 | | | | 8 | | 2 | |
| 8 | | 2 | 7 | 3 | 4 | | | |
| | 4 | | | | | | 8 | 7 |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 5 | 3 | 2 | 8 | 6 | 1 | 4 | 9 |
| 2 | 6 | 1 | 7 | 4 | 9 | 3 | 5 | 8 |
| 8 | 9 | 4 | 3 | 5 | 1 | 2 | 6 | 7 |
| 4 | 8 | 5 | 9 | 2 | 3 | 6 | 7 | 1 |
| 9 | 3 | 7 | 1 | 6 | 4 | 5 | 8 | 2 |
| 1 | 2 | 6 | 5 | 7 | 8 | 9 | 3 | 4 |
| 6 | 1 | 8 | 4 | 3 | 2 | 7 | 9 | 5 |
| 5 | 4 | 9 | 6 | 1 | 7 | 8 | 2 | 3 |
| 3 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்கலை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

# மனிதாபிமானம்

குரு ஒருவர் தன் சீடர்கள் சிலருடன் பேசியபடி, ஆற்றின் கரையோரம் நடந்து சென்று கொண்டிருந்தார். திடீரென குரு கால் வழுக்கி, நிலைதடுமாறி ஆற்றில் விழப் பார்த்தார்.

அப்போது அருகிலிருந்த ஒரு சீடன், 'சட்'டென்று குருவின் கையைப் பிடித்து இழுத்து, அவரை ஆற்றில் விழாமல் காப்பாற்றினான்.

அவன் அவரைக் காப்பாற்றாமல் இருந்திருந்தால், ஆற்றில் விழுந்த அவர், பெருக்கெடுத்து ஓடும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருப்பார்.

குருவும் ஏனைய சீடர்களும் காப்பாற்றிய சீடனுக்கு, நன்றி தெரிவித்தனர்.

இதனால் அந்த சீடனுக்குத் தற்பெருமை அதிகமாகி விட்டது. பார்ப்பவர்களிடமெல்லாம், "ஆற்றில் விழ இருந்த குருவை நான்தான் காப்பாற்றினேன். இல்லாவிட்டால், இந்நேரம் குரு ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு இறந்திருப்பார்" என்று கூறத் தொடங்கினான்.

இந்த விஷயம் குருவின் காதுக்கு எட்டியது. ஆனாலும் பொறுமையைக் கடைப்பிடித்தார்.

மறுநாள் குரு அதே சீடர்களை அழைத்துக் கொண்டு, அதே ஆற்றின் கரையோரம் நடந்து சென்றார்.

அன்று சம்பவம் நடந்த இடம் வந்ததும், முன்பு தன்னைக் காப்பாற்றிய சீடனிடம், "என்னை ஆற்றில் தள்ளிவிடு! என்றார்.

அந்த சீடன் திகைத்தான்.ம்! தள்ளு" என்றார் குரு.

"அது வேண்டாம் குருவே!" என்றான் சீடன்.

"இது குருவின் உத்தரவு. கேட்டு நடப்பது உன் கடமை.

ம் என்னை ஆற்றில் தள்ளு!" என்றார்.

மிரண்டுபோன சீடன் அவரை ஆற்றில் தள்ளி விட்டான்.

மற்ற சீடர்கள் என்ன நடக்கப்போகிறதோ? என்று திகிலுடன் பார்த்தனர்.

ஆற்றில் விழுந்த குரு, எந்தவித பதற்றமும் இல்லாமல், அமைதியாக நீந்திச் சென்று மறுகரையைத் தொட்டுவிட்டுத் திரும்பி வந்தார்.

அதைப் பார்த்த சீடர்கள் அனைவரும் திகைத்தனர்.

குரு கரைக்கு ஏறி வந்தார்.

தள்ளிவிட்ட சீடனைப் பார்த்தார்.

"இப்போதும் நீதான் என்னைக் காப்பாற்றினாயா?" என்று கேட்டார். அந்த சீடன் தலை குனிந்தான்.

"ஆபத்து நேரத்தில் ஒருவரைக் காப்பாற்றுவது, ஒருவருக்கு உதவுவது என்பது மனிதாபிமானமுள்ள செயல்.

ஆனால், அதை விளம்பரப்படுத்தி பெருமையடித்துக் கொள்வது அந்த மனிதாபிமான குணத்துக்கே இழுக்கைத் தேடித் தரும். அந்த மனிதன் ஒருநாளும் சான்றோனாக முடியாது!" என்றார் குரு.

தற்பெருமை கொண்ட சீடன், குருவிடம் மன்னிப்புக் கேட்டு, தற்பெருமை எண்ணத்தைக் கைவிட்டான்..

ஆம்,நண்பர்களே,

எனக்குத் தெரியும் என்பதற்கும், எனக்கு மட்டும்தான் தெரியும் என்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. எல்லாம் தெரிந்த மனிதனும் இல்லை, எதுவும் தெரியாத மனிதனும் இல்லை என்ற உலக உண்மையை மறந்த மனிதன்தான், இந்த தற்பெருமை வலையில் விழுந்து அவமானப் படுகிறான்.

**நீங்கள் மலையாக இருப்பினும் மண்கும்பம் என உணர்வு கொள்ள வேண்டும்....**



## மற்றையவரின் துன்பத்திலும் பலர் சிரித்து மகிழ்வர்

அமைச்சரவை கூடிற்று. மண்டபத்தில் அனைத்து அமைச்சர்களும் இருந்தனர். அப்பொழுது அரசர் அமைச்சர்களைப் பார்த்து "அமைச்சர்களே நான் மக்களுக்கு போட்டி ஒன்றை நடத்தி அவர்களுக்குப் பரிசளிக்க விரும்புகிறேன். இதனை மக்களுக்கு அறிவியுங்கள்" என்றார். "சரி அரசே போட்டிக்கான விதிமுறைகளைக் கூறுங்கள்" என்றனர் அமைச்சர்கள். "நான் இதுவரையில் சாப்பிட்டு அறியாத பழம் ஒன்றைக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் தகுந்த பரிசு அளிக்கப்படும். தவறி நான் சாப்பிட்ட பழங்கள் ஏதாவது கொண்டு வந்தால் அதனைக் கொண்டு வந்தவர் அந்தப் பழத்தை முழுமையாகச் சாப்பிட வேண்டும். இதுதான் அவருக்குத் தண்டனை" என அறிவிக்கும்படி மன்னர் கூறினார். விடயம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட நாளில் மக்கள் பலரும் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு பழங்களைச் சேகரிக்கத் தொடங்கினர். எப்படியும் அரசர் தரும் பெறுமதியான பரிசைப் பெற்றுவிட வேண்டும் என்பது அவர்களது அவாவாக இருந்தது. இதே மக்கள் போட்டிக்காக குறிக்கப்பட்ட நாளில் மாம்பழம், தோடம்பழம், விளாம்பழம், பலாப்பழம், திராட்சைப் பழம் எனப் பல வகையான பழங்களுடன் அரசன் முன்னிலையில் வரிசையில் நின்றனர்.

மன்னர் தன் இருக்கையில் வந்து அமர்ந்ததும் போட்டி ஆரம்பமானது. முதலாவது திராட்சைப் பழக்குலை வைத்திருந்தவர் முன்னே வந்தார். அரசர் திராட்சைப் பழத்தை முன்னர் சாப்பிட்டிருந்தமையால் திராட்சைப் பழங்களைக் கொண்டு வந்தவரையே அவற்றைச் சாப்பிடும்படி கூறி சாப்பிட வைத்தார். அடுத்து விளாம்பழம் வைத்திருந்தவர் அரசர் முன் வந்தார். அரசர் அதனையும் சாப்பிட்டவராக இருந்த படியால் விளாம்பழத்தை முழுமையாக உண்ணும்படி கூறினார். அப்போது அவர் விளாம்பழத்தை உடைத்து உண்ணப்போக தடுத்து அதனை முழுதாக உண்ணும்படி கூறினார். இப்போது அரசனின் ஏவலாளிகள் இருவர் விளாம்பழத்தை உடையாது பிடித்திருக்க ஒருவர் அவரது வாயில் பழத்தைத் திணித்தார். இதனால் பழம் திணிக்கப்பட்டவரின் வாய் கிழிந்து குருதி வடிய ஆரம்பித்தது. ஆனால் அவரோ அந்த வேதனையைப் பொருட்படுத்தாது பலமாக சிரித்த வண்ணம் நின்று கொண்டிருந்தான். எல்லோரும் இவனது சிரிப்புக்கு அர்த்தம் புரியாமல் விழித்தனர். அரசனும் "என்ன இது வாய் கிழிந்து குருதி ஓடுகிறது. இவன் இப்படி சிரித்துக் கொண்டிருக்கிறானே" என ஆச்சரியப்பட்டு காரணத்தை வினவுவதற்காக பழம் வாயில் திணிப்பது நிறுத்தப்பட்டது. மன்னர் அவனிடம் "நீ ஏன் இப்போது சிரிக்கிறாய்"? என வினவினார் அதற்கு அவன் "மன்னா இந்த விளாம்பழம் கொண்டு வந்த எனக்கு இப்படி எல்லாம் நடக்கிறது. எனக்குப் பின்னால் ஒருவர் பலாப்பழம் வைத்துக்கொண்டு நிற்கிறார். அவரின் நிலை என்னாகுமோ என நினைத்தேன். எனக்கு சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது" என்றான். இந்தப் பதிலைக் கேட்டு அரசர் முதல் சபையோர் அனைவரும் வியந்து நின்றனர்.

**தமக்கு வரும் துன்பத்தைப் பார்க்கிலும் பிறருக்கு வரும் துன்பங்களை விரும்பி ரசிக்கும் மானிடப் பிறவிகளும் இவ்வுலகில் வாழ்கின்றார்கள் என்பதை அறிவோம். அத்தகையவர்களை இனம்காண்போம்.**



# ஒலிம்பிக்கின் சில முக்கிய விடயங்கள்

**ஒலிம்பிக் உறுதி மொழி**

ஒலிம்பிக் விளையாட்டின் தொடக்க நாள் நிகழ்ச்சியில் அனைத்து வீரர்களின் சார்பில் ஒரு வீரர் இந்த உறுதி மொழியை வாசிப்பார். அந்த உறுதி மொழியாவது "ஒலிம்பிக் உறுதி மொழியில் போட்டியாளர்களின் சார்பில் நான் உறுதியளிக்கிறேன். நாங்கள் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கிறோம். போட்டிகளின் விதிகளை நாங்கள் மதித்துக் கீழ்ப்படிவோம். உண்மையான விளையாட்டு வீரர்களுக்குரிய உத்வேகத்துடன் நாங்கள் விளையாடுவோம். எங்களுடைய குழுக்கள் மற்றும் விளையாட்டுக்குரிய பெருமைகளையும் மதிப்பையும் காப்பாற்றுவோம்" என்பதாகும்.

**ஒலிம்பிக்கின் நோக்கம்**

1908ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிப் போட்டியின் போது பிஷப் எந்தல் பெர்ட் நடத்திய பிரார்த்தனையின் போது கூறிய வாசகம் ஒன்றை ஒலிம்பிக் போட்டிகளின் நோக்கமாக கவ்பெர்ட்டின் வடிவமைத்தார். ஒலிம்பிக் போட்டிகளின் மிக முக்கியமான நோக்கம் 'வெற்றி பெறுவது அல்ல. போட்டிகளில் பங்கேற்பதுதான்'. அதாவது எமது வாழ்க்கையின் முக்கியமான விடயம் 'வெற்றி பெறுவதல்ல. போராடுவதுதான்' என்பதைப் போல் இதைக் கருதவேண்டும். வெற்றி பெறுவதற்காக கலந்து கொள்வதை விட நன்றாகப் போட்டியிடுவதுதான் அவசியம் என்பதை வீரர்கள் உணர வேண்டும்.

**ஒலிம்பிக் தீபம்**

ஒலிம்பியாவில் புராதன ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே ஒலிம்பிக் தீபம் ஏற்றும் வழக்கம் இருந்து வந்தது. நவீன ஒலிம்பிக்கில் 1928ஆம் ஆண்டு முதன் முதலாக ஒலிம்பிக்தீபம் ஏற்றப்பட்டது. 1936ஆம் ஆண்டு இப்போது நடைபெறும் ஒலிம்பிக் ஜோதி தொடர் ஓட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**ஒலிம்பிக் கீதம்**

முதல் ஒலிம்பிக் கீதம் நவீன ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கிய 1896ஆம் ஆண்டு பாடப்பட்டது. இந்தக் கீதம் ஸ்பைரோஸ் சமராஸ் என்பவரால் இசையமைக்கப்பட்டது. இதில் சில வார்த்தைகளை கோஸ்டில் பலமாஸ் என்பவர் இணைத்தார். ஒலிம்பிக் கொடி ஏற்றப்படும் பொழுது இந்தக் கீதம் இசைக்கப்படும்.

**பதக்கங்கள்**

1912ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இருந்து தான் தங்கப் பதக்கம் வழங்கப்படுவது வழமையாக்கப்பட்டது. அதற்கு முன்னர் தங்கப் பதக்கம் வழங்கப்பட்டதில்லை. இந்தப் போட்டியில் வழங்கப்படும் தங்கம், வெள்ளி, வெண்கலம் ஆகிய பதக்கங்களை ஒலிம்பிக் போட்டி நடைபெறும் நகரிலுள்ள போட்டி அமைப்புக்குழுதான் வடிவமைக்கும்.

வெள்ளிப் பதக்கத்தில் 92.5 சதவீதம் நிஜ வெள்ளியும் தங்கப் பதக்கத்தில் 6 கிராம் தங்கமும் கலந்திருக்க வேண்டும்.


**முதல் தொடக்க நிகழ்ச்சி**

ஒலிம்பிக் போட்டியின்போது நடைபெறும் வண்ணமயமான தொடக்க நாள் நிகழ்ச்சி 1908ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற போட்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**தொடக்க நாள் அணி வகுப்பு**

அணி வகுப்புக்கு எப்போதுமே கிரேக்க நாட்டு விளையாட்டுக் குழுவினர்தான் தலைமை வகிப்பர். அணிகளின் வரிசை விளையாட்டு நடைபெறும். நாட்டின் மொழியிலுள்ள அகரவரிசை விதிப்படி நடைபெறும் போட்டிகளை நடத்தும் நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் எப்பொழுதுமே கடைசியில்தான் அணி வகுத்துச் செல்லல் வேண்டும்.

## வர்ணம் தீட்டுவோம்





## விட்டாச்சு லீவு

கடந்த வெள்ளிக்கிழமை எமது பாடசாலைக்கு மூன்றாம் தவணைக்கான லீவு ஆரம்பித்து விட்டது. கடந்த ஒரு வருட காலமாக கல்வியிலே நாம் கண்ணும் கருத்துமாக இருந்து படித்தோம். இறுதி நாளில் எமது கையில் கிடைத்த தேர்வு அறிக்கையின்படி நாம் எல்லோரும் நல்ல மதிப்பெண்கள் பெற்று வகுப்பில் தேர்ச்சியடைந்து விட்டோம். அடுத்த புதிய மாணவ நண்பர்களைச் சந்திப்போம். புதிய ஆசிரியர்களையும் சந்திப்போம். எம்மில் பலருக்கு பாடசாலைகள் கூட புதியதாக இருக்கும் அடுத்த ஆண்டில் புதிய பாடங்களைக் நன்றாகக் கற்பதில் எமக்கு பல்மடங்கு மகிழ்ச்சி. இந்த விடுமுறை நாள்களில் கிறிஸ்து பிறப்பு(கிறிஸ்மஸ்) புத்தாண்டுப் பிறப்பு தொடர்ந்து தைப்பொங்கல் என்று ஒரே பண்டிகைகளாக வரவிருக்கின்றன. சிறுவர்களாகிய எமக்கு புத்தாடை அன்பளிப்புக்கள் பட்சணங்கள். விளையாட்டுக்கள் என்று ஒரே கொண்டாட்டம்தான் எம்மில் பலர் குடும்பத்துடன் சுற்றுலாவும் செல்லவுள்ளோம். நாட்டின் பல பகுதிகளிலும் வாழும் எமது உறவினர்களை சந்தித்து எமது மகிழ்ச்சி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளப்போகிறோம். புதிய புதிய அனுபவங்களைப் பெறப் போகிறோம். ஒரு மாத காலமுள்ள இந்த விடுமுறையை மகிழ்வுடன் கழிப்போம் மீண்டும் புத்தாண்டில் பாடசாலையில் சந்திப்போம்.

## சிந்தனைக்கு

- நீ எதிர்பார்த்த நேரம் இன்னும் வரவில்லை என்பதற்காக கடிகாரத்தைக் கோபித்து என்ன பயன்?
- சுவரில் ஆணி அடித்து படத்தை மாட்டி விட்டோம் என்பதோடு திருப்தி அடைந்து விடாமல் அடித்த ஆணி துருப்பிடிக்காமல் இருக்கிறதா என்பதை அடிக்கடிப் பார்த்துக்கொள்.
- நீ எப்படி வாழ்ந்தாய் என்பது முக்கியம்தான். ஆனால் அதைவிட முக்கியமானது இப்பொழுது எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறாய் என்பதாகும்.
- கற்றுக்கொள்ள வேண்டியது முக்கியம். அதைவிட முக்கியம் கற்றுக்கொண்டதைக் கடைப் பிடித்து நடப்பது.
- குப்பையைத் தூக்கி எறியும் பொழுது அது உன்னிடம் திரும்பி வராத இடத்தில் தூக்கி எறி.
- உனது வாழ்க்கை வண்டி மெதுவாக நகர்வதும் வேகமாகச் செல்வதும் அந்த வண்டியில் பூட்டப்பட்ட உனது செயல்கள் என்னும் மாடுகளைப் பொறுத்திருக்கிறது.
- தெருவில் கிடக்கும் பொருள்களெல்லாம் வேண்டாத பொருள்கள் என்ற முடிவுக்கு வருவது தவறு. சிலரால் இழக்கப்பட்ட பொருள்களும் தெருவில் கிடக்கலாம்.
- தடைகளைக் கண்டு கலங்காதே. தடைகளில்தான் உனது வீரமும் தியாகமும் மனப் பக்குவமும் உயர்ந்த நோக்கங்களும் வளர்கின்றன.

# கால வெளிக் கணிப்பு

## ஒளியாளுகையின் பிரபஞ்சத் தொனிப்பு

ஆனந்தவாணி

சூரியனை விட மிக அதிக நிறை கொண்ட விண்மீன்களிலிருந்து வெளியாகும் ஒளியின் அலைநீளம் (Wave Length), அவ் விண்மீன்களின் ஈர்ப்பால் மாற்றமடைந்து சிவப்பு விலகலடைவதை (Red s_ift) விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

**வாயுப் படிமம்**

சூரியனை விட பல மடங்கு நிறை கொண்ட விண்மீன்களின் எரிபொருள் தீர்ந்து, அதாவது அவற்றின் ஐதரசன், ஹீலியம் வாயுக்கள் அனைத்தும் அணுக்கருப் பிணைப்பின் மூலம் கனமான தனிம அணுக்களாக மாறி அவற்றின் உளழுத்ததினால் சுருங்கி 'கருந்துளையாக' மாறும். இந்தக் கருந்துளைகள் ஒளியையும் ஈர்க்குமளவு ஈர்ப்பு வலிமை கொண்டவை. அதனால் இவற்றை காண முடியாது.

கருந்துளைகளும், அதிநிறை கொண்ட நட்சத்திர எச்சங்களும், ஒளியை வளைப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர். எனில், ஐன்ஸ்டீனின் ஈர்ப்பு அலைகளும் பிரபஞ்சத்தில் இருக்க வேண்டும், பரவ வேண்டும் என அவற்றை கண்டு கொள்ள ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன.

1960 ஆம் ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்ட ஈர்ப்பு அலைகளை உணர்ந்து, அளவிடும் கருவியை உருவாக்கும் ஆய்வுகள், பல படிநிலைகளையும் நிதிசார் இன்னல்களையும் தாண்டி கடந்த 2000 ஆம் ஆண்டு முடிவுற்றது.

**'லிகோ'**

'லிகோ' (LIGO) எனப் பெயரிடப்பட்ட இக்கருவியில் லேசர் ஒளிக்கற்றை ஒன்று முதலில் உருவாக்கப்படும், அது பின்னர் இரண்டாக பிரிக்கப்பட்டு, ஒன்றுக்கொன்று செங்குத்தான இரண்டு சுரங்கக் குழாய்களில் அனுப்பப்படும். இரண்டும் துல்லியமாக சமதூரம் (4 கிலோமீற்றர்) சென்று அங்குள்ள கண்ணாடியில் பட்டு, மீண்டும் ஒரு இடத்துக்கு வருகிறது. பல முறை இவ்வாறு பயணப்பட்ட பின் இரு கற்றைகளும் ஒப்பு நோக்கப்படும்.

இரண்டு ஒளிக்கற்றைகளும் பயணித்த தூரம் ஒன்றாக இருந்தால், இரண்டு ஒளிக்கற்றைகளின் 'அதிர்வெண் - அலைநீளம்' ஒன்றை ஒன்று சமன் செய்துவிடும். இரண்டு ஒளிக்கற்றைகளின் 'அதிர்வெண் - அலைநீளம்' சமமாக இல்லையெனில், இரண்டும் பயணித்த தூரத்தில் மாற்றம் இருப்பதை உணரலாம். இந்த மாறுபாட்டை 'லிகோ' கருவி கண்டறியும்.

'லிகோ' கருவியில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை முதல் சோதனைகள் நடத்தப்பட்டன. அதில் குறிப்பிடத்தகுந்த வெற்றி கிடைக்கவில்லை. பின்னர், கருவி மேம்படுத்தப்பட்டு 2015 ஆம் ஆண்டு மீண்டும் தனது சோதனைகளை தொடங்கியது.


**ஏற்றத்தாழ்வு**


நிறையுடன் கூடிய இரு பருப்பொருள்கள் காலவெளித் துணியில் ஒன்றை ஒன்று சுற்றி வருவதாக உருவகம் செய்து கொள்வோம். அவை ஒன்றை ஒன்று சுற்றுவதால் அவற்றின் பள்ளங்கள் (வளைவுகள்), அலை போன்ற அதிர்வுகளை துணியில் ஏற்படுத்தும்.

இந்த அலைகள் வேறொரு பொருளை கடந்து செல்லும் போது, அப்பொருளின் காலம், வெளியில் ஏற்றத்தாழ்வை உருவாக்கும். அதாவது காலமும் வெளியும் ஒரு புறம் விரியும், அதன் செங்கோட்டு எதிர்த் திசையில் குறுகும்.

காலத்திலும், வெளியிலும் (தூரத்திலும்) ஏற்படும் இம்மாற்றம், 'லிகோ' இன் இரண்டு செங்குத்துக் குழாய்களில் ஒன்றை நீட்டும், மற்றொன்றை சுருக்கும்.

(24ஆம் பக்கம் பார்க்கவும்...)




**காணி குத்தகைக்கு தேவை**

யாழ். நகர் அல்லது யாழ். நகருக்கு அண்மையில் காணி மாதாந்த குத்தகைக்கு தேவை. **076 448 1101**

**தேவை**

யாழ். நகரில் முன்னணி சைவ உணவகத்திற்கு பின்வரும் பணிகளிற்கு ஆள்கள் தேவை.

**1) உணவு பரிமாறுபவர்**

**2) துப்புரவு பணியாளர்**

நல்ல சம்பளம், தங்குமிட வசதியுடன் வழங்கப்படும்.

**தொடர்பு- 077 328 7485**

**பதவி வெற்றிடம்**

யாழ்.நகரில் இயங்கி வரும் DSI மொத்த விற்பனை நிலையத்திற்கு எழுது வினைஞர்கள் (Cleark) தேவை (பெண்கள் மட்டும்).விரும்புபவர்கள் தங்களது சுய விபர கோவையை எதிர்வரும் 20.12.2017 இற்கு முன்பாக கிடைக்க கூடியவாறு கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


**சுப்ப சூஸ் 154, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

**பெண் வேலையாள்கள் தேவை**

Babi Fancy house க்கு வேலை பார்ப்பதற்கு பெண் பிள்ளைகள் தேவை . முன் அனுபவம் உள்ளவர்களாகவும் இருத்தல் வேண்டும். கணினியில் கணக்கு பார்க்க தெரிந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும். விரும்பினால் தங்கி நின்று வேலை செய்யலாம் .தங்குமிட வசதிகள் உண்டு. சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். ஆங்கிலம் தெரிந்திருத்தல் வேண்டும்.

**அச்செழு , நீர்வேலி. 077 274 2593, 076 725 0329**

## மரண அறிவித்தல்



### கணபதிப்பிள்ளை வல்லிபுரம்

பொடியவளவு, இடைக்காடு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வல்லிபுரம் நேற்று (11.12.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வபாக்கியத்தின் பாசமிகு கணவரும் கண்மணி (கனடா), பாக்கியம் , மங்கையற்கரசி, கந்தசாமி, செல்வநாயகம் (கனடா), செல்வபாக்கியம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அகிலன் (ஆசிரியர் - யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி), நிருஷா (யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விஜிதா, நளன் ஆகியோரின் அன்பு மாமனும் கேசியனின் அன்புப் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பொடியவளவு,**
**இடைக்காடு, அச்சுவேலி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### மருதப்பிள்ளை முத்துத்தம்பி



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மருதப்பிள்ளை முத்துத்தம்பி பிரான்ஸில் கடந்த (09.12.2017) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மருதப்பிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் பாசமிகுமகனும் கமலாதேவியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற துரை ஐயா மற்றும் வள்ளியம்மை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்றவர்களான இலட்சுமிப்பிள்ளை, ஆசைப்பிள்ளை, பரமேஸ்வரி, வேலுப்பிள்ளை மற்றும் அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரரும் சிவபுத்திரனின் உடன்பிறவாத சகோதரரும் கணேசானந்தன், நித்தியானந்தன், சற்குணானந்தன், யோகநாதன், சிவயோக மலர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜானகி, ஜமுனா, சமினா, லிங்கேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் குகசீலன், ரதீஸ்குமார், தனேஸ் சுதாசினி ஆகியோரின் அன்பு மாமனும் நவியா, இந்துயா, சுபானுயன், கிஷானி, கிறிஸ்னி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.12.2017) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் பிரான்ஸில் (Crematorium Pere Lachaise Paris) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னம்மா கணபதி



பிறப்பு 1924.06.23 இறப்பு 2017.12.11

புதிய செம்மணி வீதி, ஞான வைரவர் கோயிலடி கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா கணபதி நேற்று 11.12.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வார் தெய்வானை தம்பதியரின் அன்புமகளும் கணபதியின் அன்பு மனைவியும் சோமசுந்தரம், தவமணி, பகவதி, செல்வரத்தினம் ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2017) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**புதிய செம்மணி வீதி,**
**கல்வியங்காடு.**

தகவல்:
**குடும்பத்தினர்.**

### திருமதி
### யோகேஸ்வரி சுப்பிரமணியம்



சித்திரமேழி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் பெரியவிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகேஸ்வரி சுப்பிரமணியம் கடந்த(08.12.2017)வெள்ளிக்கிழமை இயற்கை எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் கந்தையா - நேசம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் கமலாஷினி (நோர்வே), கலாறஞ்சினி, அருந்ததி, காலஞ்சென்ற சித்திரானந்தம் (சித்தி) மற்றும் பரமானந்தம், சதானந்தம் (பிரான்ஸ்), றேனுகா (துங்கா லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபாலசிங்கம், பேரின்பநாதன், காலஞ்சென்ற கருணானந்தன் மற்றும் கயல்விழி, இன்பவதனி, கங்காதரன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பெரியவிளான் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பெரியவிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**077 316 6675**
**(பேரன்)**

### திருமதி கனகலட்சுமி கோபாலபிள்ளை

**(ஓய்வு பெற்ற நெசவு ஆசிரியர் (முருங்கன், செம்மண் தீவு)**



இணுவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகலட்சுமி கோபாலபிள்ளை நேற்று (11.12.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை அன்னம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற கோபாலபிள்ளை அவர்களின் அன்புமனைவியும் விக்கிரமசிங்கம் (கிராம சேவையாளர் J/191), விக்கினேஸ்வரி, காலஞ்சென்ற விமலதாசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் சாந்தினி, யோகேஸ்வரி, விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புமாமியும் ஐங்கரன், அபிராமி, வைசாலினி, திவ்யகுமரன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2017) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**கோ. விக்கிரமசிங்கம்**
**(கிராம சேவையாளர் J/191)**

23 ஆம் பக்கத் தொடர்ச்சி.....

அணுவின் அளவில் ஆயிரத்தில் ஒரு பங்கு அளவுக்கே இருக்கும் மிக மிகச் சிறிய இம்மாற்றத்தைக் கைப்பற்றி அளவிடுவது எளியதல்ல.

'லிகோ' இன் சுரங்கப்பாதைகளில் பயணித்த லேசர் ஒளிக்கற்றைகளுக்கு இடையில் மிகச் சிறிய வேறுபாடு தெரியும். இந்த வேறுபாட்டைத்தான் கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று முறையாக கண்டறிந்து அளவிட்டுள்ள தகவலை 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி விஞ்ஞானிகள் வெளிப்படுத்தினர்.

**அலைகளின் தோற்றுவாய்**

அது மட்டுமின்றி அவ்வலைகளின் தோற்றுவாயையும் கணக்கிட்டுள்ளனர். பூமியிலிருந்து 130 கோடி (1.3 பில்லியன்) ஒளியாண்டுகள் தொலை வில் எமது சூரியனைப்போல முறையே 36 மடங்கு நிறையும், 29 மடங்கு நிறையும் கொண்ட இரண்டு கருந்துளைகள் ஒன்றை ஒன்று சுற்றிச் சுழன்று கொண்டிருந்தன. அவை படிப்படியாக நெருங்கி ஒன்றோடொன்று மோதி சூரியனைப் போல 62 மடங்கு நிறை கொண்ட கருந்துளையாக மாறின. அவற்றிலிருந்து வெளியான ஆற்றல் ஈர்ப்பு அலைகளாக பரவின. அதாவது, தொலைதூரத்தில் அண்ணளவாக 130 கோடி ஆண்டுகளுக்கு முன்னால் இரண்டு கருந்துளைகள் ஒன்றோடு ஒன்று இணைந்ததால் வெளியான ஈர்ப்பு அலைகள் ஒளியின் வேகத்தில் பயணித்து கடந்த 2015 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று எமது பூமியைக் கடந்து சென்றன. இந்த நூற்றாண்டின் மிகச் சிறந்த சாதனையாகவும், கண்டுபிடிப்பாகவும் இதனைக் கொண்டாடுகின்றனர் விஞ்ஞானிகள்.

**கருந்துளைகள்**

ஒரு பொருள் வெளியிடும் ஒளி அல்லது பொருளின் மீது பட்டு பிரதிபலிக்கும் ஒளியைக் கொண்டு தான் நாம் எல்லாப் பொருள்களையும் கண்களால் காண்கிறோம். கலிலியோவின் தொலைநோக்கியால் நட்சத்திரங்கள் வெளியிடுகிற கண்ணால் காணும் ஒளியையும், ஒளியை பிரதிபலிக்கும் கோள்களையும் மட்டுமே காணமுடிந்தது.

பின்னர் அறிவியலும், தொழில்நுட்பமும் வளர்ந்து, ஈர்ப்பு விசையால் அதிர்வெண்ணும், அலை நீளமும் மாற்றப்பட்டு இதர மின்காந்த அலைகளான அகச்சிவப்பு, புற ஊதா, நுண்ணலை, ரேடியோ அலைகள், எக்ஸ் கதிர்கள் (ஓசுயல) போன்றவற்றை வெளியிடும் அல்லது பிரதிபலிக்கும் பொருள்களை காணவும், ஆராயவும் முடிந்தது.

**பெருவெடிப்பும் மின்காந்த அலைகளும்**

பெரு வெடிப்பு நிகழ்ந்ததிலிருந்து 3,78,000 ஆண்டுகளுக்கு பின்னர் தான் நாம் காணக்கூடிய ஒளியும், மின்காந்த அலைகளும் தோன்றி பரவ ஆரம்பித்தன.

மின் காந்த அலைகள் தவிர்ந்த வேறு அலைகள் இருக்கும்பட்சத்தில், அவற்றை உணர்ந்து கணக்கிட முடிந்தால், அவற்றைக் கொண்டு கருந்துளைகளையும், முதல் மூன்று லட்சம் ஆண்டுகளின் விண்பொருள்களை காணவும், ஆராயவும் முடியலாம். மின் காந்த அலைகளை தவிர்த்து வேறு அலை ஒன்று இருப்பதை தான் ஐன்ஸ்ட்டின் தனது பொது சார்பியல் கோட்பாட்டில் விளக்கி அதற்கு ஈர்ப்பு அலைகள் எனப் பெயரிட்டார்.

அந்த வகையில் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள ஈர்ப்பு அலைகளின் இருப்பு, இப்பிரபஞ்சத்தை மேலும் புதிய கோணத்தில் ஆய்ந்தறிய உதவி செய்யும். உதாரணமாக, தற்போது கண்டறியப்பட்ட ஈர்ப்பு அலைகளைக் கொண்டு அதன் தோற்றுவாயான கருந்துளை இணைவை கணக்கிட்டுள்ளனர். இந்த ஈர்ப்பலைச் சோதனைகளை மேலும் மேம்படுத்திச் செல்லும் போது, இதுவரை நாம் கண்டிராத விண்பொருள்களை தெரிந்து கொள்ளமுடியும். அது விடை தெரியாத புதிர்களை அவிழ்க்கும்.

இன்றளவிலும் கருதுகோள் நிலையிலேயே உள்ள பெருவெடிப்பின் மூலம் பிரபஞ்சம் தோன்றிய ஆரம்பக் கட்டங்களை தெரிந்து கொள்ள உதவும். எமது ஒட்டுமொத்த பார்வைக் கோணத்தை விரிவும் ஆழ மும் கொண்டதாக மாற்றும் தன்மையுள்ளது இக் கண்டுபிடிப்பு.

நூற்றாண்டுகால தேடலுக்கு விடை கிடைத்து விட்டது, ஆனால் பேரண்ட ஆய்வுகள் புத்தம் புதிய திசையில் முதல் அடியெடுத்து வைக்க தொடங்கி விட்டன.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1423
சீட்டிழுப்பு திகதி 2017.12.11
வெற்றி இலக்கங்கள்
19 21 42 63 G
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 13,415,588/-
Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 103
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.12.11
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 59,435,300/-
வெற்றி இலக்கங்கள்
46 56 66 71 E
Web: www.dlb.lk
அழைப்பு - 0114 824 824, 0112 333 778

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 740
சீட்டிழுப்பு திகதி ▸ 11.12.2017 திங்கட்கிழமை
J 01 24 30 60
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 48,742, 772/-
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2017.12.14 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2967 திகதி 11.12.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
01 08 57 73 W
போனஸ் இல. 14
புதன் கிழமை ஜக்பொட் 33, 074,655/=
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk
ஊதா நிற டிக்கட்டுக்கள் 2017.12.13 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

## மரண அறிவித்தல்

### திருமதி ருக்மணி சரவணபவன் (அப்புச்சி)



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் , வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ருக்மணி சரவணபவன் (11.12.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான முத்தையா செல்லம்மா தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்க ளான அம்பலவாணர் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சரவணபவனின் அன்பு மனைவியும் சிவகாமசுந்தரி காலஞ்சென்ற சிறிகணேசன் ஆகியோரின் அன்புத்தாயாரும் சற்குணலிங்கத்தின் (திரவியம் - Rtd.Eng. R.D.A) அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், குலேந்திரன், சர்வலோக நாயகி ஆகியோரின் அன்புச்சகோதரியும் நிவேகாவின் (பிரதேச சபை, மானிப்பாய்) அன்புபேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2017)செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிந்மய பாரதி பாடசாலை ஒழுங்கை,**
**சுதுமலை தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பரமநாதன்

*(ஓய்வுநிலை முன்னாள் காரியதரிசி - மாவட்ட அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம்,*
*Retired Senior officer - Dep. of Local Goverment)*



உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் 42, பலாலி வீதி, உரும்பிராயைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பரமநாதன் நேற்று (11.12.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**021 223 0909**

## கடும்...

குவரத்தின்போது ஏதாவது தடை ஏற்படுத்தப்பட்டால் அதனை உடனடியாகவே சீர்செய்யும் பொருட்டுப் பொறியியல் பிரிவைச் சேர்ந்த சிலருடன், கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதற்கேற்ப தொடருந்துப் பாதைகள் அனைத்துமே ஒரு வழிப்பாதையாக மாற்றப்பட்டு சவாலுக்கு மத்தியில் இந்தச் சேவை இடம்பெறுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

தொடருந்து திணைக்களத் தைச் சேர்ந்த சில பிரிவுகளின் பணியாளர்கள் கடந்த புதன்கிழமை இரவு தொடக்கம் தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் பயணிகளுக்கான சேவையை வழங்குவதில் தொடருந்துத் திணைக்களம் திண்டாடுகிறது. நாடு முழுவதும் தொடருந்துச் சேவை முடங்கியுள்ள நிலையிலும், கொழும்பிலிருந்து அதிகளவு கிலோமீற்றர்கள் தூரமுடைய வடக்குக்கு யாழ்ப்பாணம் மையத் தரிப்பிடம்வரை குறித்த சேவை இடம்பெறுகிறது.

குளிரூட்டப்பட்ட இந்தத் தொடருந்து கொழும்பிலிருந்து நேற்று அதிகாலை 5.45 மணிக்கு சேவையை ஆரம்பித்து யாழ்ப்பாணத்துக்கு வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து மதியம் 1.45மணிக்கு கொழும்புக்கான சேவையை ஆரம்பித்தது. பயணிகளுக்கான பயணச் சீட்டுகள் தொடருந்தின் உள்ளேயே வழங்கப்பட்டன.

"இந்தத் தொடருந்து சேவை இடம்பெறுவது பயணிகள் பலருக்கும் தெரியாது. அதனால் இன்று (நேற்று) பயணிகளின் எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டது. நாளை (இன்று) பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது" என்று தொடருந்துத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு சாரதியை மட்டும் அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையே தொடருந்து சேவையை வழங்கிய தொடருந்து திணைக்கள மூத்த அதிகாரியின் துணிச்சலையும் சேவையையும் அதில் பயணித்த பலரும் பாராட்டியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் அவர் பாராட்டப்படுவதை அவதானிக்க முடிந்தது.

தொடருந்துத் திணைக்கள ஊழியர்களின் பணிப் புறக்கணிப்பு தொடர்ந்தாலும் மறுபுறம் இந்தச் சேவை தொடரும் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

தொடருந்துப் பணியாளர்களின் திடீர் பணிப்புறக்கணிப்பால் கொழும்புக்குப் பயணம் மேற்கொள்ளவிருந்த பயணிகளும், அங்கிருந்து திரும்பிவரவிருந்த பயணிகளும் முற்பதிவு செய்திருந்த ஏராளமானோரும் பாதிக்கப்பட்டனர். இதுதவிர, தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவைகளுள் ஒன்றாக அறிவித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அரசிதழில் கையெழுத்திட்டுள்ளார்.

(உ-4,8)

## நடு...

வகையில் வீதியின் குறுக்காக நடுவீதியில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்தியுள்ளனர். அதில் ஒன்றின்மேல் கேக் வைத்து வெட்டிப் பிறந்த நாள் கொண்டாடவே தாம் அந்த இடத்தில் நிற்பதாக விசாரணையில் கூறினர்.

அவர்களிடம் மேலும் விசாரணை நடத்தப்பட்டது. கேக் வெட்டுவற்கு என்றுகூறி கூரிய முனையுடைய அளவில் பெரிய கத்தியை அவர்களில் ஒருவர் கையில் வைத்திருந்தார். குறித்த இளைஞர்களுக்கும் வாள் வெட்டு குழுக்களுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் 6 பேரையும் கைது செய்தோம்" அதுமட்டுமன்றி போக்குவரத்தைத் தடை செய்யும் வகையில் அவர்கள் செயற்பட்டுள்ளனர். விசாரணை நடத்தப்படுகிறது" என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் 17 மற்றும் 18 வயதுடையவர்கள். தற்போது பொலிஸ் நிலையத்தில் வைத்து மேலதிக விசாரணை நடத்தப்படுகிறது என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-37)

## வேட்புமனுத்...

வித்ததாவது:

வேட்பு மனு தாக்கல் ஆரம்பிக்கும் நாள் முதல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கட்டளை சட்டத்தின் கீழ் பொலிஸார் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். முதல் கட்ட வேட்பு மனுத் தாக்கல் இடம்பெறும் 93 உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் பெரும்பாலும் இறுதி நாளான 14ஆம் திகதி வேட்பு மனுத் தாக்கல் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அன்றைய தினமும் இந்தக் காலப் பகுதியிலும் முதல் கட்டமாக 10 ஆயிரம் பொலிஸார் அந்தந்தப் பகுதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்ட வேட்பு மனுத் தாக்கலின்போது அந்தப் பகுதிகளுக்கு வேறாகப் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

இன்று ஜி.சி.ஈ. சாதரண தரப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன. அது எதிர்வரும் 21ஆம் திகதி வரை இடம்பெறும். இந்தக் காலப் பகுதியில் பரப்புரை நடவடிக்கை ஊடாகவோ, வேறு நடவடிக்கைகள் ஊடாகவோ பரீட்சைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு நபருக்கும் எதிராக கடுமையாகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துவோர் தகுதி தராதரம் பாராது கைது செய்யப்படுவர்.

இம்முறை ஒலிபெருக்கி பயன்படுத்துவதற்கான அனுமதி தேர்தல் பரப்புரைக் கூட்டம் நடைபெறும் இடத்துக்கு மட்டுமே வழங்கப்படும். அந்த இடம் தவிர ஏனைய இடங்களில் மெகா மைக்ரோபோன், ஒலிபெருக்கி உள்ளிட்ட ஒலியை பெருக்கும் எந்த சாதனங்களையும் பயன்படுத்த முடியாது.

வாகனங்களில் ஒலிபெருக்கிகளைக் கட்டிக் கொண்டு பரப்புரை செய்யவும் முடியாது. அதற்கு எந்தவகையிலும் அனுமதி வழங்கப்படாது.

பரப்புரைக் கூட்டத்துக்கு ஒலி பெருக்கி பாவனைக்கான அனுமதியை வழங்கும்போது கடும் நடைமுறைகள் இருக்கும். எமது அதிகாரிகள் முதலில் பரப்புரைக் கூட்டம் நடைபெறும் இடத்தை பார்வையிடுவர். அந்த இடம் சாதாரண தர பரீட்சை இடம்பெறும் நிலையங்களுக்கு அண்மையில் இருக்கவே கூடாது. அவ்வாறு இருப்பின் அனுமதி வழங்கப்படமாட்டாது. குறித்த பரப்புரை இடங்களில்கூட ஒலி பெருக்கிச் சத்தமானது வெளியில் செல்லாதவாறு அமையப்பெற்றிருத்தல் வேண்டும். ஒலிபெருக்கிகள் பரப்புரைப் பிரதேசத்தை நோக்கியதாக மட்டுமே பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

திங்கள் முதல் வியாழன் வரை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரையும், வெள்ளி, சனிக்கிழமைகளில் காலை 6 மணி முதல் மறு நாள் அதிகாலை 1 மணி வரையிலும் ஞாயிறு தினங்களில் காலை 6.00 மணி முதல் மறு நாள் அதிகாலை 12.30 மணி வரையிலுமே ஒலி பெருக்கி பயன்படுத்த அனுமதிக்கப்படும்.

தேர்தல்கள் தொடர்பான முறைப்பாடுகள் உள்ளிட்டவற்றை மேற்கொள்ள நாடளாவிய ரீதியில் உள்ள 42 பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கி பொலிஸ் தேர்தல்கள் காரியாலயம் நேற்று முதல் இயங்க ஆரம்பித்துள்ளது. பொலிஸ் தலைமையகத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் தேர்தல்கள் செயலகம் ஊடாக இந்த 42 காரியாலயங்களும் நிர்வகிக்கப்படும். தேர்தல்கள் தொடர்பில் தகவல்களை வழங்க பொலிஸ் ஊடகப் பேச்சாளருக்கு மட்டும் உத்தியோகபூர்வமாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (உ-5,31)

## ஓ.எல்...

ளுக்கு உட்பட்டு அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பரீட்சை சட்டத்தை மதித்து அனைத்துப் பரீட்சாத்திகளும் செயற்பட வேண்டும். உரிய நேரத்தில் மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளிப்பதற்கு பெற்றோர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (உ-5,31)

## சங்கானை...

புளொட்டும் ஆட்சி அமைப்பது என்றும், சங்கானைப் பிரதேச சபையில் முதல் இரண்டு ஆண்டுகள் புளொட் அமைப்பும், அடுத்த இரண்டு ஆண்டுகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் ஆட்சி அமைக்கும் என்ற அடிப்படையில் ஆசனப் பங்கீடுகள் செய்யப்பட்டிருந்தன.

புளொட் அமைப்புடன் சங்கானைப் பிரதேச சபையில் ஆட்சி பங்கீடு செய்யப்பட்டமை தொடர்பில் கட்சிக்குள்ளும் பொதுமக்கள் மத்தியிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தது. மீள நேற்று ஆராயப்பட்டது. இதனையடுத்து, சங்கானைப் பிரதேச சபை முழுமையாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ-5,101)

## கூட்டமைப்பின்...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினராகவுள்ள அஸ்மின் இது தொடர்பில் தெரிவித்ததாவது:

முசலிப் பிரதேச சபையினையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி கொள்ளவேண்டும் என்றே அங்கிருக்கும் மக்கள் விருப்பம் தெரிவிக்கின்றார்கள். அரசியல் வியாபாரிகளின் கைகளில் முசலி பிரதேச சபையினை இனிமேலும் வழங்குவதற்குத் தயாராக இல்லை என்று அந்தப் பகுதி மக்கள் கூறுகின்றார்கள்.

"முஸ்லிம் கட்சிகள் முசலிப் பிரதேச சபையினை இலக்கு வைத்து காய்நகர்த்தல்களை மேற்கொண்டு வருகின்றன. பதவிகளில் இருக்கின்றவர்களை பதவிவிலகச் செய்து முசலிப் பிரதேச மக்களுக்கு குறித்த பதவிகள் வழங்கப்படுகின்றன. அத்தகைய பதவிகளால் எதுவுமே செய்ய முடியாது என்று அந்தப் பதவிகளைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு நன்கு தெரியும். எம்மை வைத்து அரசியல் வியாபாரம் செய்கின்றவர்களை விடவும், எமது அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தருபவர்களிடம் சபையைக் கையளிப்பதே சிறப்பானது" என்றும் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வடக்கிலே அரசியல் செய்கின்ற முஸ்லிம் கட்சிகளுக்கு இம்முறை வடக்கு முஸ்லிம் மக்கள் சரியான பாடமொன்றைப் புகட்டுவார்கள் என்றும் நான் எதிர்பார்க்கின்றேன் - என்றார்.

(உ-5,101)

## யாழ்ப்பாணத்தில்...

போட்டியிடுவதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும், மக்கள் விடுதலை முன்னணியும் நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தின.

மன்னார் மாவட்டத்தில் பொதுமக்கள் முன்னணி அனைத்துச் சபைகளிலும் போட்டியிடுவதற்கு நேற்றுக் கட்டுப் பணம் செலுத்தியுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி நானாட்டான் பிரதேச சபையில் போட்டியிடுவதற்கு கட்டுப் பணம் செலுத்தியுள்ளது. (உ-5)

## பாடசாலை....

அவரது குடும்பத்தினருக்கும் இடையிலான தனிப்பட்ட விவகாரமாக இருக்கிறது. "நுளம்புச் சீலை கட்டிவிட்டு உறங்குமாறு பெற்றோர் மாணவிக்குக் கூறியுள்ளனர் என்றும் மாணவி அவ்வாறு செய்யவில்லை என்றும் அதனால் பெற்றோர் மாணவிக்கு அடித்தனர் என்றும் அதனாலேயே மாணவி அவ்வாறு முடிவெடுத்தார்" என்று இறப்பு விசாரணையின் பின்னர் இறப்புக்கான காரணம் தெரிவிக்கப்பட்டது.

அவரது வீட்டு அறையில் குறித்த மாணவி தூக்கில் தொங்கியபோது வீட்டுக்காரர் அவரை மீட்டு உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை மேற்கொண்டபோது அவர் அதற்கு முன்னரே உயிரிழந்துவிட்டமை தெரியவந்தது. பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் இறப்பு விசாரணை மேற்கொண்டனர். சடலம் நேற்றுப் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (4-8)

## முதல்...

தமை தொடர்பிலேயே அந்த முறைப்பாடு கிடைக்கப் பெற்றதாகவும், சம்பவம் தொடர்பில் ஆரச்சிகட்டுவ பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(உ-5,31)

## ஆசனப்பங்கீட்டில்...

தனித்துப் போட்டியிடுவது சம்பந்தமாகத் தமிழ் முற்போக்குக் கூட்டணி தற்போது ஆராய்ந்து வருகின்றது என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி தனித்துப் போட்டியிட வேண்டியதன் அவசியத்துவத்தைக் கூட்டணியின் இணைத்தலைவர்களான அமைச்சர் பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஷ்ணன் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்களிடம் தலைவரான அமைச்சர் மனோ கணேசன் எடுத்துரைத்துள்ளார் என்று தெரியவருகின்றது.

"தமிழ் முற்போக்குக் கூட்டணி பலமாக இருக்கின்றது. எனவே, கட்சிகளிடம் கெஞ்சவேண்டியதில்லை. எமது பலத்தை வெளிப்படுத்துவதற்குரிய சந்தர்ப்பமாகவும் இது இருக்கின்றது. ஆகவே, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அனைத்துத் தொகுதிகளிலும் (தமிழ் முற்போக்குக் கூட்டணி போட்டியிட உத்தேசித்துள்ள தொகுதிகள்) தனித்துக் களமிறங்க வேண்டும்" என்பதே மனோவின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

எனினும், தொழிலாளர் தேசிய முன்னணி, மலையக மக்கள் முன்னணி ஆகியன கூட்டாகக் பயணிக்க வேண்டும் எனக் கூறிவருவதால் இதுவிடயத்தில் உறுதியானதொரு முடிவை எடுக்கமுடியாத நிலை கட்சித் தலைமைக்கு ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, இறுதிநேரத்தில் இணக்கப்பாடு ஏற்பட்டு, ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தின் கீழ் தமிழ் முற்போக்குக் கூட்டணி போட்டியிட்டாலும் கொழும்பு மாவட்டத்தில் தனித்தே போட்டியிடும் என்று மேலும் தெரியவருகிறது. (4)

## ரயில்...

போராட்டத்தால் வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள், பருவ காலச்சீட்டு மூலமாக பயணம் மேற்கொள்பவர்கள் என்று பலதரப்பினரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர். தொடருந்தில் முன்கூட்டியே பதிவுசெய்தவர்களும், பருவகாலச்சீட்டு உள்ளவர்களும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகளில் பயணம் மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், அந்த நடைமுறை உரியவகையில் பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது.

தொடருந்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவித்து அரசிதழ் வெளியிடப்பட்டுள்ள போதிலும் போராட்டம் தொடரும் என்று தொழிற்சங்கங்கள் கூறியுள்ளன. எனினும், நேற்று கடமைக்குத் திரும்பாதவர்கள் பதவி விலகியவர்களாகவே கருதப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது.

**மாணவர்களுக்கு**
**சிறப்புத் திட்டம்**

ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைக் கருத்திற்கொண்டு சிறப்புப் போக்குவரத்துத் திட்டங்களை நடைமுறைப்படுத்த போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது

அதற்கமைய போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பேருந்துகள் அதிகளவில் இன்று சேவையில் ஈடுபடுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. தனியார் போக்குவரத்து சங்கங்களும் மாணவர்களுக்கு ஆதரவுக்கரம் நீட்ட முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கல்வி அமைச்சரின்**
**கோரிக்கை**

தொடர்ச்சியாகதொடருந்து ஊழியர்களின் போராட்டம் நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பணிப் புறக்கணிப்பு காரணமாக சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை நேரத்துடன் அனுப்பிவைக்குமாறு கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பெற்றோர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். மாணவர்களுக்கு வாழ்த்துகளையும் அவர் தெரிவித்துள்ளார்.

**வெறிச்சோடிப்போயுள்ளன**
**தொடருந்து நிலையங்கள்**

தொடருந்து ஊழியர்களின் வேலைநிறுத்தம் காரணமாக பொதுப் பிரயாண சேவைகள் அனைத்தும் தடைப்பட்டுள்ள நிலையில் முதன்மையான தொடருந்து நிலையங்களும் வெறிச்சோடிப்போயுள்ளன. குறிப்பாக, கொழும்பு, கோட்டை, மருதானை, தெமட்டகொட, மாத்தறை, கண்டி உள்ளிட்ட தொடருந்து நிலையங்கள் வெறிச்சோடியே காணப்பட்டுள்ளன.

இந்தநிலையில், கொழும்பு கோட்டை தொடருந்துநிலையத்தை நோக்கி ஏனைய பகுதிகளிலிருந்து 11 தொடருந்துகள் நேற்று வருகை தந்ததாகவும், கோட்டை தொடருந்து நிலையத்திலிருந்து ஒரு தொடருந்து மாத்திரமே வடதிசை நோக்கி பயணித்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும் நேற்றைய தினமும் 250 தொடருந்துப் போக்குவரத்துச் சுற்றுக்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன.

**ஓய்வு பெற்றவர்களை**
**உடன் வருமாறு அழைப்பு**

ஓய்வுபெற்ற தொடருந்து இயந்திர சாரதிகள், நிலைய பொறுப்பதிகாரிகள், கண்காணிப்பாளர்கள் ஆகியோரை தொடருந்து தலைமையகத்துக்கு வருகை தருமாறு அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள சேவையாளர்களுக்கு நேற்றுவரையில் அரசு விடுத்திருந்த காலக்கெடு முற்றுப்பெற்றுள்ள நிலையிலேயே ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு இவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், தற்போது தொடருந்து சேவை அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக்கப்பட்டுள்ளது. நேற்றுவரையில் சேவைக்கு வராதவர்கள்வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் என்று அறிவித்துக் கடிதங்கள் மூலமாக அறிவிக்கவுள்ளதாக பிரதி அமைச்சர் அசோக அபேசிங்க அறிவித்துள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

(4)

# றொக்ஸ், இளைஞர் அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், டிசெ. 12
உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் சென். றொக்ஸ், திக்கம் இளைஞர் அணிகள் வெற்றிபெற்றன.
குறித்த கழக மைதானத்தில் இந்த ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்மையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் சென். றொக்ஸ் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
(ம-23)



# எவர்கிறீன் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், டிசெ. 12
மன்னார் பெரியகமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்திய கபடித் தொடரில் மன்னார் பெரியகமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழக 'ஏ' அணி சம்பியனானது.
குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பெரியகமம் எவர்கிறீன் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து பருத்தித்துறை கொட்டடி துள்ளுமீன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் மன்னார் பெரியகமம் எவர்கீறின் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 29:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.
(ம-23)

# கலைமதி கழகம் போராடி வென்றது

யாழ்ப்பாணம், டிசெ. 12
சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் போராடி வெற்றிபெற்றது கலைமதி அணி.
நியூட்டனின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றது.
(ம-23)

## குமரநகர் அணி போராடி வெற்றி


யாழ்ப்பாணம், டிசெ. 12
நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் லீக் முறையிலான தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் குமரநகர் அணி வெற்றிபெற்றது.
சென். றொக்ஸ் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இணுவில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் கைதடி குமரநகர் விளையாட்டுக் கழக அணி 4:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம23)

## யங்கம்பன்ஸ் அபார வெற்றி

சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி அபார வெற்றிபெற்றது.
நியூட்டனின் மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து சிறி அம்பாள் அணி மோதியது. இந்த ஆட்டத்தில் 5:2 என்ற கோல் கணக்கில் யங்கம்பன்ஸ் அணி வெற்றிபெற்றது. (ம-23)

# செல்சி அணிக்கு அதிர்ச்சித் தோல்வி

இங்கிலாந்துகால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் செல்சி அணி அதிர்ச்சித் தோல்வி கண்டது.
செல்சியை எதிர்த்து வெஸ்ட்ஹாம் யுனைற்ரெட் மோதியது. ஆட்டத்தின் 6ஆவது நிமிடத்தில் யுனைற்ரெட்டின் சார்பாக முதல் கோல் பதிவானது. அதுவே முதல் பாதியின் ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யுனைற்ரெட். நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய செல்சிக்கு இந்தத் தோல்வி அதிர்ச்சித தோல்வியாக அமைந்தது. (ம)



## இன்றைய மோதல்கள்

*யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்*
வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஏபிசி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண் சையின் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

*சென். றொக்ஸ் வி.க. தொடர்*
நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் லீக் முறையிலான தாச்சித் தொடரின் ஆட்டங்கள் நவாலி சென். றொக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளங்கதிர் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தென்றல் விளையாட்டுக் கழக 'பி' அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வைகறை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
(ம-23)




# வெற்றியை நோக்கி நியூசிலாந்து அணி

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெறக்கூடிய வாய்ப்புக்களை அதிகம் தோற்றுவித்துள்ளது நியூசிலாந்து அணி.
ஹமில்டன் மைதானத்தில் கடந்த 9ஆம் திகதி ஆரம்பித்து நடைபெற்று வருகிறது இந்த ஆட்டம். நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி சகல இலக்குகளையும் இழந்து 373 ஓட்டங்களைக் குவித்தது.
பந்துவீச்சில் கபிரியேல் 4 இலக்குகளையும், றோச் 3 இலக்குகளையும், கம்மின்ஸ் 2 இலக்குகளையும், ரெய்பர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 8 இலக்குகளை இழந்து 215 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரெய்பர் 22 ஓட்டங்களுடனும், கம்மின்ஸ் 10 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கம்மின்ஸ். கபிரியேல் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். 221 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது மேற்கிந்தியத் தீவுகள். பிரீத்வைட் 66 ஓட்டங்களையும், டவ்ரிச் 35 ஓட்டங்களையும், ஹெட்மயர் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.
152 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த நியூசிலாந்து அணி, 8 இலக்குகளை இழந்து 291 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. ரெய்லர் ஆட்டமிழக்காமல் 107 ஓட்டங்களையும், வில்லியம்சன் 54 ஓட்டங்களையும், சான்நெர் 26 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் கம்மின்ஸ் 3 இலக்குகளையும், கபிரியேல், சேஸ் இருவரும் தலா 2 இலக்குகளையும், ரெய்பர் ஓர் இலக்கையும் கைப்பற்றினர். மேற்கிந்தியத் தீவுகளுக்கு இலக்காக 444 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 30 ஓட்டங்களைப் பெற்றுள்ளது மேற்கிந்தியத் தீவுகள். ஆட்டத்தின் நான்காம் நாள் இன்றாகும்.
(ம)

# டோனியின் விளையாட்டைப் புகழ்கிறார் லக்மல்



இலங்கைக்கு எதிரான முதலாவது ஒருநாள் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்த போதிலும், டோனியின் தனிநபர் பெறுபேற்றை வெகுவாகப் பாராட்டினார் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் சுரங்க லக்மல்.

தர்மசாலாவில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஒரு கட்டத்தில் வெறும் 29 ஓட்டங்களுக்கு இந்திய அணி 7 இலக்குகளை இழந்திருந்தது. மறுமுனையில் போராடிக் கொண்டிருந்த டோனி அரைச்சதம் கடந்து அணியை 100 ஓட்டங்களைப் பெறவைத்தார். அவர் 65 ஓட்டங்களைப் பெற்றார். இதையடுத்தே டோனிக்குத் தனது பாராட்டத்தைத் தெரிவித்தார் லக்மல்.

“இந்தியா ஒரு கட்டத்தில் 29 ஓட்டங்களுக்கு 7 இலக்குகளை இழந்திருந்தது. அப்போது நாங்கள் அவர்களை 40 ஓட்டங்களுக்குள் சுருட்டி விடுவோம் என்று நினைத்தோம். ஆனால், டோனி மிகவும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். அவரை மட்டும் விரைவில் வெளியேற்றியிருந்தால், நாங்கள் இந்தியாவை மோசமான ஓட்டங்களுக்குள் சுருட்டியிருப்போம். டோனி ஒரு உலகத்தரம் வாய்ந்த வீரர். இதற்கு முன்பும் இதுபோன்ற சூழ்நிலையில் அவர் சிறப்பாக விளையாடியுள்ளார். எங்களுடைய எண்ணம் ஆட்டத்தில் வெற்றி பெறுவதுதான்” என லக்மல் மேலும் தெரிவித்தார்.

இந்த ஆட்டத்தில் லக்மல் ஆட்டநாயகனாகத் தெரிவாகியிருந்தார். அவர் 10 பந்துப்பரிமாற்றங்களை வீசி 4 ஓட்டமற்ற பந்துப்பரிமாற்றங்கள் உள்ளடங்கலாக வெறும் 13 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 இலக்குகளைக் கைப்பற்றியிருந்தார். (ம)



## டோனி 16,000

பன்னாட்டு கிரிக்கெட் அரங்கில் அனைத்து வகை ஆட்டங்களிலுமாகச் சேர்த்து 16 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்தார் இந்திய அணியின் நட்சத்திர வீரரான டோனி.

இலங்கைக்கு எதிராக நேற்றுமுன்தினம் பெற்ற 65 ஓட்டங்களுடன் சேர்த்து டோனி இதுவரை 16 ஆயிரத்து 48 ஓட்டங்களைச் சேர்த்துள்ளார். இதன்மூலம் இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் சங்கக்காரவுக்கு அடுத்ததாக அதிக ஓட்டங்களைக் குவித்த வீரராக டோனி உள்ளார். டோனி இதுவரை 17 ஆயிரத்து 840 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். (ம)

## இரண்டாவது ஆட்டம் நாளை

இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாளை இடம்பெறவுள்ளது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது. இந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. மொகாலியில் பகலிரவு ஆட்டமாக இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் இரண்டு ஆட்டங்களே எஞ்சியுள்ளன. இந்த இரண்டு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே இந்திய அணியால் கிண்ணம் வெல்ல முடியும் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)





## வில்லாரியலை தோற்கடித்தது பார்சிலோனா

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பார்சிலோனா அணி வெற்றிபெற்றது.

பார்சிலோனாவை எதிர்த்து வில்லாரியல் அணி மோதியது. இரண்டு அணிகளின் வீரர்களினதும் சிறந்த ஆட்டத்துக்கு ஏற்ப கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 72ஆவது நிமிடத்தில் சுவாரஸ் பார்சிலோனாவின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 83ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பார்சிலோனா. (ம)

## பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் தலைவராக சகிப் அல் ஹசன்

பங்களாதேஷ் டெஸ்ட் அணியின் தலைவராக சகிப் அல் ஹசன் நியமிக்கப்பட்டார்.

அணித் தலைவராகச் செயற்பட்டுவந்த ரகிம் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

பங்களாதேஷ் அணி அண்மையில் தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு படுதோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் ரகிம் சிறப்பாகச் செயற்படவில்லை. இதையடுத்தே அவர் பதவி இறக்கம் செய்யப்பட்டார். ரி-20 ஆட்டங்களுக்குத் தலைவராகச் செயற்பட்டுவந்த சகிப் அல் ஹசன் டெஸ்ட் ஆட்டங்களுக்கும் தலைவராக நியமிக்கப்பட்டார். (ம)

## இன்டர் மிலன் – ஜுவென்டாஸ் அணிகளின் ஆட்டம் சமநிலை

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில், நேற்றுமுன்தினம் நடைபெற்ற இன்டர் மிலன், ஜுவென்டாஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இந்த ஆட்டத்தில் ஜுவென்டாஸின் மரியோ மண்டுஸிக்கின் உதையொன்று கோல் கம்பத்தில் பட்டிருந்ததுடன், இவரின் பல உதைகளை இன்டர் மிலனின் கோல் காப்பாளர் சமிர் ஹன்டனோவிக் தடுத்திருந்தார். நடப்பு பருவகாலத்தில் அதிக கோல்களைப் பெற்றவரான இன்டர் மிலனின் அணித்தலைவர் மௌரோ இகார்டியின் உதையொன்றை ஜுவென்டஸின் கோல் காப்பாளர் தடுத்திருந்ததுடன், வேறு எந்த கோல் பெறும் சந்தர்ப்பங்களை அவர் உருவாக்கியிருக்கவில்லை. (ம)



## பயிற்சி ஆட்டங்கள் எவையும் இல்லாமல் தென்னாபிரிக்காவை எதிர்க்கிறது இந்தியா

தென்னாபிரிக்காவுக்கு எதிராக இந்திய அணி விளையாடவிருந்த பயிற்சி ஆட்டங்கள் கைவிடப்பட்டதை அடுத்து பயிற்சி ஆட்டங்கள் இல்லாமல் தென்னாபிரிக்க அணியை எதிர்கொள்கிறது இந்திய அணி.

இலங்கைக்கு எதிரான தொடர் முடிந்த பின்னர் ஒருசில நாள்கள் இடைவெளியின் பின்னர் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் செய்யவுள்ளது. இரு தொடர்களுக்கும் இடையிலான ஓய்வுகாலம் போதாது என்று தெரிவித்து போர்க்கொடி தூக்கினார் இந்திய அணியின் தலைவர் கோக்லி. இதனால் அவருக்கு இலங்கைக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இருந்து ஓய்வு கொடுக்கப்பட்டது. தற்போது பயிற்சி ஆட்டமும் கைவிடப்பட்டுள்ளது. இதனால் இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்ல ஓரிரு நாள்கள் தாமதமாகலாம் என்றும் கருதப்படுகிறது. (ம)

# இங்கிலாந்து வீரர்கள் மீது சகவீரர் மொயின் காட்டம்

மதுபோதையில் தகாத நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்காக இங்கிலாந்து வீரர்கள் அடுத்தடுத்து ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற நிலையில் சக வீரர்கள் மீது காட்டமாகக் கருத்துத் தெரிவித்துள்ளார் மொயின் அலி.

“இங்கிலாந்து வீரர்கள் மீது அண்மைக்காலமாக முன்வைக்கப்படும் கருத்துக்களை இளம் வீரர்கள் பார்த்துக்கொண்டிருப்பார்கள். அனைத்துச் செய்திகளையும் அறிவார்கள். இதனால் எம்முடைய சிறந்த பழக்க வழக்கங்களை வெளிப்படுத்துவது முக்கியமானது. ஆட்டங்களில் உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பதற்காக இளம் வீரர்களுக்கு நாம் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். இதுபோன்ற தேவையில்லாத விஷயங்கள் அவர்களைத் திசை திருப்ப வாய்ப்பாக அமைந்துவிடும். இங்கு ஏராளமான குடும்பங்கள் தற்போது உள்ளன. நாம் விளையாட்டின் மீதுதான் கவனம் செலுத்த வேண்டும். என்னைப் பொறுத்தவரையில், நான் இரவு விடுதிக்கு செல்வதை விரும்புவதில்லை. நாம் அனைவரும் வளர்ந்த மனிதர்கள். எப்படி நடந்த கொள்ள வேண்டும் என்று தெரிந்து கொள்ள வேண்டும்” என்று மொயின் அலி மேலும் தெரிவித்தார்.

இரவு விடுதியொன்றில் நபரொருவருடன் கைகலப்பில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் ஸ்ரோக்ஸ் இங்கிலாந்து அணியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். இதனால் நடைபெற்றுவரும் ஆஷஸ் தொடரில் அவர் இல்லாமலேயே இங்கிலாந்து அணி விளையாடி வருகிறது. மற்றொரு வீரரான டக்கெட் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கோக்லி அனுஸ்கா திருமணம் நேற்று நடந்தது

இந்திய அணித் தலைவர் கோக்லியும், பிரபல நடிகை அனுஸ்கா சர்மாவும் நேற்றுத் திருமணம் செய்து கொண்டனர். ஊடகங்கள் கணித்திருந்தமையைப் போன்று இத்தாலியில் இவர்களின் திருமணம் நடைபெற்றது.

இலங்கைக்கு எதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் இருந்து கோக்லி விலகினார். இதனால் அவருக்கு சுமார் 20 நாள்கள் வரையில் ஓய்வு கிடைத்தது.

இந்த ஓய்வுகாலத்தில் அவர் அனுஸ்காவைதிருமணம் செய்யவுள்ளார் என்றும் இவர்களின் திருமணம் இத்தாலியில் நடைபெறவுள்ளது என்றும் எதிர்வு கூறப்பட்டது. இதை அனுஸ்காவின் தரப்பில் இருந்து மறுக்கப்பட்டது. எனினும் தொடர்ந்து செய்திகள் வந்தவண்ணமே இருந்தன. இந்த நிலையில் ஊடகங்கள் தெரிவித்ததைப் போன்று இத்தாலியில் இவர்களின் திருமணம் நடைபெற்றது. (ம)





# றொனால்டோவால் மெஸ்ஸியை நெருங்குவது சாத்தியம் இல்லை

## இப்படிச் சொல்கிறார் ராகிடிக்

நடப்பு வருடத்தின் சிறந்த வீரருக்கான விருது, தங்கப்பந்து விருது ஆகியவற்றை வென்றவரான றொனால்டோவை, மெஸ்ஸியுடன் ஒப்பிட்டு றொனால்டோ சிறந்த வீரர் அல்லர் என்று தெரிவித்தார் ராகிடிக்.

தங்கப்பந்து விருதை வென்றதன் பின்னர் உரையாற்றுகையில் றொனால்டோ, ‘என்னைவிடச் சிறந்த வீரர் என்று எவரையும் கருதவில்லை’ என்று தெரிவித்திருந்தார். இதற்குப் பதிலடியாகவே ராகிடிக் இவ்வாறு தெரிவித்தார் என்று கருதப்படுகிறது.

‘என்னுடைய கருத்து என்னவெனில், றொனால்டோ சிறந்த கால்பந்து வீரர் விருதை வென்றிருக்கலாம் அதற்காக வாழ்த்துகிறேன். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் மெஸ்ஸி தனிச்சிறப்பு வாய்ந்த கால்பந்து வீரர், தன்னிகரற்றவர். முதல்தர வீரர் என்று ஒருவர்தான் இருக்க முடியும். அது மெஸ்ஸிதான். அவருக்குப் பின்னால் உள்ளவர்களெல்லாம்



அவருடன் இணைய விரும்புவது துரதிர்ஷ்டமே’ என ராகிடிக் மேலும் தெரிவித்தார். (ம)

**விற்பனைக்கு**

Hero Pleasure - சிவப்பு - முதற்பதிவு - 2015
BBT தொடரிலக்கம் - தனிப்பாவனை - 18000 Km ஓடிய மோட்டார் சைக்கிள்.
விலை - **140,000/-**
075 082 4530

**வேலையாள்கள் தேவை**

213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
**“லிங்கன் கிறீம் ஹவுஸ்’**
1) கொத்து றொட்டி, றொட்டிதயாரிப்பவர்.
2) கிளினிங் வேலை (ஆண், பெண்)
3) சிட்டை எழுதுனர் (Bill clerk)
சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.
**“ நிறுவனர் ”**
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**

# 4 வருடங்களில் 306 ஆட்டங்கள்

## இந்திய அணியின் அட்டவணை



2019ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இந்திய அணி ஒட்டுமொத்தமாக 306 ஆட்டங்களில் விளையாடவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை பெரியளவில் இருந்தாலும், கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் குறை வாகவே உள்ளது. ஆனால் இந்த 306 ஆட்டங்களில் 81 ஆட்டங்கள் இந்திய மண்ணில் நடைபெறவிருக்கின்றன இது கடந்த அட்டவணையை விட 30 ஆட்டங் கள் அதிகமாகும். அதேநேரம் இந்திய அணி முதன் முறையாக ஆப்பானிஸ்தா னுக்கு எதிராக இருதரப்புத் தொடரில் களமிறங்க வுள்ளது. (ம)

**மரண அறிவித்தல்**



**திருமதி கனகம்மா தியாகராசா**

கருங்காலி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், கூமாங்குளம், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா தியாகராசா நேற்று (11.12.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசாவின் அன்புமனைவியும் காலஞ்சென்ற மனோரஞ்சிதமலர் மற்றும் குறிஞ்சிராஜா ஆகியோரின் அன்புத்தாயாரும் இராஜகுமாரன், பாலகுமாரி ஆகியோரின் மாமியும் லக்சிகா, கிருபாகரன், யாதவன், கஜானி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2017) செவ்வாய்க்கிழமை நடைபெற்று பி.ப 2 மணியளவில் கூமாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வவுனியா**
**077 019 8637**

**தகவல்:**
**தி. குறிஞ்சிராஜா**

# இங்கிலாந்து வீரர்களின் மதுப்பாவனை நகைச்சுவைக்குரிய விடயம் அல்ல

## ஆஸ்திரேலியப் பயிற்சியாளர் கடும் கருத்து

இங்கிலாந்து வீரர்களின் மதுப்பாவனை நகைப்புக்கு உரிய விடயம் அல்ல என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் லீமன்.

“நான் இவற்றையெல்லாம் கடந்து வந்துள்ளேன். எனவே இதைப் பரிகாசம் செய்வது சரியல்ல. எமது கிரிக்கெட் வாழ்க்கை முழுதும் இத்தகைய சூழ்நிலைகளை நாமே சந்தித்திருக்கிறோம். எங்களைப் பொறுத்தவரை இங்கிலாந்து அணியினரின் புறச்செயல்களைப் பற்றி கவலையில்லை. இங்கிலாந்து நல்ல அணி, அவர்களிடம் சில அபாயகரமான வீரர்கள் உள்ளனர். ஆனால் இங்கிலாந்து வீரர்களின் மதுப் பாவனையை நகைச்சுவைக்குரிய விடயமாக மட்டும் எடுத்துவிட இயலாது” என்று லீமன் மேலும் தெரிவித்தார். (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.